PARENTS'
On raising children from crib to college
STEWART MACPHERSON, LEWIS HASTINGS, C. B. FRY
STRAND
ONE SHILLING AND THREEPENCE
BEAUTY
cold comfort issue
Caravan
Collier
BEGUM
THE
ASTROLO
SWATANT
MODERN
ఆనందవాణి
Republi
SHANKA

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

அருள் வசனம்

குதிரைகளை அடக்கிப் பழக்குவதைப்போல எவன் ஆசையை அடக்கினவனோ, எவன் அகங்காரத்தைத் துறந்தவனோ, எவன் அசுத்தத்தினின்றும் அகன்றவனோ அவனைக் கண்டு தேவர்களும் பொருமை அடைகிறார்கள். பகை நிரம்பிய இந்த உலகில் ஒரு பகையுமின்றிப் பரிபூரணானந்தத்தில் நாங்கள் வாழ்கிறோம்; பகை நிரம்பிய மனிதரிடையே பகையின்றி நாங்கள் வசிக்கிறோம். நோயாளிகளிடையே தேகசுகம் உடையவர்களாகப் பரிபூரணானந்தத்தில் நாங்கள் வாழ்கிறோம்; அவர்களிடையே இருந்தும் நோய் எங்களை அணுகுவதில்லை. உழைக்கிறவர்களிடையே உழைப்பின்றிப் பரிபூரணானந்தத்தில் வாழ்கிறோம். பொருள் வருவாய் ஒன்றும் இல்லாமலே பரிபூரணானந்தத்தில் வாழ்கிறோம். சுடர்விடும் தேவர்கள் அடையும் ஆனந்தத்தைப் போன்ற ஆனந்தமே எங்கள் செல்வம். ஒரு பூதரும் இன்றி இருக்கும் தனி வீட்டில் ஆன்மாவிலே சாந்தியை நிறைத்து வாழும் பிட்சுவானவன் சத்தியத்தில் கருத்துடையவனாய் மனிதர் காணாத பேரானந்தத்தை அநுபவிக்கிறான்.

—புத்த பகவான்.

பட்டாணியருக்கு விடுதலை

அப்துல் கப்பார் கான்

‘காபூல்’ என்ற பிரபல ஆப்கானிய பத்திரிகையில், புஷ்டு பாஷையில் வெளியான இந்தக் கட்டுரையை, கான் காஜி காபூலி என்பவர் மொழிபெயர்த்து, ‘பீபிள்’ பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறார். எல்லைப்புறக் காந்தி, இதைச் சிறையிலிருந்தபடியே எழுதியிருக்க வேண்டுமென்று தோன்றுகிறது.

புனிதமான குதா-ஈ-கித்மத்கார் இயக்கம் விரோதிகளின் ஆட்சியிலிருந்து ஆப்கானியர்களை விடுவிக்க ஏற்பட்டது. கிழக்கத்தி ஜன சமூகங்களுடன் அப்போதுதான் அவர்கள் சுதந்தர புருஷர்களாக வாழ முடியும். குதா-ஈ-கித்மத்கார்களுக்கு ஊக்கத்தை உண்டாக்குவது பேராசையோ தன்னல உணர்ச்சியோ அல்ல; கடவுளின் திருவுள்ளமும் நாட்டின் நன்மையுமே. அதனால்தான் வேதனைக்கும் கொடுமைக்கும் நான் அஞ்சுவதில்லை. நான் கடவுளிடத்திலும் நம்முடைய தூய சங்கற்பத்திலும் நம்பிக்கை வைப்பவன்; கடவுளின் திருவுள்ளத்தை நிலைநாட்டுவதில் வெற்றி பெறலாம் என்று உறுதியாக நம்புகிறேன். நம் வழியிடையே குறுக்கிட எந்த உலகத்துச் சக்தியாலும் ஆகாது. ஆஜாத் பக்டூனிஸ்தானம் வந்தே தீரும். பட்டாணியர் அல்லது பக்டூன் ஜாதியை விடுவித்து ஒற்றுமைப்படுத்தும் பிரச்னை புதியதல்ல. பறங்கியரின் சுயநலத்தால் நாம் பல பகுதிகளாகச் சிதறுண்ட காலம் முதலே அது நம்மிடம் இருந்து வருகிறது. எல்லைப்புற மாகாணம், மலைப்புறம், பலூசிஸ்தானம், சிந்துக்கரை, சச் இலாகா இவற்றிலுள்ள பக்டூன் சகோதரர்கள் ஒன்றுபட வேண்டுமென்பதே என் ஆசை.

ஆரம்பத்திலிருந்தே நானும் என் ஸ்தாபனமும் ஜாதியின் ஒற்றுமையையும் முன்னேற்றத்தையுமே நோக்கமாகக் கொண்டிருக்கிறோம். இதற்காகவே இன்றுவரையில் போராடித் தியாகம் செய்திருக்கிறோம்; இந்தப் போராட்டத்தில், யார் நமக்குத் துணை வந்தாலும் சரி, வராவிட்டாலும் சரி, பக்டூன் ஜாதியினருக்காகச் சுதந்தரப் பக்டூனிஸ்தானத்தைப் பெறுவது என்பதே என் அசைக்க முடியாத தீர்மானம். மூச்சுள்ள வரையில் இதற்காகப் பாடுபட்டு வருவேன்; இந்த முயற்சியில் உயிரையும் இழப்பேன்.

பட்டாணியர்களுடைய தியாகத்தினால் பாகிஸ்தானமும் ஹிந்துஸ்தானமும் சுதந்தரத்தை அடைந்தன; பிரிட்டிஷ் ஆட்சியைப் புதைத்தாகிவிட்டது. இந்தியச் சுதந்தரப் போரில் பட்டாணியர்கள் செய்த தியாகம் சிறந்தது; இணையற்றது. அதனால்தான் பறங்கிக்காரன் பட்டாணியனைப் பெரிய வைரியாக எண்ணுகிறான். அவனைச் சர்வநாசமாக்கவே அவனது தாய் நாட்டைப் பாகிஸ்தானத்தோடு சேர்த்தான்.

பாகிஸ்தானத்தைச் சிருஷ்டித்த விஷயத்தில் விவாதம் செய்ய நான் விரும்பவில்லை. அதற்கும் எனக்கும் சம்பந்தம் இல்லை. தம்முடைய

மூலம்: பீபிள் (ஆங்கிலம்: 10-4-’49), 760, மதராஸ் ரோடு, காஷ்மீர் கேட், டில்லி.

தாய் நாட்டில் சுதந்தரப் பக்னேிஸ்தானத்தை ஸ்தாபிப்பதற்கேற்ற உரிமையைப் பெறவேண்டுமென்று என் மக்களுக்கு வற்புறுத்திக் கூறுகிறேன். கணக்கற்ற தியாகங்களைச் செய்ததற்காகப் பட்டாணியர்களுக்குச் சுதந்தரம் கொடுக்க வேண்டும் என்றும் அதை மறுக்கக் கூடாதென்றும் ஜின்னுவிடம் வாதாடினேன். பக்னேிஸ்தானம் சிருஷ்டிக்கப்பட்ட பிறகும் பாகிஸ்தானத்துடன் இருப்பதாக ஜின்னுவிடம் சொன்னேன்; ஆனல் பாகிஸ்தானத்தில் பிரிட்டிஷாரின் பிடிப்பு இருந்தால் நாங்கள் விலகிக்கொள்ள உரிமை உண்டு என்ற நிபந்தனையையும் சொன்னேன். பாகிஸ்தானத்தில் பிரிட்டிஷாரின் ஆதிக்கம் தொடர்ந்து இருக்குமென்று தெரிந்ததால் இந்த நிபந்தனை அவசியமென்று என் மனத்துக்குப் பட்டது. பிரிட்டிஷார் என்னிடமிருந்தும் என் மக்களிடமிருந்தும் எங்கள் உரிமையைப் பறித்ததற்காக நாங்கள் வருந்தவில்லை என்றும், ஏனெனில் அவர்கள் பக்னேஜாதியின் நித்திய வைரிகள் என்றும் ஜின்னுவிடம் கூறினேன். "ஆனல், நீங்களும் நானும் மதத்தால் சகோதரர்கள். ஆகையால் நீங்கள் எங்களுக்கு உரியதை அளிக்கவேண்டுமென்று எதிர்பார்க்கிறேன். இப்படிச் செய்தால் என் நட்பைப் பெற்றுப் பாகிஸ்தானத்தையும் பலப்படுத்திக் கொள்ளலாம்" என்றேன். ஜின்னுவை வழிக்குக் கொண்டுவர முடியவில்லை; அது ஏமாற்றந்தான்.

நான் நினைத்தவை உண்மையாயின. எல்லைப்புற மாகாணத்துக்குக் கவர்னராக ஒரு பறங்கியை நியமித்திருக்கிருர்கள். அவர் தம் வாழ்வு முழுவதும் அடக்கு முறையைச் செலுத்துவதிலும் பட்டாணியர்களுக்குள் வேற்றுமையைப் பரப்புவதிலும் பேர் பெற்றவர். பட்டாணியர்களிடையே அவருக்கு மதிப்பே இல்லை. அரசியல் நிர்வாகத்தைப் பட்டாணியர்கள் ஏற்கவில்லை; பிரிட்டிஷ் அரசாங்கத்தை ஆதரித்தவர்களே நிர்வாகத்தை ஏற்ருர்கள். இதுதான் பாகிஸ்தானமா? இஸ்லாமா? அப்படியானல் பாகிஸ்தானமும் பிரிட்டிஷார்மாதிரியே பட்டாணியரைத் தளையிட்டு வைக்க விரும்புகிறதென்பது தெளிவாகிறது.

பண்டித ஜவாஹர்லால் நேரு, வஜீரிஸ்தானுக்கு வந்தபோது அங்கே மீரான்ஷாவில் இருந்த அரசாங்க ஏஜெண்டு, "கோடி கோடி ரூபாயைச் செலவழித்துப் பட்டாணியர்களுக்கு உதவிபுரிந்திருக்கிருேம் நாங்கள். நீங்கள் என்ன செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டார். "ஆம்; உங்களுடைய அபாரமான உதவியால் பட்டாணியர்களிடம் பேராசையும் பிணக்கும் தான் அதிகமாயின; அவர்கள் சுயமரியாதையும் சுதந்தர உணர்ச்சியும் தேய்ந்து மாய வழி தேடினீர்கள்" என்று விடை கூறினேன்.

இன்றுள்ள பாகிஸ்தானம் பிரிட்டிஷாரின் சிருஷ்டி. அதனல்தான் அது என்னை அழுத்திப் பட்டாணியர்களின் தலைமேல் உட்காரவிரும்புகிறது. இது பலிக்காது. குதா-ஈ-கித்மத்கார்கள் நான் வகுத்த திட்டத்தைப் பற்றிக்கொண்டிருக்கிருர்கள். இதை நடத்தி வருவதால் என் மக்கள் லட்சியத்தை அடைந்து சுதந்தரம் பெறுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன். நான் வெற்றி அடைவேன்; பகைவன் தோல்வி அடைவான். இது உறுதி. கடவுள் என் பக்கத்தில் இருக்கிருர்.

விவாக ரத்து

கடிதப் போட்டிக்கு வந்த கடிதங்களிலிருந்து எடுத்த ரசமான பகுதிகள் இதோ இருக்கின்றன. நமது முடிவு விவரத்தை மூன்ருவது அட்டையில் காணலாம்.

வேண்டும்

ராமாயணத்திலிருந்து சீதையைக் கற்புக்கு உதாரணம் காட்டும் எத்தனை ஆண்கள், ராமசந்திர மூர்த்தியைப்போல் ஏகபத்தினி விரதத்தை அநுஷ்டிக்கும்படி ஆண்களை வேண்டுகிருர்கள்?......

எவ்வளவோ விதத்தில் புராண காலத்துக்கும் நம் காலத்துக்கும் வித்தியாசம் இருக்கிறது. அன்று இல்லாத பல பழக்க வழக்கங்கள் இன்று நம்மிடம் புகுந்துவிட்டன; அவைகளையெல்லாம் நாம் சாஸ்திர பூர்வமாக ஆராய்வதில்லை. இந்தச் சட்டத்துக்கு மாத்திரம் புராணங்களைப் புரட்டவேண்டாம்.......

இப்போது ஜீவனும்சம் கொடுத்துத் தள்ளிவைப்பதைவிட விவாக ரத்து மேல். விவாக ரத்து வேண்டாம் என்ருல், ஆண் தன் மனைவியைத் தள்ளிவைக்கும் வழக்கம் ஒழியச் சட்டம் செய்யவேண்டும்.

—எஸ். உமாதேவி, c/o ரசாயன புரொபசர், ஹிந்து சர்வகலாசாலை, காசி.

அந்தக் காலத்தில் ஏகபத்தினி விரதம் இருந்தது; சூழ்ச்சியும் மோசமும் நிறைந்த விவாகம் இல்லை; பெண்ணுக்குச் சுயம்வர உரிமைகூட இருந்தது. இந்தக் காலத்தில் பெற்ருேர்கள் மணம் செய்விப்பதால், பணம் அடையவும் பெரிய இடத்து உறவை நாடவும் பெண்ணை ஒரு கருவியாக உபயோகிக்கிருர்கள். இதனுல் விளையும் தீமையிலிருந்து பெண்ணைக் காப்பாற்ற விவாக ரத்தால்தான் முடியும்....

விவாக ரத்து வந்தால், பெண்கள் அடிக்கடி விவாக ரத்துச் செய்துகொண்டு கணவனைத் திண்டாட வைத்துவிட மாட்டார்கள். ஆனுல், கணவனைத் தேர்ந்தெடுக்கப் பெண்ணுக்குப் பூர்ண உரிமை கொடுத்துவிட வேண்டிவரும்; கணவனும் மனைவியிடம் நல்ல முறையில் நடந்துகொள்ள வேண்டிவரும். குறைபாடுகள்தான் நீங்குமே தவிர, விவாக ரத்து அரிதாகும்; சமூகம் சீர்திருந்துமே ஒழியப் பாதகம் ஏற்படாது. பெண்களுக்கு விடுதலை அளிக்கக்கூடிய இந்தச் சட்டத்தை எந்தப் பெண்ணும் துஷ்பிரயோகம் செய்ய மாட்டாள் என்று நம்பலாம்.

—மங்கையர்க்கரசி, 18, இருசப்பச் செட்டி தெரு, கூடலூர்.

கல்யாண காலத்தில் ஜாதகத்தைப் புரட்டி, 'சுக்கிரன் சூரியனைப் பார்க்கிருனு? சூரியன் சந்திரனைப் பார்க்கிருனு?' என்று கவனிக்கிருர்களே யொழிய, 'இந்தப் பெண் இவனேடு வாழமுடியுமா?' என்று உபயோகமுள்ள முறையில் ஆராய்வதில்லை; கடைசிப் பட்சமாக மணமக்களின் விருப்பத்தைக்கூடக் கேட்டறிவதில்லை. இதனுல் பலர் விஷயத்தில் கல்யாணம் என்பது தப்பித்துக்கொள்ள முடியாத மரண தண்டனையாகிவிட்டது.

இப்பேர்ப்பட்டவர்களை (பெண்களைமட்டும் அல்ல, ஆண்களையுந்தான்) ஆபத்திலிருந்து மீட்க வேண்டுமானால், வாழ்விழந்த இவர்களை வாழ்விக்க வேண்டுமானால், 'விவாக ரத்து' என்னும் சிகிச்சையைச் செய்யத்தான் வேண்டும். 'விவாக ரத்து' என்பது ஓர் ஆபரேஷன்; அது ஆபத்துநிவாரணியே தவிரப் பொழுதுபோக்கும் விளையாட்டு அல்ல. விவாகத்தின்போது செய்யும் யோசனையைவிட விவாக ரத்தின்போது செய்ய வேண்டிய யோசனையே வெகு முக்கியம்...

இப்போது விவாக ரத்தின் அவசியத்தை உணர்ந்து அதை ஆதரித்தால், பின்னால் அதனால் விளையக் கூடிய அநர்த்தங்களுக்கும் வழி தேடிவிட்டுப் போகிறோம். அடி சறுக்குமே என்று பயந்து, நடக்காமலே இருந்துவிட முடியுமா?

—வி. ஜி. பார்த்தசாரதி, 195, ராம விலாஸ் ரோட், மைசூர் 6.

நெடுநாட் பழக்கத்தால் நம் மனத்தில் ஊறிப்போயிருக்கும் அபிப்பிராயங்களைச் சற்று ஒதுக்கி வைத்துவிட்டே விவாக ரத்துப் போன்ற சீர்திருத்தங்களை அவைகளின் யோக்கியதாம்சங்களைக் கொண்டு சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்....

கண்ணைக் கட்டிக்கொண்டு (சில சமயம் கண்ணைத் திறந்துகொண்டு கூடத்தான்) ஒரு காரியத்தில் இறங்குகிறோம்; அது தவறாக முடிந்தால், "அதை மாற்றக் கூடாது. அதுதான் தலைவிதி, பிராப்தம்; அதை அநுபவித்தாக வேண்டும்" என்று சொல்வது ஈவிரக்கம் அற்ற செயல். அதன் கொடுமை அநுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்; மற்றவர்களுக்குத் தெரியாது. ஆனால், இந்த மற்றவர்கள்தான் நியாயம் பேச வந்துவிடுகிறார்கள். இந்த நியாயம் பெண்களுக்குமட்டுந்தான்; ஆண்களுக்கு இல்லை.

சாஸ்திரம் இடம் தரவில்லை என்கிறார்கள். சாஸ்திரம் மக்களின் சௌகரியத்துக்காக ஏற்பட்டதே தவிர, மக்கள் சாஸ்திரத்துக்காக அவதிப்படவேண்டும் என்பது பிசகு. மேலும் முன் காலத்தில் அவசியம் நேர்ந்தபோதெல்லாம் பண்டிதர்கள் பரிஷத் கூடிச் சாஸ்திரத்தை அப்போதப்போது மாற்றி அமைத்தார்கள். அதேபோல் இந்தக் காலத்துக்கு ஏற்றபடி விவாக ரத்து விஷயத்தில் சாஸ்திரத்தை மாற்றி அமைக்க வேண்டும். அது தான் முன்னுக்கு வரும் வழி.

— வி. சீநிவாசன்,
77, சந்நிதித் தெரு, காஞ்சீபுரம்.

வேண்டாம்

சௌக்கியமாக இருந்த காலத்து ஈருடலும் ஒருயிருமாக இருந்துவிட்டு, நோய்வாய்ப்பட்டவுடன் அன்பையும் நேசத்தையும் மறந்து விவாக ரத்துக் கோருவதைப் போன்ற நன்றி கெட்ட செய்கை ஈவிரக்கமற்றது...

வரம்பு, சத்தியம் என்று இருக்கும்போதே இந்த மனம் நினையாத எண்ணம் இல்லை. 'கட்டுப்பாடு இல்லை; நீ போகும் வழி போ' என்று மனத்தைத் தட்டிவிட்டால், கேட்கவேண்டுமோ? பாகன் அற்ற குதிரைதான்......

வாழ்விலே விவாகம் என்பது முன்கூட்டியே தீர யோசித்து முடிவுக்கு வரவேண்டிய ஒரு முக்கிய ஏற்பாடு. மணம் புரிந்த பின்பு விவாக ரத்துக் கோருவது பெண்மைக்கும் தாய்மைக்கும் அநீதி

இழைப்பதாகும். அலையும் மனத்துக்கு அமைதியே இல்லை. ஒழுக்கத்திலும் கட்டுப்பாட்டிலுந்தான் மனம் சாந்தி பெறும்; மனித வர்க்கமும் உயரும்.

—டி. பத்மாசனி, 57, மேலச்சித்திரை வீதி, ஸ்ரீரங்கம்.

சட்டத்தினால் சமூகச் சீர்திருத்தம் செய்வது பள்ளிக் குழந்தைக்குப் பிரம்பைக் காட்டிப் பாடம் கற்பிப்பது போலத்தான். சினிமா, இசைத் தட்டுகள் முதலியவற்றில் கீழ்த்தர உணர்ச்சிகளைப் பெருக்கும் வகையில் நடிப்பும் பாட்டும் இருக்கின்றன. சங்கிலித் தொடராக மனித வர்க்கத்தைப் பரம்பரையாகச் சிருஷ்டிப்பதை நோக்கமாகக்கொண்டு இயற்கை அளித்த ஒரு சக்தியை வீணாகச் சிதற அடிப்பது மிகவும் பாவம். அழகான உருவத்தைக் கண்டு ஆடவன் மனம் சலித்தால், அதைக் காதல் என்று எண்ணிக்கொள்கிறான்! ஆபாசமான கருத்துக்களையெல்லாம் ஒதுக்கி மனத்தூய்மை தரும் எண்ணங்களை அரசாங்கம் பிரசாரம் செய்யவேண்டும். சமூகத்தில் உள்ள குறைபாடுகளினால் ஏற்படும் ஒவ்வாத மணங்களையெல்லாம் விவாக ரத்து மூலம் நிவர்த்திப்பது என்பது, கள்ளுக் கடைகளைத் திறந்து வைத்துக் குடிப்பவர்களுக்குத் தண்டனை அளிப்பதுபோல் மூடத்தனமான காரியம்.

—தூ. சு. குருமூர்த்தி, தூத்துக்குடி, சென்னைநல்லூர் போஸ்டு.

துர்நடத்தையின் காரணங்களை யெல்லாம் புள்ளி விவரமாகச் சேகரித்து வெளியிட்ட அமெரிக்கப் புத்தகங்கள் ஏராளமாய் உண்டு. விவாக ரத்தின் அவசியத்தைப்பற்றிச் சாதகமாகவும் பாதகமாகவும் உள்ள விஷயங்களை அமெரிக்க நிபுணர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள். குரூரச் செயல், துன்மார்க்கம் முதலியவை விவாக ரத்தினால் ஏற்படுகின்றனவா, அல்லது விவாக ரத்து அவைகளினால் ஏற்படுகிறதா என்பதைப்பற்றி எவ்வளவுதான் மூளையை உடைத்துக்கொண்டாலும் அது புலப்படாத விஷயம். விவாக ரத்தில் கவனம் செலுத்துவதைவிட விவாகத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும். விவாகம் ஆக்கல் திட்டம்; விவாக ரத்து அழிவுச் சட்டம்.

— எம். ராமநாதன், தெற்குத் தெரு, ஆனைதாண்டவபுரம்.

விதிவசத்தால் சதிபதிகள் இல்வாழ்க்கை நடத்தச் சாத்தியமில்லாதபடி சில காரணங்கள் நிகழலாம். அந்தச் சமயத்தில் ஆணோ பெண்ணோ எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்ற யோசனை நம் முன்னோர்களின் சிந்தனையில் எழாமல் இல்லை. அதற்கென்றே ஒவ்வொரு தர்ம சாஸ்திர ஆசிரியரும் விதிவிலக்குகளைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.......

சமூக வாழ்க்கையில் 'வழக்கம்' என்னும் ஓர் 'எழுதாத சட்டம்' சமூகத்தின் போக்குக்கும் காலகதிக்கும் ஏற்றவாறு சிறிது சிறிதாக மாறிக்கொண்டே வந்து சமூகத்தைக் கட்டுப்பாட்டுக்குள் வைக்கிறது......

பெரும்பாலும் சீர்திருத்தம் சட்டங்களால் நடைபெறுவதில்லை. 'விதவா விவாகச் சட்டம்' ஏற்பட்டுச் சுமார் எண்பது வருஷத்துக்கு மேல் ஆகிறது. அப்படி யிருந்தும் அது நம் சமூகத்தினரிடம் பரவவில்லை. கனம் சாஸ்திரியாரின் 'ருதுமதீ விவாகச் சட்டம்' பலத்த எதிர்ப்பினால் நிறைவேறாமல் போயிற்று. அப்படியிருந்தும் இப்போது எவரும் தம் மகள் ருது ஆவ

தற்குமுன் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திப்பதில்லை....

விவாக ரத்துச் சட்டம் எந்தக் கொடிய பழக்கத்தையும் அகற்றுவதற்காக வரவில்லை. இதில் கண்ட விதி விலக்குகளோ, ஏற்கனவே நம் சமூக வழக்கில் இருந்து வருகின்றன. அப்படி இருந்தும், கோர்ட்டுகளில் விவாக ரத்துக்கான நடவடிக்கைகள் எவற்றையும் இதுவரைக்கும் காணவில்லை....

இந்த ரத்துச் சட்டம் நம் நாட்டின் 'பதிவிரதா தர்மம்' என்ற ஒப்பற்றதொரு மனோபாவத்துக்கு உலை வைக்கப்போவது நிச்சயம்.

— வி. அம்புஜம், 2298, கிருஷ்ணராவ் சந்து, தஞ்சாவூர்.

நம் வீட்டில் வளர்க்கும் புறாக்கள் கூட ஜோடியாக வாழ்கின்றன. எந்தக் காரணத்தாலோ அந்த ஜோடியில் ஒன்று பிரிந்தால், மற்றது வேறொன்றைச் சேர்வதில்லை. நாமாகப் பிணைத்து வைக்க முயன்றால் பல நாள் கழித்தே இணைகிறது. அதிலும் ஆண் சீக்கிரம் சம்மதிக்கும்; பெண் சம்மதிக்க நீண்ட காலம் ஆகும். இப்படி இருக்க, பெண்களின் கௌரவத்தைக் குலைக்கும் ஒரு சட்டத்துக்கு விவாக ரத்து என்னும் நாகரிகப் பெயரைச் சூட்டி அணியப் பார்க்கிறார்கள்!....

இன்று நாட்டிலே ஒரு சட்டத்துக்கு எத்தனை கள்ள மார்க்கெட்டுகள் இருக்கின்றன! சட்டத்தை நாம் உண்டாக்குகிறோம்; சத்தியத்தை ஆண்டவன் உண்டாக்குகிறான். சத்தியத்தால் மக்களைக் கட்டுப்படுத்த முடியும்; சட்டத்தால் கட்டுப்படுத்த முடியாது. இந்தச் சட்டம் சத்தியத்தில் உள்ள நம்பிக்கையைப் போக்குவது.

— மு. வேணுகோபால், திருப்பத்தூர்.

தன் மனைவி தன்னை நம்பி வந்தவள், தனக்கும் அவளுக்கும் இனிப் பிரிக்க முடியாத ஒரு பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்ற உணர்ச்சி ஏற்படும்போதுதான் தன் மனைவியின் குற்றங்களை மன்னித்து மறக்கும் பக்குவத்தை ஒருவன் அடைகிறான். அது போலவே, தன் கணவன், அவனுடைய வாழ்வு தாழ்வு, மான அவமானம் எல்லாவற்றிலும் தனக்கும் பங்கு உண்டு என்ற உணர்ச்சி உண்டாகும்போதுதான் அவன் குற்றங்களை மன்னித்து மறக்கும் பக்குவத்தைப் பெண் அடைகிறாள்.

ஒரு சமயம் மகாத்மாவே தம்முடைய மனைவியை வெளியே பிடித்துத் தள்ளினார். பிறகு அது பிசகு என்று உணர்ந்து உள்ளே அழைத்துக்கொண்டார். அப்போது விவாக ரத்துச் சட்டம் இருந்து, காந்தி தமக்கும் மனைவிக்கும் மனம் வேறுபட்டு விட்டதென்று விவாக ரத்துச் செய்துகொண் டிருந்தால், எப்படி இருந்திருக்கும்?

விவாக ரத்து ஒரு கொடிய விஷம்; இந்து மதத்துக்கே நாசகாரி.

-ஞானம் சுப்பையா, பாளையங்கோட்டை.

ஒரு நாள் வாழ்வு

டேவிட் ஆசிஸன் என்பவர் ஒரே ஒரு நாள் அமெரிக்க ஐக்கிய நாட்டின் ஜனாதிபதியாக இருந்தாராம். ஆனால் அவர் துரதிருஷ்டம் அன்று ஒரு வேலையும் செய்ய முடியவில்லை. அதற்கு முந்திய நாள் அதிகமாக உழைத்ததால் அன்று அலுத்துப் போய்த் தூங்கிவிட்டாராம்.

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்.

1. பண்டைக் காலத்தில் இருந்தவர்களுடையவும் இந்தக் காலத்தில் வாழ்பவர்களுடையவும் சுவையும் வாழ்க்கையும் வேறுபடுகின்றன.

2. நகரத்தில் வாழ்கிறவர்களுக்கு இப்பொழுது அநேகமாக வெந்நீர்த் தண்ணீரில் குளிப்பதே வழக்கமாகப் போய்விட்டது.

3. கிராமத்தில் விடியற்காலையில் குளிர்ந்த நீரில் முழுகிவிட்டு வேலை பார்க்கச் செல்வார்கள்; கண்குளிர்ச்சியாக இருக்கும். அங்கே நகரவாசிகள் போனால் மாலை நேரம் வந்துவிட்டால் அவர்களுக்கு இருட்டுத் தெரிவதில்லை; நடக்கமுடியாமல் திண்டாடுகிறார்கள்.

4. மூலிகை வகைகளை நன்கறிந்த கிராமவாசிகள் பழங்காலத்தில் எளிதிலே மருந்துகளைச் செய்துகொண்டார்கள். தென்னம்பாளையோ, ஆடு தீண்டாப் பாளையோ எதானாலும் மரத்திலே விறு விறு என்று ஏறிப் பறிப்பார்கள்.

5. இளமையின் எழிலும் வலிவும் நெடுநாட்கள் இயற்கையிலே பழகி இயற்கையோடு வாழும் மக்களுக்குக் கெடுவதில்லை.

6. இரவுக் காலங்களில் நெடு நேரம் பாரதம் முதலிய பதினெண் புராணங்களில் ஒன்றைக் கேட்டுப் பொழுது போக்குவார்கள்.

7. இந்தக் காலத்தினர், பழைய பழக்க வழக்கங்களையும், பண்டைமக்களின் தேக ஆரோக்கியத்தின் காரணங்களையும் தெரிந்து கொள்ள முயலுவதில்லை; தென்னாப்பிரிக்காவில் இருக்கும் கென்யாவில் உள்ள மக்களைப்பற்றி விழுந்து விழுந்து படிப்பார்கள்.

8. பலூசிஸ்தானத்துப் பிரதம மந்திரி ஹிந்துஸ்தானத்தைக் குறை கூறுவதைப் பற்றி அல்லோல கல்லோலப்படும். நம் நாட்டின் இயல்புகளை நாமே குறை கூறுவதைப் பெருமையாக நினைக்கிறோம்.

9. ஆடவர், மகளிர், அரசியல் வாதிகள், மாணக்கர் கூட்டங்கள், எவ்வளவோ மணிக்கணக்கான நேரத்தை அநாவசியமான வாக்குவாதங்களிலும், பயனற்ற பேச்சிலும் போக்குகிறார்கள்.

10. பல நாட்கள் வால்மீகியின் ராமாயணத்தை ஆராய்ந்து, அறிவாளிகளுடன் கலந்துபேசி, தன் கற்பனைத் திறத்தினாலும் பக்தியினாலும் முதல் முதலாகத் தமிழில் ராமாயணத்தைக் கம்பன் இயற்றினானே; அதைப் புரட்டியாவது பார்க்கலாம் என்று அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

11. பழங்காலத்துத் தமிழர் வாழ்க்கையில் தமிழ்மொழி எவ்வளவு தூரம் வளர்ந்திருந்ததென்று அறியவும், ஐந்திலக்கணங்களின் விரிவை உணரவும் தொல்காப்பியம் என்ற பழைய நூல் பயன்படுகின்றதென்பதையும் அவர்கள் கருதுவதில்லை.

[22-ஆம் பக்கத்தில் பிழைகளின் விளக்கத்தைக் காணலாம்.]

இயற்கை கொடுத்த உடம்பைக் கவர்ச்சிகரமாகச் செய்துகொள்ள எவருக்கும் முடியும்.

அழகுக் குறிப்பு

ஒவ்வொருவரும் இந்த உலகத்தில் அழகாய்ப் பிறந்திருக்க முடியாது. ஆனால், உள்ள லட்சணத்தைக் கவர்ச்சிகரமாகச் செய்துகொள்ள எல்லாராலும் முடியும். சில அழகுக் குறிப்புகளைத் தொடர்ந்து பின்பற்றினால், உங்கள் முகத்திலே வசீகரம் உண்டாகும். சருமத்தைச் சுகமாக வைத்துக்கொள்ளும் முயற்சி வீண் போகாது. தேகாப்பியாசம், சாப்பாட்டிலே கட்டுப்பாடு இரண்டும் இருந்தால், உடம்பு லட்சணமாயிருக்கும். எற்கனவே இருந்ததைவிட இப்போது கவர்ச்சியாகத் தோன்றுகிறோம் என்று நம்புங்கள். இப்போது இருப்பதைவிட இன்னும் கவர்ச்சியாக மாற முடியும் என்று தீர்மானித்துக்கொள்ளுங்கள். அதற்கேற்ற முயற்சி எடுங்கள். ஒவ்வொரு சின்ன முயற்சியும் பலன் தரும்.

(1) நிமிர்ந்து நிற்பது: கூனிக் குறுகிய உருவம் மகா விகாரம். 'ஜம்' என்று திடமாக நிமிருங்கள்; வயிற்றிலும் ஆசனத்திலும் உள்ள தசைநார்களைக் குறுக்குங்கள்; இடுப்பு வளையாமல் நில்லுங்கள்.

(2) தலையை உயர்த்துவது: தலையைக் குனியாமல் நேராக உயர்த்துங்கள். இதனால் உங்கள் மோவாய்க் கோடு உறுதிப்படும்; வயதினால் முகம் வாடி வதங்கிய குறி நீங்கும்.



(3) புன்சிரிப்பு: இது உங்கள் வாய்க்கு அழகு தரும். பல்லைக் காட்டாதீர்கள். ஈறு வெளியே தெரிவது கோரம்.

(4) நல்ல உணவு: உடம்பு மெலியவேண்டும் என்பதற்காகப் பட்டினி கிடக்காதீர்கள். இதனால் உங்கள் சருமம் மங்கிவிடும். சகல சத்துக்களும் கணக்காக உள்ள உணவை ஒழுங்காக உண்ணுங்கள். கொழுப்புச் சத்து உள்ள பதார்த்தங்களைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

(5) திறந்த வெளியில் தேகாப்பியாசம்: இதனால் உடம்பு லட்சணப்படும். அதிகாலையில் - அதுவும் இந்த வெயிற்காலத்தில் - வெளியே உலாவிவிட்டு வருவது சிறந்த பயிற்சி.

(6) பிரகாசமான கண்கள்: மங்கல் வெளிச்சத்தில் படித்துக் கண்ணுக்குச் சிரமம் கொடுக்காதீர்கள். தேவையானால் கண்ணாடி அணிந்துகொள்ளுங்கள்; ஆனால், உங்கள் முகத்துக்குப் பொருத்த

காப்பிரைட்: இந்தியா (ஆங்கிலம்), பம்பாய்.

மான சட்டம் போட்டதை வாங்கிக் கொள்ளுங்கள்.

(7) சருமப் பாதுகாப்பு: சருமத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுங்கள். புதிதாகப் பவுடர் பூசிக் கொள்ளும்போதும், படுக்கப் போகும்போதும் பழைய பவுடரை நன்ருகத் துடைத்துவிடுங்கள். தொடர்ந்து சிறிது சிறிதாகச் சருமத்தைப் பதம் செய்துகொள்வது சிறந்த பலன் தரும். ஸ்நான அறையில் புதிய எலுமிச்சம்பழம் வைத்திருங்கள். கை கழுவச் செல்லும் ஒவ்வொரு தடவையும் உங்கள் கையிலே அதைச் சிறிது தேய்த்துக்கொள்ளுங்கள். இதனுல் கை வெளுக்கும்.

(8) ஸ்நானம், நக நகர்சு: நகங்களை அராவி விடுங்கள். பாதத்தையும் நகங்களையும் புருஷ் கொண்டு நன்ருய்த் தேய்த்துக் கழுவி ஸ்நானம் செய்யுங்கள்.

(9) பல் பாதுகாப்பு: நன்ருகப் பல் துலக்குங்கள். ஆறு மாதத்துக்கு ஒரு தடவை பல் வைத்தியரிடம் காட்டுவது நலம்.

(10) கூந்தல்: உங்கள் முகத்துக்குப் பொருத்தமான தலைப் பின்னல் அல்லது முடிச்சு, முகத்தின் குறையை மறைத்துவிடும் சக்தியுடையது என்பதைக் கவனத்தில் வையுங்கள். கூந்தலைச் சுத்தமாகவும் பளபளப்பாகவும் வைத்துக் கொள்ளுங்கள்.

(11) லேசான 'மேக் - அப்': மிருதுவான முகத்திலே லேசாகப் பவுடர் பூசிக்கொண்டால், சருமத்தின் அழகு அதிகரிக்கும். உதட்டுக்குச் சிறிது 'லிப் - ஸ்டிக்' பூசிக் கொள்ளலாம். கன்னத்துக்கு 'ரூஜ்' தடவிக்கொள்வதானுல், அது உங்களுடைய இயற்கை நிறம் அல்ல என்று பிறருக்குத் தெரிந்துவிடாதபடி தடவிக்கொள்ளுங்கள்.

குழந்தைகள் - ஆணும் பெண்ணும்

★ 'பெண் குழந்தை ஆணைவிட ஆரோக்கியமாக இருக்கும்' என்பது உண்மையா?

ஆமாம். கைக்குழந்தையாக இருக்கும்போது பெண் ஆணைப் போல் அப்படி அடிக்கடி நோயில் விழுவதில்லை. சற்று வயதான பிறகுகூட நீடித்த நோய் வந்தால் பெண்ணைவிட ஆணைத்தான் அதிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டியிருக்கும்.

★ எந்தக் குழந்தை சீக்கிரமாக நடக்கும்?

பெண்; ஆணுக்கு இரண்டு வாரம் முந்தியே அது நடக்க ஆரம்பிக்கும்.

★ பேசினல் எது சீக்கிரமாகப் புரிந்துகொள்ளும்?

பெண்; 1½ வயதுக்குமேல் 2க்குள் ஆணைவிட இரண்டு மடங்கு அதிகமாகப் புரிந்துகொள்ளும்.

★ எதற்குக் கோபம் அதிகம்?

ஆணுக்கு; 3 வயதிலிருந்து அது பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்து விடும். விலு விலு என்று உதைத்துக் கொள்ளும்; எந்தச் சாமானையும் தூர விட்டெறியும்.

—'ஸயின்ஸ் டைஜெஸ்ட்.'

க்விஸ்

[நமக்கு மிகவும் தெரிந்த விஷயங்களில்கூடச் சில சமயம் திட்டமான விவரங்கள் ஞாபகம் இருப்பதில்லை. இதோ சில கேள்விகள்: எங்கே, உங்கள் கவனசக்தியைச் சோதித்துப் பாருங்கள். பிறகு, 16-ஆம் பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக் கொள்ளுங்கள்.]

அரசியல்:

1. இந்தியாவில் பின் கண்ட கட்சிகள் எந்த எந்த வருஷங்களில் தோன்றின? (அ) சோஷலிஸ்டு கட்சி; (ஆ) முஸ்லிம் லீக்; (இ) கம்யூனிஸ்டு கட்சி.

2. இப்போது அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசி இந்த மூவரில் யார்? (அ) காமேசுவர ராவ்; (ஆ) களா வேங்கடராவ்; (இ) காளேசுவர ராவ்.

3. பின்வரும் மூவரில் ஐக்கிய மாகாணத்தின் புதிய கவர்னராக நியமனம் பெற்றிருப்பவர் யார்? (அ) ஜம்னாதாஸ் மேஹ்தா; (ஆ) ஸர் காவஸ்ஜி ஜஹாங்கீர்; (இ) எச். பி. மோடி.

விஞ்ஞானம்:

1. தெர்மாஸ் பிளாஸ்கின் உட்புறத்தில் இருக்கும் வெள்ளிப் பூச்சு எதற்காக?

2. பக்கத்துப் படத்தில் இருப்பதைப் போல் ஒரு புத்தகத்தை மிக மெல்லிய கயிற்றினால் கட்டுங்கள். புத்தகத்துக்கு மேற்புறமுள்ள கயிற்றை ஒரு கம்பியில் கட்டுங்கள். கீழ்ப்புறம் உள்ள கயிற்றைக் கையால் பிடித்துக் கொள்ளுங்கள். மேலேயும் சரி; கீழேயும் சரி உள்ள கயிறுகள் ஒரே பருமன்; ஒரே உறுதி. இப்போது கத்தி முதலிய எதையும் உபயோகிக்காமல் கையால் பிடித்து இழுப்பதனாலேயே கயிற்றை அறுக்க வேண்டும். அப்போது கீழ்ப்பகுதி அறுபடுமா, மேல் பகுதி அறுபடுமா? அல்லது நம் இஷ்டப்படி எதை வேண்டுமானாலும் அறுக்க முடியுமா?



பொது:

1. முதல் முதலில் இந்தியாவில் தொடங்கிய பத்திரிகை எது? எங்கே? எப்போது?

2. ஒரு பாஷையில் வெளியான ஒரு நூலை மற்றொரு பாஷையில் மொழிபெயர்த்து வெளியிடுவதற்கு எத்தனை வருஷம் காப்பிரைட் தடை உண்டு?

3. ஒரு டாக்ஸி காரின் மீட்டரில் சுமார் எத்தனை சிறு சிறு பகுதிகள் உண்டு?

செய்தி:

1. பதினாறு வயதில் சினிமாவில் சேர்ந்து நடிப்பிலே கீர்த்தி பெற்ற அமெரிக்க நடிகர் வாலஸ் பீரி (அ) இன்று புதிய படம் ஒன்றில் நடிக்கிறார்; (ஆ) பல வருஷங்களுக்கு முன்னே காலமானார்; (இ) சமீபத்தில் காலமானார். இந்த மூன்றில் எது சரி?

2. பிரெஞ்சுத் தந்தைக்கும் கிரேக்கத் தாய்க்கும் பிறந்த ஸ்ரீமதி சாவித்திரி முகர்ஜி (அ) அமெரிக்காவில் இந்திய தூதராக நிய

மனம் பெற்றார்; (ஆ) ஜெர்மனியில் பிரிட்டிஷ் ராணுவக் கோர்ட்டில் தண்டனை அடைந்தார்; (இ) லண்டன் தியேட்டர் ஒன்றில் நடனமாடும்போது மூர்ச்சித்து விழுந்து காயம் அடைந்தார்.

3. சமீபத்தில் நடந்த ஒரு பிரபல விருந்து, ரேஷன் விதியை மீறியதென்று சொல்லி மாகாண கவர்னர் ஒருவர் அதில் உண்ண மறுத்து வெளியே எழுந்து சென்றுவிட்டார். அவர் யார்?

சரித்திரம்:

1. புரி ஜகந்நாதர் கோயிலைக் கட்டியவர் யார்? எப்போது கட்டினார்?

2. கிறிஸ்து பிறப்பதற்கு முன் பிஹார் மாகாணத்தில் பிரசித்தி பெற்று விளங்கிய நாலந்தா சர்வ கலாசாலையில் எத்தனை பேர் படித்தார்கள்? எத்தனை பிரசங்கமண்டபங்கள் இருந்தன?

3. சென்னைச் சர்வகலாசாலை எப்போது ஸ்தாபிதமாயிற்று?

விளையாட்டு:

1. பின்கண்ட நாடுகளில் ஒன்றின் தேசீய விளையாட்டு, பேஸ் பால்; அது எந்த நாடு? (அ) ஆஸ்திரேலியா, (ஆ) ஐக்கிய அமெரிக்கா; (இ) இங்கிலாந்து.

2. டெர்பி குதிரைப் பந்தயம் முதல் முதலாக எப்போது, எங்கே ஆரம்பித்தது?

3. இன்று உலகப் பிரசித்தமாயுள்ள ஒரு விளையாட்டை முகலாயர் காலத்தில் இந்தியாவில் ஆண்களும் பெண்களும் சகஜமாக ஆடினார்கள்; அது என்ன விளையாட்டு?

யுக்தி:

1. ஒரு டம்ளரை எடுத்துக்கொள்ளுங்கள். அளவு டேப் ஒன்றும் உப



யோகிக்காமல் கண் பார்வையாலேயே அதன் உயரம் அதிகமா, அடிவட்ட அளவு அதிகமா என்பதைச் சட்டென்று தீர்மானியுங்கள். இப்போது வேறு பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.

2. ஒரு பவுண்டு தங்கம் கனமா? ஒரு பவுண்டு பட்சி இறகு கனமா?

அரிய புத்தகம்

உலகத்திலேயே பெரிய கலைக்களஞ்சியம் ஒன்று சீன தேசத்தில் இருந்தது. அது அச்சாகவும் இல்லை; கிடைக்கவும் கிடைக்காது. மிங் அரசவம்சம் அங்கே ஆண்டுவந்தபோது யுங்லோ என்பவர் அதைத் தொகுத்தாராம். அது மொத்தம் 22,937 தொகுதிகள் ஆயிற்றும். ஏராளமான பேர்களை வைத்து அதை மூன்று பிரதிகள் எடுத்தார்களாம். மிங் வம்சம் வீழ்ந்தது; அதோடு இரண்டு பிரதிகள் காணமல்போய்விட்டன. மிகுந்திருந்த ஒன்றும் பாக்ஸர் கலகத்தின்போது இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

—'தி லீடர்', லண்டன்.

குழந்தையின் வெறி

எப். ஏ. ஹாலண்டர்

கோபவெறி என்று சொல்கிறோமே; இந்த மாதிரி வெறி குழந்தையிடம் ஏற்படுவது சகஜம். ஏதோ காரணம்; அதற்குத் திடீரென்று வெறி வந்துவிடுகிறது. அவ்வளவுதான்; கீழே விழுந்து புரளும்; அடித்து உதைத்துக் கொள்ளும்; திட்டும். அதன் உடம்பு விறைததுப் போய்விடும்; சில சமயம் மூச்சே நின்றுபோய்விட்ட மாதிரிகூடத் தோன்றும். அப்போது பெற்றோர்கள் என்ன செய்வார்கள்? அதைச் சமாளிப்பது எப்படி? வளரும் குழந்தைக்கு இப்படிக் கோபவெறி உண்டாவது சகஜமே. இது ஏன் என்று ஆராயும்போது, மனத்தத்துவ நிபுணர்கள் செய்துள்ள சில முடிவுகளும் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் தங்கள் அநுபவத்திலிருந்து அறிந்த சில விஷயங்களும் தெளிவாயின.

குழந்தையின் வெறி பலமான கோபத்தின் விளைவுதான். அளவு மீறி எழும் கோபத்தை அடக்க முடியாமல் போகும்போது வெறியாக மாறுகிறது. அதுவே நிதானமாக இருக்கும்போது நியாயமான கோபமாகவும் நம் வெறுப்பையும் அதிருப்தியையும் காட்டும் உணர்ச்சியாகவும் இருக்கிறது. குழந்தை தன் உணர்ச்சிகளை வெளிக்காட்ட வொட்டாமல் அதை அடக்குவது சரியல்ல.

> ‘குழந்தை என்னமாய்ப் படுத்துகிறது!’ என்று அதன் மீது நமக்கு ஆத்திரம் ஆத்திரமாய் வரும். ஆனால், காரணத்தை அறிந்துகொள்ள வேண்டும்.

குழந்தைக்குக் கோபவெறி உண்டாகும்போது அதன் சேஷ்டைகள் வெளிப்படையாக மட்டும் தெரிவதில்லை. விழிகள் பிதுங்கும்; நரம்புகள் புடைத்துக்கொள்ளும். உடம்பிலே ‘அட்ரினாலின்’ கிரந்தியும் வேர்வைக் கிரந்தியும் வேலை செய்யும். வெறி அடக்க முடியாத நிலைமைக்குச் சென்றுவிடும். புயல் அடிப்பது போல் அடித்துத் தான் அந்த வெறி ஓயும்.

குழந்தைக்குப் பிறவியிலே சில குணங்கள் அமைந்திருக்கின்றன. அவை வெளிப்படும் சமயத்தில் நாம் குறுக்கிட்டால், குழந்தைக்கு வீம்பு உண்டாகிறது. அந்தப் பிறவிக் குணங்களின் பலம் ஓரளவுக்கு வம்சவழியைச் சார்ந்திருப்பது உண்மைதான். என்றாலும், சூழ்நிலையும் வளர்க்கும் முறையுமே அந்தக் குணங்களுக்கு வழியும் உருவமும் கொடுக்கின்றன.

சிறுவன் வளரும்போது எவ்வளவோ விதமாக அவன் குணங்கள் மாறலாம். சுற்றிலும் இருப்

காப்பிரைட் : பேரண்ட்ஸ் மகஸின் (ஆங்கிலம் : பிப்ரவரி '49), சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

பவர்களுக்குக் கோபம் வந்தால் ஆவேசம் உண்டாவது சகஜம்; அதைப் பார்த்துவிட்டு அவனும் அவர்களைப்போல் கோபத்தைக் காட்டுவான். ஆனால் குழந்தை தன் இஷ்டத்தைச் சாதித்துக்கொள்ள அது சௌகரியமாயிருப்பதால் அதுவே வழக்கமாகிவிடுகிறது.

பொதுவாக ஆறுமாதத்திலேயே குழந்தையினிடம் இந்த வீம்புக் குணம் வெளியாகும். அது மேலும் மேலும் வளர்ந்து இரண்டிலிருந்து மூன்று வயதுக்குள் உச்சநிலையை அடைந்துவிடும். இந்தச் சமயத்தில் அதைச் சமாளிப்பதுதான் மிகவும் சிரமம். அதற்குப் பிறகு இந்த வெறி கொஞ்சம் குறையும். நான்கு வயதுக்குமேல் கோப வெறிக்குப் பதிலாக உள்ளுக்குள்ளேயே குமுறுவதுடன், கேட்டால் கூடப் பதில் சொல்லாமல் குழந்தை தன் ஆத்திரத்தைக் காட்டும்.

குழந்தையின் பலவீனமான தேகநிலைமை, சுற்றுப்புறத்தின் கோளாறு, வளர்ப்பு முறையின் குறைகள் இவையே பெரும்பாலும் இந்தமாதிரி வெறிக்குக் காரணம். நோயுள்ள குழந்தைக்குத்தான் கோபவெறி உடனே உண்டாகும். தூக்கம் கெடுவது, பசி, புஷ்டிக் குறைவான ஆகாரம், ஒய்ச்சல் இவையும் காரணமாக இருந்தாலும் வளர்ப்பதிலுள்ள தவறுகளும் சூழ்நிலைமையுமே முக்கிய காரணங்கள்.

குழந்தை விளையாடும்போதோ எதாவது செய்துகொண்டிருக்கும்போதோ நடுவில் தடுப்பது, குழந்தையின் எதிரில் பெரியவர்கள் தங்கள் படபடப்பையும் கோபத்தையும் காட்டுவது, அதைக் கவனிக்க வேண்டிய சமயத்தில் கவனிக்காமல் இருப்பது இவையெல்லாம் குழந்தையின் வெறியை வளர்க்கும்.

இது போக, சாப்பிடுவது, தூங்குவது முதலிய விஷயங்களில் குழந்தையைக் கண்டிப்பான முறையில் வளர்க்கத் தவறிவிட்டால் இன்னும் கேட்க வேண்டியதில்லை!

மின்னஸோடா சர்வகலாசாலையைச் சேர்ந்த டாக்டர் பிளாரென்ஸ் குடெனப் என்பவர் குழந்தையின் கோபத்தைப்பற்றி நன்றாக ஆராய்ச்சி செய்திருக்கிறார். தூங்க வைப்பது, உடை அணிந்து விடுவது, சாப்பிடும் நேரம், ஒரேவிதமான உணவு இந்தமாதிரி தினசரி அலுவல்களின்போதுதான் நாம் சொல்வதைக் கேட்காமல் குழந்தை பிடிவாதம் பிடிக்குமாம். தன்னை ஒருவரும் கவனிக்காமலோ, தன் விருப்பத்தைப் பிறர் புரிந்து கொள்ளாமலோ இருக்கும்போதும் அதற்குக் கோபவெறி உண்டாகுமாம்.

சரியான தூக்கம் இல்லாததால் படுக்கையில் மூத்திரம் பெய்து கொள்வது, ஜலதோஷம், மலச்சிக்கல், அஜீர்ணம் இந்தமாதிரி எதாவது நேர்ந்தால் குழந்தையின் வெறி அதிகமாகும். வீட்டில் பெற்றோர்களைத் தவிர வேறு எவரைக் கண்டாலும், குழந்தையின் மனம் கெட்டுப்போய் வெறி வந்துவிடுமாம்.

இதிலிருந்து குழந்தைப் பருவத்தில் இப்படி வெறி வருவது சகஜந்தான் என்று தெரிகிறது. உள்ளேயிருந்து கிளம்பும் உணர்ச்சிகளை அடக்கக் கூடாது. அவைகளைத் தகுந்த முறையில் வெளியிடும்படி செய்வது எப்படி என்றுதான் பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டும். கோப உணர்ச்சி உண்டாவது தவறு இல்லை. அதைச் சரியாக அடக்கி ஆளுவதுதான் முக்கியம். கோபம் உண்டாகும்போது குழந்தைக்கு நல்ல புத்தி புகட்ட அதை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்த

வேண்டும். ஆனால் கூடியமட்டும் கோபம் வராமல் தடுப்பதுதான் நல்லது. தேக ஆரோக்கியத்துடன் சரியான சூழ்நிலையில் ஒழுங்கான முறையில் வளர்ந்த குழந்தைகளுக்கு அதிகமாகக் கோபம் வருவதில்லை. இதற்காக அப்போதைக்கப்போது குழந்தைகளை டாக்டர்களிடம் காட்டுவது நல்லது.

இரவில் நன்றாய்த் தூங்குவதுடன் பகல் வேளையிலும் கொஞ்ச நேரம் குழந்தை தூங்க வேண்டும்; அதற்கு ஆகாரமும் தகுந்தபடி கொடுக்க வேண்டும். இந்தமாதிரி விஷயங்களில் பெற்றோர்கள் கண்டிப்பாக இருக்கக்கூடாது. "சரி, இனிமேல் படுத்துத் தூங்கவேண்டும்; தெரியுமா?" என்று நயமாகச் சொன்னாலே போதும்; குழந்தை தூங்கிவிடும். விளையாடும்போதும் அதன் இஷ்டப்படி விளையாட விடவேண்டும். அதிலிருந்து, தன் விருப்பப்படியும் நடக்க முடியும் என்று குழந்தை தெரிந்துகொள்ளும். அப்போது கவலையோ கோபமோ ஆத்திரமோ அதற்கு ஏற்படாது. ஆனால் அதற்காகக் குழந்தையை அதிகமாகக் கவனிக்கவோ அது சொன்னபடியெல்லாம் கேட்டு நடக்கவோ கூடாது.

'தகப்பனைப்போல் பிள்ளை' என்று சொல்வதில்லையா? வீட்டிலே பெற்றோர்கள் கண்டபடி கோபதாபத்தை வெளியிடாதிருந்தால் அது குழந்தையின் அதிருஷ்டந்தான். அவர்கள் எவ்வளவு கஷ்டப்பட்டுக் கவனித்தும் குழந்தைக்குச் சில சமயம் இந்தக் கோபவெறி வருவதுண்டு. அதற்கு என்ன செய்யலாம்? குழந்தைக்கு வெறி உண்டாகும்போது முதலிலேயே சாமர்த்தியமாக அதன் கவனத்தை வேறு எதிலாவது திருப்பிவிடவேண்டும். அதனால் பயன் ஏற்படலாம். குழந்தையின் வெறி அடங்கும் வரையில் பொறுமையாய்க் காத்திருக்கவேண்டும்.

தன்னைக் கவனிக்க வேண்டும் என்பதற்காகக் குழந்தை வீம்பு பிடித்தால் அதைப் பேசாமல் தனியே விட்டுவிட்டு அப்புறம் போய்விடவேண்டும். ஆனால் அதன் கோபம் தணிந்தபிறகு அதனுடன் சற்றுநேரம் இருந்து அதற்கு ஈடு செய்யவேண்டும். குழந்தையிடம் எப்பொழுதும் அன்பும் சிரத்தையும் காட்டவேண்டும். அதற்குக் கோப வெறி வரும் சமயத்தில் இரைந்து கத்தவோ தர்க்கம் செய்யவோ கூடாது. குழந்தையின் கோபம் உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் வெளியாவதே நல்லது; பெற்றோர்கள் அதை அடக்கப் பார்ப்பது தவறு. மன்னிப்புக் கேட்டுக்கொள்ளச் சொல்லவும் கூடாது; அது செய்த பிசகை எடுத்துக் காட்டிப் பாடம் கற்பிக்கவும் கூடாது. குழந்தைக்கு வெறி வரும் சமயத்தில் அதை அடித்துத் தண்டிப்பதும் தவறு. அப்போது கையில் ஒரு பந்தைக் கொடுங்கள். அதை வேண்டுமானால் நசுக்கிப் பிய்த்துக்கொண்டிருக்கட்டும். தம்பட்டம் இருந்தாலும் கொடுக்கலாம். அதை அடித்துக் கிழிக்கட்டும். குழந்தை தன் கோபத்தை இவைகளின்மேல் காட்டுவதில் தவறு ஒன்றுமில்லை. இந்த மாதிரி கோபவெறியைக் கண்டு பயப்படாதீர்கள். இதைச் சமாளிக்கும் விதம் தெரிந்து சமாளித்தோமானால், குழந்தை பெரியவனாகும்போது தன் உணர்ச்சிகளை அடக்கிக்கொள்வான்; சரியான முறையில் அவைகளை வெளியிடவும் அவனுக்குச் சக்தி ஏற்படும்.

க்விஸ் விடை

(11 - ஆம் பக்கத்திலுள்ள கேள்விகளுக்கு விடை)

அரசியல்:

1. (அ) 1934.
(ஆ) 1906.
(இ) 1924.

2. களா வேங்கட ராவ்.

3. எச். பி. மோடி.

விஞ்ஞானம்:

1. உஷ்ணத்தைப் பாதுகாப்பதற்குத்தான். அந்தப்பூச்சு உஷ்ண அலைகளை வெளியே விடாமல் உள்ளேயே திருப்பிவிடுகிறது.

2. நம் இஷ்டப்படி இரண்டில் எதை வேண்டுமானாலும் அறுக்க முடியும். பிடித்த பிடியைத் தளர விடாமல் ஒரே மூச்சாகத் தொடர்ந்து இழுத்தால் மேல்பகுதி அறுபடும். கயிற்றைத் தளரவிட்டுக் குலுக்கி இழுத்தால் கீழ்ப்பகுதி அறுபடும். கீழ்ப்பகுதிக் கயிற்றை நாம் குலுக்கி இழுக்கும்போது நமது சக்தி புத்தகத்தைத் தாண்டிச் செல்வதில்லை; புத்தகம் தடுத்துவிடுகிறது. நிதானமாக இழுக்கும்போது நமது சக்தி அதைத் தாண்டிச் செல்கிறது. இதுதான் சூட்சுமம்.

பொது:

1. 'பெங்கால் கெஜெட்'; கல்கத்தாவில்; 1780 ஜனவரி 29 - இல். (ஜேம்ஸ் அகஸ்டஸ் ஹிக்கி என்பவர் ஆசிரியர்.)

2. 10 வருஷம். (ஆனால் மூல ஆசிரியரோ அவர் அநுமதி பெற்ற வேறு எவரோ ஒரு மொழிபெயர்ப்புச் செய்து வெளியிட்டிருந்தால் அந்த மொழிபெயர்ப்பை வேறு யாரும் பிரசுரிக்கக்கூடாது.)

3. 1000 பகுதிகள்.

செய்தி:

1. சமீபத்தில் காலமானார் (ஏப்ரல் மத்தியில்).

2. ஜெர்மனியில் தண்டனை அடைந்தார். (ஹிட்லர் இன்னும் உயிருடன் இருக்கிறார் என்ற துண்டுப் பிரசுரம் வழங்கியதற்காக).

3. பிஹார் கவர்னர் எம். எஸ். அணே.

சரித்திரம்:

1. 11 - ஆம் நூற்றாண்டில் ஒரிஸ்ஸா அரசர் அனந்தவர்மா சோழகங்கதேவர் கட்டினார்.

2. 10,000 பேர் படித்தார்கள்; 100 மண்டபங்கள் இருந்தன.

3. 1857-இல். (இது மாத்திரம் அல்ல; கல்கத்தா, பம்பாய் சர்வகலாசாலைகளும் அப்போதுதான் ஸ்தாபிதமாயின.)

விளையாட்டு:

1. ஐக்கிய அமெரிக்கா.

2. 1789-மே 4-இல் எப்ஸம் என்ற இடத்தில்.

3. போலோ.

யுக்தி:

1. உயரம் அதிகம் என்றுதான் உங்களுக்குப் பெரும்பாலும் தோன்றும்; ஏனென்றால் அடி வட்டத்தின் குறுக்களவுதான் சட்டென்று கண்ணில் படும். ஆனால் அதைப் போல மூன்று பங்குக்குமேல் அடி வட்டச் சுற்றளவு இருப்பது நிச்சயம். எந்த டம்ளரின் உயர அளவும் இதற்குக் குறைவாகத்தான் இருக்கும்.

2. பட்சி இறகுதான் அதிக கனம். ஏன் தெரியுமா? பட்சி இறகை அவர்டுபாய்ஸ் நிறையாக நிறுக்கிறார்கள். இதன்படி 16 அவுன்ஸ் கொண்டது ஒரு பவுண்டு. தங்கத்தை ட்ராய் நிறையால் நிறுக்கிறார்கள். இதன்படி 12 அவுன்ஸ் கொண்டது ஒரு பவுண்டு.

இது ஒரு கற்பனைதான்; எந்த ஆளையும் குறிப்பதல்ல. ஆனால், எங்கேதான் நடக்கவில்லை?

ஊருக்கு உபதேசம்

ஜகதீச சந்திரர்

ரமேசன் வேகமாக வண்டிக்குள் புகுந்தான். அப்பப்பா! வண்டியில் ஏறுவதற்குள் அவன் பட்ட பாடு! இந்தக் காலத்தில் ரெயில் பிரயாணம் செய்வது ஒரு பெரிய கண்டம். இப்போது எப்படியோ உள்ளே வந்தாயிற்று; ஒரு மூலையில் இடம் பிடித்தாயிற்று; ஒரு பெருமூச்சு விட்டு விட்டு நெற்றி வேர்வையைத் துடைத்துக்கொண்டான். சில விநாடிகளில் வண்டி ஊதி ஒரு குலுக்குக் குலுக்கியது; அப்போது நடுத்தர வயதுள்ள கனவான் ஒருவர் திறந்திருந்த கதவு வழியே தாண்டிக் குதித்து உள்ளே வந்தார். உடனே உள்ளிருந்து கதவைத் தாழிட்டு மூடினார். மூக்குக் கண்ணாடியும் கதராடையும் தரித்திருந்தார் அவர். மிகவும் வேதனைப்பட்டவராகத் தோன்றினார். மிகவும் களைத்துப் போனவரைப்போலக் கண்ணாடிக் கதவின்மேல் சாய்ந்து கொண்டு கையில் இருந்த பத்திரிகையால் விசிறிக்கொண்டார்.

வண்டி வேகமாகப் போகத் தொடங்கியதும் அவருக்குக் கொஞ்சம் சிரமம் நீங்கியது. மூக்குக் கண்ணாடி வழியாக அந்தப் பெட்டியை ஒரு பார்வை பார்த்தார். வண்டி முழுவதும் ஒரே நெரிசல். ஒரே ஒரு மூலையில் ஒரு கிழவன் ஆசனத்தில் கால்களை வைத்துக்கொண்டு ஜன்னலின் வழியே வெளியே பார்த்துக்கொண்டிருந்தான். வந்த மனிதர் அந்த இடத்துக்கு முண்டியடித்துக் கொண்டு போய் அந்தக் கிழவன் முழங்காலைத் தட்டி, இடம் விடும்படி சொன்னார். மற்றப் பிரயாணிகளுக்குக் கொஞ்சம் எரிச்சல் உண்டாயிற்று. கிழவன் வியப்படைந்தவனைப்போல அந்தப் புதிய மனிதரை ஏறெடுத்துப் பார்த்து விட்டு, தள்ளி உட்கார்ந்தான். இப்படியாக, கடைசியில் வந்து ஏறிய ஆசாமியும் ஆசனத்தில் பொருந்திக் கொண்டார்; தம் கையிலே இருந்த பத்திரிகையைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார்.

ரெயில் முழுவேகத்தில் போய்க் கொண்டிருந்தது. பிரயாணிகள் யாவரும் ஒருவாறு சமாளித்துக் கொண்டு விட்டார்கள். ரமேசன் அந்தப் பெட்டியில் உள்ளவர்களைப் பார்த்து ஆராய முடிந்தது. சிலர் தூங்க ஆரம்பித்துவிட்டார்கள்; மற்றவர்கள், வெளியில் வேகமாக வந்து வந்து மறையும் மரங்களையும் தந்திக் கம்பிகளையும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவனுக்குப் பின் இருந்த ஆசனத்தில் ஐரோப்பிய உடையில் ஒரு கனவான் தம் கையில் சிறிய 'பெங்குவின் வெளியீடு' ஒன்றை வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அடிக்கொரு

மூலம்: ரிபப்ளிக் (ஆங்கிலம்: 10-4-'49), சென்னை.

தடவை அவர் தம்முடைய ஓரக் கண்ணால் அந்தப் பெட்டியிலுள்ள பிரயாணிகளைப் பார்த்தார்.

கதர் ஆடை உடுத்த கனவான் இப்போது பத்திரிகையின் தலையங்கம் வாசிப்பதில் ஆழ்ந்திருந்தார். அவருக்கு முன்னால் ஒரு ரெயில்வே உத்தியோகஸ்தர் சோம்பலாக உட்கார்ந்துகொண் டிருந்தார். அவருடைய கறுப்பு உடை, மேல் மூடியுள்ள சட்டைப் பைகள், கையிலுள்ள டிக்கட் நறுக்கி ஆகிய இவ்வளவும் அவர் டிக்கட் பரிசோதகர் என்பதைக் காட்டின. எல்லாப் பெட்டிகளிலும் மிக அதிகமான ஜனநெருக்கம் இருந்ததால் தம்முடைய சிரமமான கடமையைச் செய்வதைக்காட்டிலும் இந்த இரண்டாம் வகுப்பு வண்டியில் அமர்ந்திருப்பதே நல்லதென்று நினைத்தார் போலும்!

கதராடைக்காரர் பத்திரிகையைப் படித்து முடித்தார். பத்திரிகையைச் சுருட்டியபடியே, "என்ன மோசமான கூட்டம்!" என்று தாமே சொல்லிக்கொண்டார்.

"மகா மோசம்!" என்றார் டிக்கட் பரிசோதகர்.

"இங்கே பாருங்கள். இன்று ரெயில் தப்பியே போயிருக்கும். ஊர்ப்பட்ட மூட்டைகள் இருந்தன. அவற்றை வேறே பெட்டியில் வைத்துவிட்டு நான் இங்கே வந்தேன். இந்த ஸ்டேஷனில் ரெயில் நிற்பது மிகவும் கொஞ்ச நேரந்தான், ஏன் இன்னும் அதிகமாக வண்டிகளை விடக்கூடாதென்று கேட்கிறேன்!" என்று ரெயில் உத்தியோகஸ்தரைப் பார்த்துப் பேசினார் கதர்க்காரர்.

"ஏனென்றால், அது சாமான்ய ஜனங்களுக்கு அநுகூலமாக இருந்துவிடுமே! அவர்களைப்பற்றி அதிகாரிகளுக்கு என்ன கவலை? பண மூட்டைகளைப்பற்றித்தான் அவர்களுக்குக் கவலை. இந்த வருஷத்து வரவு செலவுத் திட்டத்தைத்தான் பார்த்திருப்பீர்களே? எல்லாம் பணக்காரருக்கு வரி குறைப்பு; ஏழைக்கு வரிகள்" என்று எரிச்சலோடு பதில் வந்தது.

கதராடைக்காரர் இந்த விடையை எதிர்பார்க்கவில்லை. "அதெல்லாம் தேசத்தின் நன்மைக்கு உகந்த காரியம். நம் தலைவர்களிடத்தில் நமக்குக் கொஞ்சம் நம்பிக்கை இருக்கவேண்டும். அவர்கள் உழைத்து வைரம் பாய்ந்தவர்கள். சில மாதங்களுக்குள் சிக்கலான பிரச்னைகளைத் தீர்த்திருக்கிறார்கள்; நிச்சயமாக நம் நாட்டில் சுபிட்சமும் சுகமும் உண்டாக ஏற்பாடு செய்வார்கள்" என்றார்.

"பிரச்னைகளைத் தீர்த்தார்களா! அதிகப்படுத்தியிருக்கிறார்கள். இன்றைக்கு இந்தியாவில் என்ன பார்க்கிறோம்? எங்கே பார்த்தாலும் அக்கிரமம், லஞ்சம், கொடுங்கோன்மை. கவர்ன்மெண்டாரிடமிருந்து ஏதாவது வேணுமானால் அதிகாரிகள் கையில் ஏதாவது அழுத்துங்கள்; உடனே காரியம் ஆகிவிடும். உத்தியோகம் வேண்டுமானால் யாராவது பெரிய மனிதரிடமிருந்து ஒரு சீட்டு வாங்கி வரவேண்டும். ஜனங்கள் எதற்காகப் பாடுபட்டுத் தியாகம் செய்தார்களோ அந்தச் சுதந்தர இந்தியா இதுதானா? பேர்தான் மாறியிருக்கிறதே ஒழியப் பழைய கறுப்பனேதான். இன்னும் மோசம்."

கதர்க்காரர் உடனே பதில் சொன்னார்: "இதற்கு யார் பொறுப்பாளி? நாமா? நம் தலைவர்களா? நாம் லஞ்சம் கொடுப்பதனால்தான் அதிகாரிகள் வாங்குகிறார்கள். இந்த அதி

காரிகள் யார்? நம்மைச் சேர்ந்தவர்களே. இதற்காக நாம் தலைவர்களைக் குறை கூறக் கூடாது. நமக்குத்தான் சமுதாய நீதி தெரியவில்லை. முதலில் நம்முடைய வீட்டைச் சுத்தப்படுத்திக்கொண்டு பிறகுதான் மற்றவர்களைப்பற்றிக் குறைகூற வரவேண்டும்.''

இதைச் சொல்லிவிட்டு, ஜனங்களை வெற்றி மிடுக்குத் தோன்ற ஒரு பார்வை பார்த்தார். அவர்கள் கை தட்டுவார்கள் என்று எதிர்பார்த்தாரோ?

ஐரோப்பிய உடுப்பணிந்த கனவான் இதற்குள் கையிலிருந்த புத்தகத்தைப் பக்கத்தில் வைத்துவிட்டு இந்தச் சம்பாஷணையில் கலந்துகொண்டார்.

“இந்த விஷயம் மனசுக்குப் பிடிக்காததாக இருந்தாலும், நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். சுதந்தரம் வந்த பிறகு அக்கிரமமும் லஞ்சமும் மிதமிஞ்சிப் பெருகிவிட்டன. நம்முடைய நாட்டுக்கே இது ஒரு மாசு. ஒன்று, நாம் அவற்றை அழிக்கவேண்டும்; இல்லாவிட்டால் அவை நம்மை அழித்துவிடும்'' என்று சமாதானமான குரலோடு அவர் பேசினார்.

டிக்கட் பரிசோதகர் சமாதானம் அடைபவராக இல்லை. அவர் எதிர்வாதம் செய்யத் தொடங்கினார்: “பின்னே, சாமானிய மனிதன் என்ன செய்வது? பட்டினி கிடக்கும் மனிதன் நாட்டைப்பற்றி நினைக்க முடியாது. இப்போது பாருங்கள்; நாங்கள் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்கள். நாங்கள் சம்பள உயர்வு கேட்டால், நம் நாடு ஏழை நாடென்று அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் என்ன செய்கிறார்கள், தெரியுமா? முன்பு மாகாண மந்திரிகள் ஐந்நூறு ரூபாய்க்குமேல் சம்பளம் வாங்கக்கூடாதென்று தீர்மானித்திருந்தார்கள். அதிகாரத்துக்கு வந்தார்களோ இல்லையோ, உடனே விலைவாசி ஏறிவிட்டதென்று 3000 ரூபாய் சம்பளம் போட்டுக்கொண்டார்கள். பதவியினால் விலைவாசி உயர்ந்து விட்டதா? நாங்களும் மனிதர்கள் அல்லவா? எங்களைப் பட்டினி போட்டால், அது தேசநலம்; அவர்கள் கணக்குக்கு மிஞ்சி வாங்கினால் அது அவர்கள் வாழ்க்கைத் தரம்!''

கதராடைக்காரருக்கு இது பொறுக்கவில்லை. அவர் மூக்குக் கண்ணாடியைக் கொஞ்சம் மேலே தள்ளிக்கொண்டார்; “எப்படியானாலும் அவர்களுக்குக் கொஞ்சம் அவகாசம் கொடுக்கவேண்டும். அவர்கள் கையில் ஏதோ மந்திரக் கோல் இருப்பதாகவும் ஒரே நாளில் எல்லாவற்றையும் சரிப்படுத்தி விடுவார்களென்றும் நீங்கள் நினைக்கிறீர்கள். இந்த அரசாங்கத்தை அவர்கள் ஒப்புக்கொண்ட சந்தர்ப்பத்தைச் சற்று யோசித்துப் பாருங்கள். மூச்சுவிடக்கூட நேரம் இல்லை. நாம் கவர்ன்மெண்டைக் கண்டித்துக் கொண்டே இருக்கிறோம். காங்கிரஸ் போகும் வழியில் நாம் நடப்பதில்லை. சுதந்தரமென்பது நல்லது, பொல்லாதது எல்லாவற்றையும் செய்யும் உரிமையென்று நினைக்கிறோம். பிறகு நம் தலைவர்கள் சில நாட்களுக்குள் நம்மை ஐசுவரியத்தில் புரளும்படி செய்யவேண்டுமென்று எதிர்பார்க்கிறோம்!''

“காங்கிரஸா!'' என்று முழங்கினார் மற்ற நண்பர். “காங்கிரஸ்

காரர்களைப்பற்றிப் பேசாமல் இருப்பதே நல்லது. கிடைத்த சுதந்தரத்துக்கு அபாயம் வரலாமென்று காந்தியடிகள் சொன்னார். அது நிஜமாகிக் கொண்டு வருகிறது. காங்கிரஸ் காரர்களென்று சொல்லிக்கொள்கிறார்களே, அவர்கள் எவ்வளவு மட்டமான குணமுடையவர்களாகி விட்டார்கள் என்பதைப் பாருங்கள். பதவியும் செல்வாக்கும் அவர்கள் தலையைத் திருப்பிவிட்டன. காந்தி குல்லாய் போட்டவன் யாரானாலும் தன்னை இந்தியாவின் பிரதம மந்திரி என்றே நினைத்துக்கொள்கிறான். சில நாள் சிறையில் இருந்து விட்டால் போதும்; அவன் உடனே ஏதாவது சலுகையோ பதவியோ தனக்குக் கிடைப்பது சட்ட பூர்வமான உரிமை என்று நினைத்துக் கொள்கிறான். பியூன் முதல் மந்திரி வரையில் எல்லாருக்கும் தலை திரும்பிப் போயிருக்கிறது. பதவிப் பசி பீடித்த இந்தக் காங்கிரஸ் காரர்களுக்கும் திருடர்களுக்கும் என்ன வித்தியாசம்? திருடர்கள் முதலில் திருடிவிட்டுப் பிறகு ஜெயிலுக்குப் போகிறார்கள்; இந்தக் காங்கிரஸ்காரர்களோ முதலில் ஜெயிலுக்குப் போய்வந்து பிறகு...'' அவர் பேச்சை நிறுத்தினார்.

கதராடைக் கனவானுக்குக் கோபம் மூண்டது. ''அப்படியானால் நீங்கள் ஏன் இவர்களுக்கு வோட்டுப்போட்டீர்கள்? தேர்தல் வந்தால், இந்த மனிதர் உம்முடைய சொந்தக்காரருக்கு ஒன்று விட்ட தம்பிக்கு மச்சான் முறையாக வேண்டுமென்றும், அந்த மனிதர் உங்கள் சிநேகிதருக்கு வேண்டியவரென்றும் சொல்லி வோட்டுப் போடுகிறீர்கள். உங்கள் வோட்டுக்குள்ள மதிப்பை நீங்கள் தெரிந்துகொள்வதில்லை. இந்த மனிதர்களை அங்கே தேர்ந்தனுப்புபவர் யார்? பொது ஜனங்களே. அந்த ஜனங்கள் தங்களுக்கு ஏற்ற கவர்ன்மெண்டை அடைகிறார்கள் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். தங்கள் பிரதிநிதிகள் அக்கிரமக்காரர்களானால், அவர்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய ஜனங்களும் அக்கிரமக்காரர்கள் என்றுதான் அர்த்தம்.''

டிக்கட் பரிசோதகர் தேர்ச்சி பெற்ற விவாதத் திறமை உள்ளவரென்று தோன்றியது. அவர் சுலபத்தில் பின்னிடுபவராகத் தெரியவில்லை. ''அவர்களுக்கு வோட்டுப் போடுகிறவர்கள் யார்? இவன், அவன் என்று தனி மனிதனை நினைத்து நாங்கள் வோட்டுப் போடுவதில்லையே! நாங்கள் இந்திய தேசீயக் காங்கிரஸுக்கு வோட்டுப் போடுகிறோம்; நேருவுக்கும் படேலுக்கும் வோட்டுப் போடுகிறோம். தாங்கள் பொறுக்கும் ஆசாமிகள் யோக்கியர்களாகவும் ஒழுக்கமுள்ளவர்களாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளவேண்டியது அவர்கள் வேலை. அந்த ஆசாமிகள் சரியாக இல்லாவிட்டால் அவர்களுக்குச் சீட்டுக் கொடுத்துவிடவேண்டும். தலைவர்கள் எதற்காக இருக்கிறார்கள்? தலைவர் என்பவர் தம் வழியே ஜனங்களை நடத்தவேண்டுமே ஒழிய, அவர்கள் வழியே தாம் போகக் கூடாது. அவர்கள் வழி காட்ட வேண்டும்; இல்லாவிட்டால் விலகி விடவேண்டும்'' என்றார்.

வண்டியின் வேகம் குறையலாயிற்று. இருவரும் ஆசனத்திலிருந்து எழுந்தார்கள். ஆயினும் கதர்க்காரருக்கு எதிராளியை ஜயத்தோடு செல்லும்படி விட மனம் வரவில்லை. அவர் சொல்லலானார்; ''அவர்களுக்குப் பதில் யார் வருவது? இப்போதிருக்கும் நிலையில்

பதவியும் அதிகாரமும் எப்பேர்ப்பட்டவரையும் நிலை தடுமாறச் செய்து விடும். ஜவாஹர்லாலே எல்லாக் காரியத்தையும் செய்துவிட முடியாது. அவர் சில பேர்வழிகளிடத்தில் சில காரியங்களை ஒப்படைக்கத்தான் வேண்டியிருக்கிறது. நீங்களும் நானும் அந்த நிலையில் இருந்தோமானால் நாமும் அப்படித்தான் நடந்துகொண்டிருப்போம்; இன்னும் மோசமாகக்கூட இருப்போம். இப்போது நமக்கு என்ன வேண்டும்? நமது தேவை பீரங்கியும் அல்ல; பொன்னும் அல்ல; மனிதர்கள் வேண்டும். நாம் யாவரும் உயர வேண்டும். இல்லாவிட்டால் நாடு வளர்ச்சி பெறாது."

வண்டி நின்றது. வண்டியிலிருந்த ஒவ்வொரு பிரயாணியும் 'இந்த விவாதத்தை நிறுத்தமாட்டார்களா!' என்று ஏங்கினார்கள். விவாதம் செய்த இருவரும் இறங்கிவிட்டார்கள். ரமேசன் ஜன்னலின் வழியே தலையை நீட்டிப் பார்த்தான். கதர்க்காரர் பக்கத்திலிருந்த முதல் வகுப்பு வண்டிக்குப் போய், இரண்டு கூலிகளைக் கூப்பிட்டு அங்குள்ள தம் மூட்டை முடிச்சுகளை வெளியே எடுக்க ஆரம்பித்தார். அரை டஜன் பெட்டிகள், மூன்று படுக்கைகள், இரண்டு சாக்குமூட்டை, ஒரு மடக்கு நாற்காலி இவைகளே அந்தச் சாமான்கள். டிக்கட் பரிசோதகர் பிளாட்பாரத்தில் சிறிது நேரம் உலாவி விட்டு அந்த இடத்தை அடைந்தார்.

அவர்கள் இருவருக்கும் ஏதோ பேச்சு நடந்தது. கனவான் சிறிது சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டவரைப் போலத் தோன்றினார். அடுத்த கணத்தில் கூலிகள் அந்த மூட்டைகளை வெளியே கொண்டு போவதை ரமேசன் கண்டான். சிறிது நேரம் கழித்துக் கதர்க்காரர் அவர்களைப் பின்பற்றினார். அவசர அவசரமாக இரண்டு ரூபாய் நோட்டு ஒன்றை டிக்கட் பரிசோதகர் தம் பைக்குள் திணித்துக்கொண்டார்.

ஒளி செலுத்தும் குழாய்

வளையக் கூடிய மஞ்சள் நிறப் 'பிளாஸ்டிக்' ஒன்று இருக்கிறது; அதற்குப் பாஸ்டரைட் என்று பெயர். ரேடார் சம்பந்தமாக நியூடன் ஸி. பாஸ்டர் என்பவர் அதைத் தயாரித்தார். வளைந்த குழாய் வழியே தண்ணீர் வருகிறதே அதே மாதிரி ஒளியும் வரமுடியும். இந்தப் 'பிளாஸ்டிக்' குழாய் மூலம் ஒளிக் கதிரைச் செலுத்தி இதைச் சுருட்டினாலும் தொடர்ந்து இதன் வழியே சென்று அந்த ஒளி வீசிக்கொண்டிருக்கும்; பளிங்கு போன்ற இதன் ஒரு முனையில் சென்று மறு முனையில் வந்து அப்படியே பளிச்சென்று பிரதிபலிக்கும்.

ஆறு அடி நீளமும் கால் முதல் இரண்டு அங்குலம் கனமும் உள்ள 'பிளாஸ்டிக்' குழாய்களைக்கூட இந்த மாதிரி செய்யலாம். நேரான குழாயில் இப்படி ஒளியைச் செலுத்துவது ஏற்கனவே தெரிந்த விஷயம். வளைந்த குழாயிலும் இது சாத்தியம் என்று இப்போதுதான் தெரிந்தது. சமீபத்தில் டாக்டர் ஹிச்காக் என்பவர் இதைச் செய்து காட்டியிருக்கிறார். இதில் உள்ள சூட்சுமம் என்னவென்றால் இந்தக் குழாயின் உட்புறம் ஒளிக்கதிரைப் பிரதிபலிக்கும் சக்தி படைத்திருக்கிறது. இதைக் கயிறுபோல் முடிந்தால்கூட ஒளி தொடர்ந்து மறு கோடியில் சென்று பிரதிபலிக்கும். —தி வால் ஸ்ட்ரீட் ஜர்னல்.

இதுதான் பிழை

[8-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. உடைய என்ற பெயரெச்சத்தோடு உம் என்பது சேர்ந்து வராது. பெயர்களோடும் வினையெச்சத்தோடும் உம் வரும். 'உடையனவும் உடையனவும் ஆகிய சுவையும் வாழ்க்கையும்' என்று எழுதுவதுதான் சரி.

2. வெந்நீர் என்பது சூடான நீர்; தண்ணீர் என்பது குளிர்ந்த நீர்; தண்மை - குளிர்ச்சி. "வெந்நித் தண்ணி" என்று பேச்சுவழக்கில் வருவதை அப்படியே 'வெந்நீர்த் தண்ணீர்' என்று எழுதுவது பிழை. வெந்நீர் என்பதே போதும்.

3. இருட்டுத் தெரிவதில்லை என்று பேசுவதுண்டு; ஆனால் வெளிச்சம் தெரிவதில்லை என்று சொல்வதற்குப் பதிலாகவே அப்படிப் பேசுகிறார்கள். எழுதும்போது அந்தப் பிழையைச் செய்வது உசிதமன்று; வெளிச்சம் தெரிவதில்லை என்றே எழுதுவது நல்லது.

4. ஆடு தீண்டாப்பாளை என்பது படரும் செடி. மரத்தில் ஏறிப் படிப்பது அல்ல. பாளை என்ற பெயரிலிருந்து, அது ஒரு மரத்தில் உண்டாவது என்று மயங்கும்படி நேர்கிறது.

5. இளைமை என்பது தவறு; இளமை என்பதே சரி. இளைய என்று வருவதனால், இளைமை என்று தவறாக எழுதுகிறார்கள். பழைய என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பழைமை என்று எழுதுவதும் இதைப் போன்றதே.

6. பாரதம் பதினெண் புராணங்களில் சேர்ந்தது அன்று; அது இதிகாசம், ராமாயணத்தைப் போல.

7. கென்யா தென்னாப்பிரிக்காவில் இருப்பதன்று; கிழக்கு ஆப்பிரிக்காவில் இருக்கிறது.

8. பலூசிஸ்தானத்துக்குப் பிரதம மந்திரி இல்லை. அது பாகிஸ்தான் மாகாணமானாலும் மத்திய அரசாங்கத்தின் நேராட்சிக்கு உட்பட்டது.

9. 'கூட்டங்கள்......போகிறார்கள்' என்பது தவறு. போகின்றன என்று இருக்கவேண்டும்; அல்லது 'கூட்டத்தினர் போகிறார்கள்' என்று இருக்கலாம்.

10. முதல் முதலாகத் தமிழில் ராமாயணத்தைக் கம்பன் இயற்றவில்லை. கம்பராமாயணத்துக்கு முன்பே தமிழில் ராமாயணங்கள் உண்டு. சங்ககாலத்தில் ஒரு ராமாயணம் இருந்தது.

11. தொல்காப்பியத்தில் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று இலக்கணங்களே உண்டு. செய்யுள், அணி என்ற இரண்டு இலக்கணங்களையும் அவற்றில் தொல்காப்பியர் அடக்கிவிட்டார். ஆகவே, தொல்காப்பியத்தில் ஐந்திலக்கணங்களின் விரிவை உணர முடியாது.

தேவையினால் ஏற்பட்டது விளையாட்டாய் மாறியது. அதுதான்—

விலங்கு வேட்டை

எம். பி. சிவதாச மேனன்

வேட்டை என்பது ஆரம்ப காலத்தில் ஒரு பொழுதுபோக்காக இல்லை. உயிரைக் காத்துக்கொள்ளும் ஒரு பெரிய காரியமாகத்தான் இருந்தது. மனிதன் உலகத்தில் வந்ததும் நீரிலும் நிலத்திலும் காற்றிலும் வாழும் பயங்கரப் பிராணிகள் அவனை எதிர்த்தன. அவை மாமிசம் தின்பவை; ஓணான், பல்லி முதலியவற்றைத் தின்பதுபோல் மனிதர்களையும் தின்று வந்தன. அதனால் மனிதன் அவற்றோடு போராட வேண்டியிருந்தது. அப்போது, 'அவைகளைக் கொல்வதா? நாம் கொலையுண்டு சாவதா?' என்ற பிரச்னையே அவன் மனத்தில் தோன்றியிருக்க வேண்டும். இந்தப் பிராணிகளைக் கொன்று உயிர் தப்புவதற்காக, கல் குந்தம், அம்பு, பலவிதக் கண்ணி இவைகளை உண்டாக்கினான்.

உலகத்து ஆதிகாவியங்களில் வரும் வீரபுருஷர்கள் எல்லாரும் இந்தமாதிரி துஷ்டப் பிராணிகளுடன் சண்டையிட்டு வெற்றியடைந்தவர்களே. மிருகங்களைப் போன்ற ராட்சசர்களையும் துஷ்டர்களையும் அவர்கள் கொன்றார்கள். நம் புராணங்களில் கவந்தன், காளிங்கன், மகிஷாசுரன் இந்தமாதிரி துஷ்டர்களையும் அவர்களை வதைத்த வீரர்களையும் பற்றி நாம் படித்திருக்கிறோம். அதேமாதிரி கிரேக்க நாட்டில் ஹெர்க்குலீஸ், ஜேஸன் முதலிய வீரர்களைப்பற்றிப் படித்திருக்கிறோம். ஒவ்வொரு நாட்டிலும் இப்படித் தங்கள் உயிரைக்கூட மதியாமல் பாடுபட்டவர்கள் உண்டு.

நாளாக ஆக இந்தமாதிரி துஷ்டப் பிராணிகளைக் கொல்வது அரசர்களின் கடமை என்று ஆயிற்று. கொஞ்சம் கொஞ்சமாக அவை குறைந்து வந்தன. அப்போது கடமை என்பது போய் வேட்டை ஒரு பொழுதுபோக்காக மாறியது. பிறகு, அதுவே தேகப்பயிற்சி என்னும் நிலைக்கு வந்துவிட்டது.

இப்போதுகூட ஏழைகள் அநேகம் பேர் வேட்டையாடித்தான் வயிறு வளர்க்கிறார்கள். கேரள நாட்டில் இந்த மாதிரி சில ஜனங்கள் இருக்கிறார்கள். சில குடியானவர்களுக்கும் வேட்டைத் தொழில் ஓரளவு தெரியும். காட்டுப்பக்கம் உள்ள வயல்களில் பகல் முழுதும் பலவகைப் பறவைகளும் இரவுகளில் கரடி, யானை, மான் போன்ற மிருகங்களும் அவர்களுக்குத் தொந்தரவு கொடுக்கும். அவை தின்பதைவிட மிதித்து நாசம் செய்வதுதான் அதிகம். இப்படிப்பட்ட இடங்களில் குடியானவர்கள் எப்போதும் காவல் இருந்துதான் தீர வேண்டும். ஒவ்வொரு வயலுக்கு நடுவிலும் மூங்கிலையும் தென்னை ஓலையையும் சேர்த்துச் சிறிய காவல் குடிசை கட்டிக்கொண்டு அதில் இருப்பார்கள். மிருகங்கள்

காப்பிரைட்: மாத்ருபூமி (மலையாளம்: 20-8-'49) கன்னிக்கோட்டை.

நெருங்காதிருக்க இரவு முழுவதும் கூச்சலிட்டுக்கொண்டே யிருப்பார்கள். இதையும் சட்டை செய்யாமல் அவை வயல்களில் இறங்கிவிடுவது உண்டு. பகல் வேளைகளில் அங்கே மேயும் ஆடு மாடுகளைப் புலியும் சிறுத்தையும் அடித்து எடுத்துக் கொண்டு போய்விடும். இந்த நிலையில் அவற்றை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது. தங்கள் உணவுப்பொருள் வீணுவதைக் கண்டு அவர்களுக்குக் கோபமும் ஆத்திரமும் ஏற்படுவது சகஜந்தானே?

'வேட்டையாடுவது பாவம்; அது இயற்கையின் அழகையே குலைத்து விடும்' என்று பலர் எண்ணுகிருர்கள். உண்மைதான்; ஆனால் ஓர் அளவுக்கு - அதாவது துஷ்டப் பிராணிகளைக் கொல்லுகிறமட்டில் - அது அவசியந்தான்.

தென் ஆப்பிரிக்காவில் 'க்ருகர் நேஷனல் பார்க்' என்ற இடத்தைப்பற்றி அநேகம்பேர் கேள்விப்பட்டிருக்கலாம். அமெரிக்காவிலும் ராக்கி மலையில் இப்படி ஓர் இடம் ஒதுக்கிவைத்து, அங்கே வாழும் பிராணிகளைக் கொல்லக்கூடாது என்று கட்டுத்திட்டம் செய்திருக்கிருர்கள். இப்படி இந்தியாவிலும் பல இடங்கள் உண்டு. ஆனால் உலகத்திலே வர வர ஜனத்தொகை அதிகமாகி வருவதால் மிருகங்கள் வாழும் காட்டிலும் மனிதன் இடந்தேடுகிருன். அப்போது தற்காப்புக்காக அவற்றை அடக்க வேண்டியிருக்கிறது. அன்பும் அஹிம்சையும் வேண்டியதுதான்; ஆனால் மனிதன் வாழவேண்டுமே; அதற்காக வேட்டையாடுவதும் ஓரளவுக்கு அவசியந்தான்.

ஓர் அதிசய சம்பவம்

ஜாவா தேசத்திலுள்ள ஒரு விஹாரத்தில் மரத்தினால் செய்த புத்த விக்கிரகம் ஒன்று இருந்தது. இங்கிலீஷ் கப்பல் தலைவன் ஒருவன் அதை அங்கிருந்து எடுத்துக்கொண்டு வந்தான். ஒரு காரணமும் இல்லாமல் திடீரென்று கப்பலில் தீப்பிடித்துக் கொண்டது. அதிலிருந்தவர்கள் அந்த விக்கிரகத்தால்தான் இப்படி நேர்ந்ததென்று எண்ணினார்கள். "அதை எறிந்தால் தான் ஆயிற்று!" என்று ஒரே பிடிவாதமாய்ப் பிடித்தார்கள். கப்பல் தலைவன் வேறு வழியின்றி அந்த விக்கிரகத்தைக் கடலில் எறிந்துவிட்டான். ஆனால் கப்பல் லிவர்பூல் போய்ச் சேர்ந்ததும் வேல்ஸ் கரையில் அது மிதந்து வந்ததாகத் தகவல் கிடைத்தது. கப்பல் தலைவனுக்கு அதை விட்டுவிட மனம் இல்லை. அவன் உடனே அங்கே போய் அதிகாரிகளிடம் விவரத்தைத் தெரிவித்து, அதை வீட்டுக்கு எடுத்துவந்தான். அது முதல் வீட்டில் அமைதியே இல்லை. திடீரென்று ஒரு நாள் அவன் மாரடைத்து இறந்துபோனான். பிறகு அவன் பெண் அதைத் தன் வீட்டுக்குக் கொண்டுபோனாள். அங்கேயும் ஏதாவது சங்கடம் நேர்ந்துகொண்டே இருந்தது. கடைசியில் ஒரு நாள் கனவில் அந்தப் புத்த விக்கிரகம் அவள் முன் தோன்றி, "ஐயோ! இந்த மாமிசமும் குடியும் எனக்குச் சகிக்கவில்லையே!" என்று சொன்னமாதிரி இருந்ததாம். இதற்குமேல் அதை அங்கே வைத்திருக்க அவளுக்குத் தைரியமில்லை. உடனே அதிகாரிகளை வரவழைத்து அதை அவர்களிடம் ஒப்படைத்தாள். இன்று அது லண்டன் மியூசியத்தில் இருக்கிறது.

சந்திப்பு

பாஸ கவி

[மனைவியோடும் மூன்று பிள்ளைகளோடும் கேசவதாசன் என்ற கிழப் பிராம்மணன் ஓடிவருகிறான். பின்னாலேயே அவர்களைத் துரத்திக்கொண்டு கடோற்கசன் வருகிறான்.]

கிழவன்: ஐயோ! இவன் யார்? செம்பட்டைத் தலைமயிரும் மஞ்சள் கண்ணுமாக வருகிறானே; கண்ணிலிருந்து பொறி பறக்கிறது! பிரளய கால ருத்திரன் போல் இருக்கிறானே!

பிள்ளைகள்: எமன் மாதிரியே இருக்கிறானே! இவன் யார், அப்பா?

பிராம்மணனின் மனைவி: இவன் ஏன் இப்படி நம்மை வதைக்கிறான்?

கடோற்கசன்: ஏ பிராம்மணா, நில் நில்! என்னைப் பார்த்து நடுங்கி ஓடுகிறாயே; உனக்குத் தைரியமில்லை? மனைவி மக்களைக் காப்பாற்றத் திறமை இல்லை? கருடனைக் கண்ட பாம்புமாதிரி ஓடி ஒளியப் பார்க்கிறாயே!—போகாதே; நில்.

கிழ: (தன் மனைவியையும் பிள்ளைகளையும் பார்த்து) பயப்படாதீர்கள்! குரலைக் கேட்டால் அவனை நம்பலாம்போல் இருக்கிறது.

கடோற்: (தனக்குள்) ஐயோ! பிராம்மணர்களைப் பணிந்து பூஜிக்க வேண்டும் என்று எனக்குத் தெரியாதா? இருந்தாலும் அம்மாவின் கட்டளையாயிற்றே; இந்தக் கொரமான காரியத்தைச் செய்துதானே ஆகவேண்டும்?

மனைவி: (கணவனைப் பார்த்து) ஏன் பேசாமல் இருக்கிறீர்கள்?

கிழ: என்ன செய்வது?

மனைவி: யாரையாவது துணைக்குக் கூப்பிடுவோமே.

முதல் பிள்ளை: யாரைக் கூப்பிடுவது?

கிழ: (மனைவியைப் பார்த்து) பயப்படாதே! பாண்டவர்கள் இங்கே கிட்ட எங்கேயோ இருக்கிறார்களாம். சண்டை என்றால் அவர்கள் துள்ளி எழுந்திருப்பார்கள்; அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிப்பார்கள். அவர்களுக்கு ஏழைகளிடம் இரக்கம் உண்டு. இவனைப்போல் துஷ்டர்களை நன்றாகத் தண்டிப்பார்கள்.

மு. பிள்ளை: அப்பா, பாண்டவர்கள் இங்கே இல்லை என்று நினைக்கிறேன். அந்த ஆசிரமத்திலிருந்து வந்த ஒரு பிராம்மணர், 'அவர்கள் தௌம்யமுனிவர் செய்யும் சூதகும்ப யாகத்தைப் பார்க்கப் போயிருக்கிறார்கள்' என்றார். ஆனால் எல்லாரும் போயிருக்க மாட்டார்கள். ஆசிரமத்துக்குக் காவலாக மத்யமனை (பாண்டவர்களில் நடுப்பிள்ளையான பீமனை) வைத்திருப்பார்கள்.

பீமனுக்கு இடும்பியிடம் பிறந்த மகன் கடோற்கசன். ஆனால் வெகு காலம் ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை. அவர்கள் முதல் முதல் சந்திக்கும் இந்த ரசமான கட்டத்தைக் காளிதாசனுக்கும் முந்திய பாஸ கவி உருக்கமாக 'மத்யம வ்யாயோகம்' என்ற நாடகத்தில் வர்ணிக்கிறார்.

கிழ: அவன் ஒருத்தன் இருந்தால் போதும்; பாண்டவர் எல்லாருமே இருப்பதாக எண்ணலாம்.

மூ. பிள்ளை: ஆனால் அவனும் இப்போது இல்லையாம்; தேகாப்பியாசம் செய்ய எங்கேயோ போயிருக்கிறானாம்.

கிழ: ஐயோ! அப்படியானால் வேறு வழி இல்லை; இவனுக்கு அடங்கித்தான் போகவேண்டும். (கடோற்கசனைப் பார்த்து) ஐயா, எங்களை விடமாட்டாயா?

கடோற்: நிபந்தனையின்மேல் விடுகிறேன்.

கிழ: என்ன நிபந்தனை?

கடோற்: என் தாயார் தன் பாரணைக்காக, "இந்தக் காட்டிலிருந்து யாராவது ஓர் ஆள் வேண்டும்; பார்த்துவா" என்று உத்தரவிட்டாள். நான் உன்னைப் பார்த்தேன். ஒரு பிள்ளையைக் கொடுத்தால் போதும். மற்றப் பிள்ளைகளையும் மனைவியையும் அழைத்துக்கொண்டு நீ தாராளமாகப் போகலாம்.

கிழ: அடே ராட்சசா! மகாதுஷ்டன் நீ! படித்தவன், நல்லவன் என்று பெயர் எடுத்துவிட்டு, பெற்ற பிள்ளையை உனக்குக் கொடுப்பேனே?

கடோற்: அந்த ஒரு பிள்ளையைக் கொடுக்காவிட்டால் குடும்பத்தோடு உன்னை அழித்துவிடுவேன்.

கிழ: இனி என்னால் ஆகவேண்டிய காரியம் ஒன்றுமில்லை. இந்தக் கிழட்டு உடலைப் பிள்ளைகளுக்காக விட்டுத் தொலைத்தால்தான் என்ன?

ம: வேண்டாம், வேண்டாம். நான் பதிவிரதை. புருஷனைக் காப்பாற்ற வேண்டியது என் கடமை. நான் போகிறேன்.

கடோற்: பெண்கள் வேண்டாம், என் தாயாருக்கு.

கிழ: ஆனால் சரி; நான் வருகிறேன்.

கடோற்: நீ கிழவன்; போ அப்பாலே.

மூ. பிள்ளை: அப்பா, என்னை அனுப்புங்கள். குடும்பமாவது தக்கும்.

இரண்டாம் பிள்ளை: மூத்தவன் குலத்துக்கு முக்கியம். நான் போகிறேன், அண்ணா.

மூன்றாம் பிள்ளை: தமையன்மார் தகப்பனுருக்குச் சமம். அதனால் நான் போகிறேன்.

கிழ: எனக்கு முதல் பிள்ளையின் மேல் அதிக ஆசை; அவனை நான் விட முடியாது.

ம: உங்களுக்கு முதல் பிள்ளை மேல் ஆசைமாதிரி எனக்கும் கடைசிப் பிள்ளைமேல் ஆசை.

இ. பிள்ளை: அப்படியானால் நான் யாருக்கு வேண்டியவன்?

கடோற்: இதோ எனக்கு. சீக்கிரம் வா.

இ. பிள்ளை: என் உயிரைக் கொடுத்தாவது பெரியவர்களைக் காப்பாற்றுகிறேன்; நான் பாக்கியசாலி தான்! பந்துக்களின் உறவு சுலபமாகக் கிட்டும்; இந்த மாதிரி எமனுடைய உறவு கொஞ்சத்தில் கிட்டுமா?—அப்பா, நமஸ்காரம்!

கிழ: மகனே, போய் வா! உன் உயிரைக் கொடுத்துப் பெரியவர்களைக் காப்பாற்றுகிறாய். இந்தப் புண்ணியம் வீண்போகாது; உனக்கு நிச்சயமாகப் பிரம்மலோகமே கிட்டும்.

இ. பிள்ளை: உங்கள் அநுக்கிரகம். அம்மா, நமஸ்காரம்.

ம: மகனே, சிரஞ்சீவியாக இரு.

இ. பிள்ளை: அம்மா, உன் அநுக்கிரகம்—அண்ணா, நமஸ்காரம்.

மூ. பிள்ளை: வா, தம்பி. உன்னை அணைத்துக் கொள்கிறேன். உலகம் முழுதும் உன் புகழ் பரவவேண்டும்.

மூ. பிள்ளை: (இரண்டாம் தமையனைப் பார்த்து) அண்ணா, நமஸ்காரம்.

இ. பிள்ளை: உனக்கு மங்களம் உண்டாக வேண்டும். (கடோற்கசனைப் பார்த்து) ஐயா, அதோ தெரிகிறதே, அந்தக் குளத்தில் கொஞ்சம் தாகசாந்தி செய்து கொண்டு வருகிறேன்.

கடோற்: போய்ச் சீக்கிரம் வா. என் தாயாருக்குச் சாப்பாட்டு வேளை நெருங்கிவிட்டது.

இ. பிள்ளை: இதோ வந்து விட்டேன். (போகிறான்.)

கிழ: ஐயோ! நான் என்ன செய்வேன்? என் மூன்று பிள்ளைகளும் மூன்று சிகரம் மாதிரி இருந்தார்களே! ஒன்று முறிந்து போச்சே!

கடோற்: (சற்று நேரம் ஆனதும் தனக்குள்) அந்தப் பையன் ஏன் இப்படி நாழிகையாக்குகிறான்? அம்மா பாரணை செய்யும் வேளைகூட ஆகிவிடும்போல் இருக்கிறதே!—(கிழவனைப் பார்த்து) ஏ பிராம்மணா! உன் பிள்ளையைக் கூப்பிடு.

கிழ: ஐயோ! மகா துஷ்டன் நீ. உன் பேச்சோ அதைவிடக் கொரேமாக இருக்கிறது!

கடோற்: கோபித்துக் கொள்கிறாயே; மன்னித்துவிடு. உன் பிள்ளையின் பெயரையாவது சொல்லு.

கிழ: அதுகூடக் கஷ்டமாகத்தான் இருக்கிறது.

கடோற்: சரி. (முதல் பிராம்மணப் பிள்ளையைப் பார்த்து) பையா, உன் சகோதரனை என்னவென்று கூப்பிடுவாய்?

மூ. பிள்ளை: மத்யமன் (நடுவில் பிறந்தவன்) என்றுதான்.

கடோற்: மத்யமனா? பொருத்தமாக இருக்கிறது. நானே அவனைக் கூப்பிடுகிறேன். ஓ மத்யமா! மத்யமா! சீக்கிரம் வா.

[பீமன் வருகிறான்]

பீமன்: இதென்ன இந்தக் காட்டில் அர்ஜுனன் குரல் மாதிரி கேட்கிறதே! இது யாருடைய குரல்? என் மனத்தைக் கவருகிறதே!

கடோற்: (தனக்குள்) இந்தப் பிராம்மணப் பையன் இன்னும் வரவில்லையே! அம்மாவின் சாப்பாட்டு வேளை கடந்து விடும்போல் இருக்கிறதே. ஓ மத்யமா! மத்யமா! சீக்கிரம் வா.

பீ: யார் அவன், என் தேகாப்பியாசத்துக்குத் தடையாக இந்தக் காட்டில், 'மத்யமா! மத்யமா!' என்று என்னைக் கூப்பிடுகிறான்? (பார்த்து) ஆ! என்ன அழகாயிருக்கிறான்! சிங்கம்போல் முகம்; கம்பீரமான குரல்; மஞ்சள் கண்கள்; உயர்ந்த மூக்கு; நீண்டு வளர்ந்த தலைமயிர்; அகன்ற மார்பு; பருத்து நீண்ட கைகள்! இவன் எவனோ பெரிய வீரனுக்கு, எவளாவது ராட்சசி வயிற்றில் பிறந்தவனாக இருக்க வேண்டும்; சந்தேகமே இல்லை.

கடோற்: நாழிகை ஆகிறதே... மத்யமா! மத்யமா! சீக்கிரம் வா!

பீ: இதோ வந்துவிட்டேன்.

கடோற்: இவர் யார், மகா விஷ்ணுமாதிரி இருக்கிறாரே! விசாலமான செந்தாமரைக் கண்கள்! ஆகா, கண்ணைக் கவருகிறதே இவர் அழகிய உருவம்! எனக்கு நெருங்கின உறவுபோல் தோன்றுகிறாரே!—ஓ மத்யமா! உன்னைத்தானே கூப்பிட்டேன்—(பீமனைப் பார்த்து) உங்கள் பெயரும் மத்யமன்தானா?

பீ: நான்தான் மத்யமன்; இந்த உலகத்தில் வேறொரு மத்யமனும் இல்லையே! ஜாதியிலும் நான் மத்ய

மன் (க்ஷத்திரியன்); சகோதரர்களிலும் நான் மத்யமனே.

கடோற்: இருக்கலாம்.

கிழ: (தனக்குள்) 'மத்யமன்' என்று சொல்லிக்கொள்கிறுனே; இவன் பீமனுகத்தான் இருக்கவேண்டும். இந்த யமனிடமிருந்து நம்மை மீட்க வந்திருக்கிறுன்.

[பிராம்மணப் பிள்ளையான மத்யமன் வருகிறுன்.]

மத்யமன்: அந்தத் தாமரைக் குளத்தில் குளித்துவிட்டு வந்தேன். பரலோகத்தில் எனக்கு நீர் எங்கே கிடைக்கப் போகிறது? அதையும் குடித்தாயிற்று. ஐயா, இதோ வந்து விட்டேன்.

கடோற்: இவ்வளவு நேரம் கழித்து வந்தாயே! வா இப்படி.

கிழ: (பீமனிடம் வந்து) மத்யமா, இந்தப் பிராம்மணக் குடும்பத்தைக் காப்பாற்றேன்!

பீமன்: நமஸ்காரம், ஸ்வாமி; பயப்படாதீர்கள்!

கிழ: நீ வாயுவைப்போல் தீர்க்காயுசாக இருக்கவேண்டும்.

பீமன்: தங்கள் ஆசீர்வாதம். என் இப்படிப் பயப்படுகிறீர்கள்? யாரிடத்தில் பயம்?

கிழ: நான் யுதிஷ்டிரர் இருந்த குரு ஜாங்கலப் பிரதேசத்தில் வசிக்கும் ஒரு பிராம்மணன். வடக்கே உத்யாமக கிராமத்தில் என் மாமா பிள்ளைக்கு உபநயனம் நடக்கிறது. அதற்காகக் குடும்பத்தோடு அங்கே புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தேன். நடு வழியில் இந்த ராட்சசன் எங்களைக் கொல்ல வந்தான்.

பீமன்: அப்படியா? உங்களை வழிமறித்தானு? இருக்கட்டும். (கடோற்கசனைப் பார்த்து) நில், நில்.

கடோற்: இதோ நின்றுவிட்டேன்.

பீமன்: ஒன்றுமே செய்யச் சக்தி இல்லாதவர்கள், பாவம்! இவர்களை விடு.

கடோற்: முடியாது.

பீமன்: (தனக்குள்) இவன் யாருடைய பிள்ளை? இந்த இளங் காளையின் பராக்கிரமத்தைப் பார்த்தால் அபிமன்யு ஞாபகம் வருகிறது. (வெளிப்படையாக) இந்தப் பிராம்மணப் பையனை விட்டுவிடு.

கடோற்: முடியாது. என் தாயாரின் கட்டளைப்படி இவனைப் பிடித்தேன்; என் தகப்பனுரே வந்து உத்தரவிட்டாலும் விடமாட்டேன்.

பீமன்: (தனக்குள்) தாயாரின் கட்டளை என்கிறுன். மனிதர்களுக்குத் தாய்தான் தெய்வம். அவள் சொல்லைக் கேட்டுத்தானே நாம் இந்த நிலைக்கு வந்திருக்கிறோம்! (வெளிப்படையாக) யார் உன் தாயார்?

கடோற்: இடும்பி என்னும் ராட்சசி. குரு வம்சச் சுடரான பாண்டவன் அவள் புருஷன்.

பீமன்: (தனக்குள்) இடும்பியின் மகனு? அழகு, திறமை, மன உறுதி எல்லாவற்றிலும் அப்பனைப் போலத்தான் இருக்கிறுன்! (வெளிப்படையாக) இந்தப் பிராம்மணப் பையனை விட்டுவிடு!

கடோற்: முடியாது.

பீமன்: ஸ்வாமி, தங்களுடைய பிள்ளையை நிறுத்திக்கொள்ளுங்கள். நான் போகிறேன், இவனேடு.

கடோற்: (தனக்குள்) சரி; இவனையே கொன்று அம்மாவிடம் கொண்டு போகிறேன். (வெளிப்படையாக) யார் அது, பிராம்மணப் பையனைத் தடுக்கிறது?

பீமன்: நான்தான்.

கடோற்: அப்படியானுல் நீ வா.

வீட்டுக்கு வீடு செய்யக்கூடிய கைத்தொழில்கள் எத்தனையோ உண்டு. ஒன்று இதோ.

பித்தான் செய்யும் முறை

சஞ்சீவ தேவ ராவ்



‘பித்தான்களை நாம் செய்ய முடியாது. தொழிலாளி செய்து தருவான்; இல்லாவிட்டால் கடையில் போய் வாங்க வேண்டும்’ என்று நாம் நினைக்கிறோம். பித்தான் செய்வது ஒன்றும் பிரமாதமில்லை. சாதாரணமாக எனக்குத் தெரிந்து இரண்டு மூன்று வழிகள் உண்டு; சொல்லுகிறேன். வேண்டுமானால் செய்து பாருங்கள்: அதற்கு என்ன என்ன சாமான்கள் வேண்டியிருக்குமோ என்று கவலைப்பட வேண்டியதில்லை. கூரான ஒரு கத்தி, ஒரு சுத்தி, ஓர் அரம், கொஞ்சம் உப்புத்தாள் இவைகளோடு பித்தான் செய்ய ½ அங்குலம் கனமுள்ள செப்புத் துண்டு, சாதாரண ஆணி, எஃகுத் துண்டு இவை இருந்தால் போதும்; முன்பின் அநுபவமில்லாமலே காசுக்காக வேலை செய்யலாம்.

உங்களிடம் ரம்பம் இருந்தால் சரி; இல்லாவிட்டால் செம்போ தகரமோ இரும்போ எஃகோ எதுவாயிருந்தாலும் அதைச் சிறிய துண்டுகளாக ஒரு பித்தானுக்கு வேண்டிய அளவுக்கு வெட்டிக் கொள்ளுங்கள். அரம் கையில் இருந்தால் நான் படத்தில் காட்டியபடி வேலை செய்யலாம். அதில் சில மாதிரிகள் கொடுத்திருக்கிறேன். அதன்படி எப்படி வேண்டுமோ துண்டுகளைக் கத்தரிக்கலாம். துண்டைக் கொஞ்சம் நீளமாகக் கத்தரித்துக்கொண்டால் நல்லது. சட்டைகளில் வைத்துத் தைக்கும் தகரப் பித்தான்கள் செய்வது மிகவும் சுலபம். வட்டமோ சதுரமோ எந்த வடிவத்தில் வேண்டுமானாலும் வெட்டி எடுத்துக் கொள்ளலாம். துரப்பணத்தாலோ அல்லது கூரிய கத்தியின் முனையாலோ தைப்பதற்கு வேண்டிய அளவு துளைகள் போட்டுக்கொள்ளலாம். கத்தியாலும் ஆணியாலும் பித்தானின்மேல் கோடுகள் கிழிக்கலாம். துளை போட்டதும் நல்ல உப்புத்தாளால் மெருகு எறும் வரையில் தேய்த்துப் பாருங்கள். செம்பானால் மிகவும் நன்றாக இருக்கும். வேண்டுமானால் அதன்மேல் எனாமல் போடலாம்; குரோமியம் பூசலாம். கடையில் நான்கு, ஐந்து ரூபாய் கொடுத்து வாங்குகிறோமே,

காப்பிரைட்: கர்மவீர் (கன்னடம்: 20-2-’49), பெங்களூர்.

அதைவிட இது நன்றாக இருக்கும். கோட்டுகளுக்கு இந்தப் பித்தானை மாட்ட $\frac{1}{2}$ அல்லது $\frac{3}{4}$ அங்குலம் நீள முள்ள செப்புக் கம்பி வேண்டி யிருக்கும். 2-ஆம் படத்தில் காட்டி யிருப்பது போல் சுத்தி யைக்கொண்டு கம்பியை வளைத்து ஒரு பக்கம் வளையமாகச் செய்ய வேண்டும். வளைத்த இந்தக் கம்பியை 3-ஆம் படத்தில் காட்டி இருப் பதுபோல் நன்றாக அராவிச் சரிப் படுத்த வேண்டும். பிறகு 4-ஆம் படத்தில் இருப்பதுபோல் பித்தா னில் ஓட்டை சரியான அளவில் - அதாவது கம்பியைக் கொஞ்சம் தட்டி நுழைக்கும்படி - போட் டுக்கொண்டால் வேலைக்கு நல்லது. அப்படி நுழைத்த கம்பி, மேலே வரும்; அதைச் சுத்தியால் நாசுக் காகத் தட்டினால் முடுக்கினமாதிரி தான். நன்றாக முடுக்கின பிறகு உப்புத்தாளால் தேய்க்க வேண்டி யது ஒன்றுதான் பாக்கி. அப்புறம் பித்தானைத் தாராளமாக உபயோ கிக்கலாம். இவ்வளவும் அரை மணி நேரத்தில் செய்து விடலாம். அதற்குமேல் மெருகு ஏற்றுவதோ எனமல் பூசுவதோ நம் இஷ்டம்.

'ஸ்டட்' (Stud) என்னும் வகையைச் சேர்ந்த பித்தான் எப் படிச் செய்யவேண்டும் தெரியுமா? சாதாரணமாக மற்றப் பித்தான் களைப்போலவே செய்துவிட்டு, கம் பியை ஒருபக்கம் வளைக்காமல் நடுவில் வளைக்கவேண்டும்; அடி அகலமாக இருக்க, மேல் பக்கம் கம்பிகளைச் சேர்த்துக்கொண்டு ஒரே ஓட்டை யில் நுழைக்கவேண்டும். இரண்டு நுனியையும் சேர்த்து நுழைக்க முடியாது; அதனால் வேண்டிய அளவு அராவிக்கொள்ளலாம். பிறகு கம்பி மேலே வந்ததும் முடுக்குங் கள். பித்தான் நன்றாக இருக்கும்.

இந்த வேலை ஆரம்பத்தில் சற்றுத் தொந்தரவு கொடுக்கலாம். ஆனால் விடாமல் இரண்டு தடவை செய்து பாருங்கள். உங்களுக்கே ஓர் உற்சா கம் பிறக்கும். இதையே தொழிலாக வைத்துக்கொண்டு செய்தாலும் நல்ல லாபம் கிடைக்கும். இது ஒன்று ஆரம்பித்தால் இன்னும் எவ் வளவோ செய்யலாம்.

பித்தான்கள் செய்ய நம்மிடம் எத் தனையோ சாமான்கள் சிரமமில்லா மல் கிடைக்கும். சிறிய கருங்காலித் துணுக்குகள், சந்தனக் கட்டை, பழைய மொண்ணைச் சீப்பு, சிடுக்கு வாரிகள், பல் தேய்க்கும் 'புரூஷ்' பிடிகள் இந்தமாதிரி எது கிடைத் தாலும் சரி; உபயோகப்படுத்தலாம். இதற்கென்று சாமான் வாங்கவேண் டுமே என்று யோசனை வேண்டாம். முக்கியமாக வேண்டியவை நான்கு கருவிகள்: கத்தி, சுத்தி, அரம், முடிந்தால் துரப்பணம் இவ் வளவுதான்; இனிமேல் செய்து பாருங்களேன்.

கடை முதலாளி பிச்சைக்காரனுக்குத் தினந்தோறும் ஓரணா கொடுப்பது வழக்கம். அவர் ஒரு தடவை வெளியூருக்குப் போயிருந்தார். திரும்பிவர ஒரு மாதம் ஆயிற்று. அவர் வந்த வுடனே பிச்சைக்காரன் சற்றுக் கண்டிப்பான குரலில், "என்ன ஸேட், நீங்கள் எனக்கு இரண்டு ரூபாய் பாக்கி தர வேண்டுமே?" என்றான்.

—'ஸரிதா'

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்கவைகளைத் திருப்பி அனுப்பமுடியாது.

—ஆசிரியர்.

ராமு ஒரு வாழைப் பழத்தை வைத்துக்கொண்டு, வாசலில் நின்றான். அவன் தாத்தா அந்தப் பக்கம் வந்துகொண் டிருந்தார். இந்தச் சமயத்தில் ராமுவின் கையில் இருந்த பழம் தவறிக் கீழே விழுந்தது. தாத்தா அதை மிதித்து வழுக்கித் தத்தளித்துக் கீழே விழுந்துவிட்டார்.

உடனே ராமு கண்ணைப் பிசைந்துகொண்டு அழத் தொடங்கினான்.

தாத்தா இதற்குள் எப்படியோ சமாளித்து எழுந்து, "அழாதேடா, கண்ணு! எனக்கு ஒன்றும் அடி படவில்லை" என்றார்.

"இல்லை, தாத்தா. அதுக்கு நான் அழலை. என் வாழைப்பழம் போயிடுத்தே" என்று மேலும் புலம்பினான் ராமு.

— ஆர். எஸ். மணியன், மயிலாப்பூர்.

* * *

சிறுவனைத் தாய் எதற்கோ திட்டிக் கண்டிக்கத் தொடங்கினாள். உடனே சிறுவன் தன் விரலால் ஒரு காதைப் பொத்திக்கொண்டான்.

"விரலை எடு. நான் சொல்லிக்கொண் டிருக்கும்போது காதைப் பொத்திக்கொள்ளாதே" என்று சீறினாள் தாய்.

"சரி, அம்மா. ஆனால் எப்போதும் சொல்வாயே: நீ சொல்வதையெல்லாம் ஒரு காதால் வாங்கி மறு காதால் விட்டுவிடுகிறேன் என்று;

நீ சொல்வது வெளியே போகாமல் இருக்கத்தான் இந்தக் காதைப் பொத்திக்கொண்டேன்!" என்றான் சிறுவன்.

—'நியூ ஆர்லியன்ஸ் டைம்ஸ் பிகேயூன்'.

கொல்லைப் பக்கத்தில் ஒரு நாள் என் தம்பியும் வேறொரு பையனும் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அப்போது என்



தம்பியிடம் தாத்தா ஓர் ஆரஞ்சுப் பழம் கொடுத்தார். அதை உரித்து அவன் கொஞ்சம் தின்றான். மீதியை எனக்கும் நண்பனுக்கும் கொடுத்தான். எல்லாரும் தின்று முடித்த பிறகு, தம்பி கணக்குப் போட ஆரம்பித்தான். "எனக்குப் பாதி; உனக்குப் பாதி; அவனுக்குப் பாதி - எல்லாரும் பங்கு போட்டுத் தின்றோம் இல்லையா?" என்றான்.

தாத்தா கொடுத்தது ஒரு பழம்; தம்பி கணக்கோ ஒன்றரைப் பழத்துக்கு! அந்த அரைப் பழம் எங்கேயிருந்து வந்தது என்று எனக்குத் தெரியவேயில்லை.

— எம். ஏ. கரீம், நீடூர்.

* * *

நான் ஜன்னலில் சாய்ந்தபடி வெளியே பார்த்துக்கொண்டிருந்தேன். பள்ளிக்கூடம் விட்டுப் புஸ்தகமும் கையுமாக வீதியிலே இரண்டு சிறுவர்கள் வந்துகொண்டிருந்தார்கள். இருவருக்கும் வாக்குவாதம் நடந்துகொண்டிருந்தது.

"நீ என்மேல் எச்சில் துப்பினாய் என்று உன் அம்மாவிடம் சொல்லிவிடுகிறேன், பார்" என்றான் ஒரு சிறுவன்.

"நீதானே முதலில் துப்பினாய்?" என்றான் மற்றவன்.

"ஆமாம். ஆனால், அதுதான் குறி தப்பிவிட்டதே!" என்றான் முதல் சிறுவன்.

—ஒரு கிருகஸ்தர்.

* * *

நான் என் நண்பரின் வீட்டுக்குப் போனேன். அங்கேயே சாப்பிட்டேன். சாப்பிட்டதும் தூக்கம் கண்ணைச் சுழற்றியது. இதைக் கண்ட நண்பர், "சிறிது வேணுமானால் தூங்குகிறீர்களா?" என்று சொல்லி, ஒரு பாயையும் தலையணையையும் தூக்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தார்.

இதைக் கவனித்த அவருடைய மூன்று வயது மகன் ஒரு பெரிய புஸ்தகத்தைத் தூக்கமாட்டாமல் தூக்கிக்கொண்டு வந்து என்னிடம் கொடுத்தான்.

"இது எதற்கடா, கண்ணு?" என்று நண்பர் கேட்டார்.

"மாமா தூங்க" என்றான் பையன்!



ரகசியம் இதுதான். நண்பர் எப்போது தூங்கினாலும் புஸ்தகத்தைப் படித்தபடிதான் தூங்குவாராம்.

—என். எஸ். மணி, சைதாப்பேட்டை.

பர்மாவில் புரட்சிசெய்து நிலைகலங்கச் செய்யும் இந்த மக்கள் யார்? இவர்களின் குணாதிசயங்கள் என்ன?

கரேன் ஜாதியார்

ஸுஷமா

தென் பர்மாவில் அநேக வருஷம் இருந்தேன். அங்கே கரேன் ஜாதியார் விசேஷம். இவர்களோடு நன்றாகப் பழகியிருக்கிறேன். பர்மாவில் வாழும் பழங்குடிகளில் இவர்கள் முக்கியமானவர்கள். சீனமொழியில் இவர்களுக்குக் 'கியாங்' என்று பெயர்; இதுவே, நாளடைவில் 'கரேன்' என்று மாறிவிட்டது. தெற்கே பெகு, டெனஸெரிம் இந்த இடங்களிலும் டவாய், மார்குவே மலைப்பிரதேசத்திலும், வடக்கே ஷாண் ராஜ்யத்திலும், சியாமிலும் இவர்கள் எண்ணிக்கை அதிகம்.

இவர்கள் மத்திய ஆசியாவிலிருந்து வந்து முதலில் கரேன்னீ என்ற பிரதேசத்தில் குடியேறினார்கள். நாடோடி மக்கள் என்றாலும் கிராமங்களில் சொந்தமாக வீடு கட்டிக்கொண்டுதான் வாழ்கிறார்கள்; நிலத்தையும் உழுது பயிரிடுகிறார்கள். 1911-இல் எடுத்த கணக்குப்படி இவர்கள் தொகை மொத்தம் 11,02,000. இவர்கள் தாய் - சீன இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர் சொல்கிறார்கள். ஷாண், சீன மொழிகளுக்கும் இவர்கள் பேச்சுக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டு. ஷாண் ஜாதியார் இவர்களைத் துன்புறுத்தியதால் அங்கிருந்து ஓடிவந்துவிட்டார்களென்று தெரிகிறது. பர்மியரைவிடச் சீனக்காரரோடு தான் இவர்கள் அதிகமாகப் பழகுவார்கள். தங்களைப் பர்மியர் என்று சொல்லிக்கொள்ளவும் இவர்களுக்குப் பிடிக்காது. டுங்து, லாஹூ என்று வேறு இரண்டு ஜாதியாரும் உண்டு. அவர்களும் தங்கள் இனத்தைச் சேர்ந்தவர்களே என்கிறார்கள் கரேன்கள்.

கரேன்களில் போ, ஸ்காஉ என்று இரண்டு பிரிவு. போ மக்களைத் தெலேங் - கரேன் என்று அழைக்கிறார்கள். தெலேங் ஜாதியாரின் பழக்கவழக்கங்களை இவர்களும் அநுசரிப்பதே இதற்குக் காரணம். தெற்கில் வசிக்கும் தெலேங் ஜாதியார் ஒரு காலத்தில் சரித்திரப் பிரசித்தி பெற்றவர்கள். ஆனால் பர்மியர் வந்தபிறகு இவர்கள் ஆட்சி சீர் குலைந்துவிட்டது. தெலேங் ஜாதியாரோடு பழகினதால் போ - கரேன்கள் பௌத்தர்களானார்கள். சமீப காலத்தில் ஐரோப்பியப் பாதிரிமார் வந்து இவர்களில் அநேகம் பேரைக்கிறிஸ்துவர்களாக்கிவிட்டார்கள். ஸ்காஉ-கரேன்களையும் அவர்கள் சும்மா விடவில்லை. "கண்மூடித்தனமாகக் கிறிஸ்துவனாவதும், ஹாஸ்யரஸமே இல்லாததுந்தான் கரேனுக்கு உள்ள குறை" என்று இங்கே சொல்லிக்கொள்வது வழக்கம்.

கரேன்களுக்குப் பர்மியர் மாதிரி அவ்வளவு சாமர்த்தியம் இல்லை. ஆனாலும் சமவெளியில் வசிக்கும்

காப்பிரைட்: ப்ரபாஸி (வங்காளி), கல்கத்தா

கரேன் பெண்

கரேன்கள் பர்மியரைவிட நன்றாகப் படித்தவர்கள்; இவர்களில் பலர் பிரபல வைத்தியர்கள்; அநேகம் பேர் உபாத்தியாயர்களாகவும் வக்கீல்களாகவும் பெயர் எடுத்திருக்கிறார்கள்.

கரேன்களில் பெரும்பாலோர் காடுகளிலும் மலைகளிலும் வசிக்கிறார்கள். பொதுவாக அந்நியர்களிடமும் முக்கியமாகப் பர்மியர்களிடமும் இவர்களுக்கு வெறுப்பு; அதோடு பயம் வேறே. அவர்களைப் பார்த்ததும் ஓடிப் போய் எங்கேயாவது ஒளிந்துகொள்வார்கள். ஜனசந்தடி இராத இடத்தில் குடிசை கட்டிக்கொண்டு வாழ்வார்கள். நன்றாக வேட்டையாடுவார்கள். நல்ல பலசாலிகள்தான்; ஆனால் இவர்களையெல்லாம் ஒன்று சேர்க்கச் சரியான தலைவர்கள் யாருமே இல்லை. இதனால் இடத்துக்கு ஏற்றபடி இவர்கள் பழக்கவழக்கங்கள் மாறிவிட்டன. 'நாத்' என்ற தெய்வத்தை இவர்கள் வழிபடுகிறார்கள். அந்நியர் யாராவது வருகிறார்கள் என்று கேள்விப்பட்டு ஊரைவிட்டு ஓடிப் போவதற்கு முன் இவர்கள் அந்தத் தெய்வத்துக்குக் கோழி பலி இடுவார்கள்; பிறகு குறி கேட்பார்கள். அப்புறந்தான் வேறு இடத்துக்குப் புறப்படுவார்கள்; சில பேர் இந்தத் தெய்வத்தோடு புத்தரையும் வழிபடுவார்கள். இவர்களிடம் பல குறைகள் இருந்தாலும், விவாகம் முதலிய சடங்குகளில் ஊரில் இருக்கும் மற்ற ஜாதியாரையும் அழைத்து உபசரிப்பார்கள். விருந்தாளி வந்தால் அவனை உள்ளூற வரவேற்பார்கள். இப்படி யார் வந்தாலும் வீட்டுக்குள்ளே தாராளமாகப் போய் இருக்கலாம்; சாப்பிடலாம். இவர்கள் தடுக்கவே மாட்டார்கள். கரேன்கள் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவர்கள். அவர்கள் வசிக்கும் கிராமங்களில் பயிர் அறுவடையாகி வயலிலேயே கிடந்தாலும் கவலை இல்லை; திருட்டே போகாது.

பழைய இரும்பையும் எஃகையும் உருக்கி இவர்கள் தாங்களே துப்பாக்கி செய்துவிடுவார்கள். அதைத் தோளில் வைத்துக்கொண்டு வேட்டையாடப் போவார்கள். மற்ற வேளைகளிலெல்லாம், கிழவர்கள் கிழவிகள், வாலிபர்கள் இளம்பெண்கள் யாராக இருந்தாலும் சரி, மேளதாளங் கொட்டிப் பாடிக்கொண்டுதான் இருப்பார்கள். பாட்டென்றால் இவர்களுக்கு அவ்வளவு பிரியம்.

கரேன் பெண்கள் கண்ணுக்கு லட்சணமாக இருப்பார்கள். தங்களை நன்றாக அலங்கரித்துக்கொள்வார்

கள். இவர்களில் சிலர் ஒட்டைச் சிவிங்கி மாதிரி கழுத்தில் ஒருவிதக் கண்டி அணிந்துகொள்வது வழக்கம். பெண்கள் பொதுவாக வர்ண லுங்கி உடுத்துவார்கள்.

கரேன்களில் பல பிரிவு இருப்பதால் இடத்துக்கு இடம் இவர்கள் பேச்சு வித்தியாசப்படுகிறது. ஆனல் பெரும்பாலும் ஸ்காஓ மொழியில்தான் பேசுகிருர்கள். இதற்கும் டுந்து ஜாதியார் பேசும் பேச்சுக்கும் நெருங்கின சம்பந்தம் உண்டு. ஆனல் இரண்டு ஜாதியார் பழக்க வழக்கமும் மாறுபட்டிருப்பதால் இருவரும் வேறு வேறு இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றுதான் நமக்குத் தோன்றும். டுந்துக்கள், பூர்விகத்தில் ஸாடுங் என்ற இடத்தில் இருந்ததாகவும் தாங்கள் பாஓ ஜாதியார் என்றும் சொல்லிக் கொள்கிருர்கள். 'தட்டோன்' என்ற பெயரே 'ஸாடுங்' என்று மாறியிருக்க வேண்டும். அதே மாதிரி 'போ' என்பதும் 'பாஓ' என்று திரிந்திருக்கலாம். இந்த டுந்து ஜாதியார் ஒரு சமயம் தட்டோனில் ஆண்டுவந்தார்களாம். ஆனல் காளடைவில் இவர்கள் பலம் குன்றிவிட்டது; அங்கிருக்க முடியாமல் ஓடி வந்திருப்பார்கள். இவர்கள் மொத்தம் 46,000 பேர் இருக்கிருர்கள். ஸால்வீன் ஆற்றங்கரையோரம் பாஓ என்னும் இடத்தில் வசிக்கிருர்கள். ஒரே கிராமத்தில் இருக்க மாட்டார்கள்; இடம் மாறிக் கொண்டே வருவார்கள். வாலிபப் பருவம் வந்து கட்டுமஸ்தாக இருக்கும் ஒருவனை இவர்கள் தலைவனுக ஏற்றுக்கொள்வார்கள். அவனிடமே எல்லாப் பொறுப்பையும் விட்டுவிடுவார்கள். இவர்களும் 'நாத்' என்ற தெய்வத்தைத்தான் வழிபடுகிருர்கள். ஷாண் ராஜ்

கரேன் ஆண்

யத்தில் இருக்கும் இந்த ஜாதியார் நடை உடை பாவனையில் ஷாண் மக்களைப்போலவே ஆகிவிட்டார்கள்.

கரேன்கள் தங்கள் கிராமத்தில் அடிக்கடி கூட்டம் போட்டு விவாகச் சடங்குகளைப்பற்றியும் 'நாத்' பூஜையைப்பற்றியும் பேசுவார்கள். வீண் விவகாரங்களில் தலையிடவே மாட்டார்கள். பொதுவாக, இவர்கள் விவாகத்தின்போதும் சில விழாக்களின்போதுமே மதுபானம் செய்வார்கள். மற்றச் சமயங்களில் அதைத் தொடக்கூட மாட்டார்கள். அபினிப் பழக்கமும் கிடையாது. ஆனல் நீண்ட குழாய்களை வைத்துக் கொண்டு புகை குடிப்பதென்ருல் இவர்களுக்கு ஆனந்தம்.

வரவர இவர்கள் தொகை குறைந்து வருகிறது. இவர்கள் அபிவிருத்தி அடைவதற்கு வேண்டிய சந்தர்ப்பமும் இதுவரை கிடைக்கவில்லை. பர்மியர்களிலே முற்போக்காக இருப்பவர்கள் உதவி செய்தால் தான் இவர்கள் முன்னுக்கு வரலாம்; அதைத் தவிர வேறு வழி இல்லை.

ஜோஸ்யத்தில் புதிய கிரகங்கள்

ராள்ளபல்லி கோபாலகிருஷ்ணமாசார்யுலு

ஜோஸ்யர்கள் ஒன்பது கிரகங்கள் சொல்லுகிருர்கள். வான சாஸ்திரிகளோ சில புதிய கிரகங்களைக் கண்டு பிடித்திருக்கிருர்கள். இவைகளுக்கு ஜாதகத்திலே இடமில்லையா? என்ன இடம் கொடுப்பது? இந்த விஷயத்தை ஆராய்கிருர் ஒரு ஜோஸ்யர்.

சாதாரணமாக நாம் ஏழு கிரகங்களோடு ராகு, கேதுக்களையும் சேர்த்து நவக்கிரகங்கள் என்று சொல்லுகிருேம். சமீபத்தில் ஐரோப்பிய விஞ்ஞானிகள் நெப்டியூன், புரானஸ் என்ற இரண்டு புதிய கிரகங்களைக் கண்டு பிடித் திருக்கிருர்கள். இவற்றில் புரானஸ் (வருணன்) கிரகத்தை 1781-ஆம் வருஷம் மார்ச்சு 13-ஆம் தேதி ஹெர்ஷல் என்பவர் முதலில் கண்டுபிடித்தார். இது மிகவும் சிறிய தாகையால் நட்சத்திரக் கூட்டங்களுக்கிடையில் இதைச் சுலபமாகக் கண்டுபிடிக்க முடியாது. சூரியனுக்குச் சுமார் 175 கோடி மைல் தூரத்தில் இந்தக் கிரகம் இருக்கிறது; இது பூமியை விடப் பதினுலு மடங்கு பெரியதாம்! ராசிச் சக்கரத்தை இந்தக் கிரகம் ஒரு முறை சுற்றி வர 84 வருஷம் பிடிக்கிறதாம். அப்படி யென்ருல், இது ஒவ்வொரு ராசியிலும் ஏழு வருஷம் தங்குகிறது!

நம் சாஸ்திரத்தில் இந்த இரண்டு கிரகங்களையும் இந்திராவருணர்கள் என்று சேர்த்துச் சொல்லுகிருர்கள். புரானஸ் வருணன்; நெப்டியூன் இந்திரன். நெப்டியூன் என்னும் கிரகத்தைக் கணித சாஸ்திரிகள் 1846-ஆம் வருஷம் ஸெப்டம்பர் மாதம் 26-ஆம் தேதி கண்டுபிடித்தார்கள். தூரதரிசினியின் உதவி இல்லாமல் இதை நாம் பார்க்க முடியாது. சூரிய மண்டலத்துக்குச் சுமார் 286 கோடி மைல் தூரத்தில் இந்தக் கிரகம் இருக்கிறது. இது ராசிச் சக்கரத்தை ஒரு முறை சுற்றி வர 164 வருஷம் பிடிக்கிறதாம். அதனுல், இது ஒவ்வொரு ராசியிலும் 14 வருஷ காலம் தங்குகிறது.

ஒரு ராசியில் இரண்டரை வருஷம் வீதம் தங்கும் சனியை நம்மவர் 'மந்தன்' என்கிருர்கள்; இப்படிப் பார்த்தால் புரானஸை மிக மந்தன் என்றும், நெப்டியூனை மிக மிக மந்தன் என்றும் சொல்ல வேண்டும்.

இந்த இரண்டு கிரகங்களையும் ஐரோப்பியர் போன்ற அயல் நாட்டார் தங்கள் பஞ்சாங்கங்களிலும் ஜாதகக் குண்டலிகளிலும் உபயோகித்து வருகிருர்கள்.

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

இந்தக் கிரகங்களின் தாற்காலிக ஸ்பஷ்ட சார நிலைகளையும் தெளிவாகக் குறித்து வருகிறார்கள். மேல் நாட்டுச் சோதிட நிபுணர்கள் பலவித ஆராய்ச்சிகளை நடத்தித் தனி மனிதனுடைய ஜாதகத்திலும் சரி, ஸ்தாபனங்களின் ஜாதகத்திலும் சரி, இந்தக் கிரகங்களால் ஏற்படும் பலன்களை விரிவாகச் சர்ச்சை செய்திருக்கிறார்கள். பிரபல ஆதாரங்களுடன் நிரூபித்தும் இருக்கிறார்கள். இவை சம்பந்தமான பல நூல்கள் வெளி வந்துவிட்டன. ஆனால் இந்தக் கிரகங்களுக்கு நம் தேசத்துப் பஞ்சாங்கத்தில் இடம் கிடைக்கவில்லை. முகூர்த்தங்களை நிச்சயிக்கும்போது நாம் இந்தக் கிரகங்கள் இருப்பதாகவே நினைப்பதில்லை; இவற்றைப்பற்றிய நூல்களும் இல்லை. நம் தேசத்துச் சோதிட நிபுணர்களின் கடைக்கண் நோக்கு இன்னமும் இந்தக் கிரகங்களின்மேல் விழவில்லை.



ஆனால் சில வருஷங்களுக்கு முன் நம் நாட்டுச் சோதிட சாஸ்திரத்திலும் மேல்நாட்டுச் சோதிட சாஸ்திரத்திலும் வல்லவராகிய ஸ்ரீ கேத்கர் என்பவர், தம் 'ஜ்யோதிர் கணிதம்' என்னும் நூலில் மற்றக் கிரகங்களுடன் இந்திரா வருண கிரகங்களுக்கும் இடம் கொடுத்திருக்கிறார். அவற்றின் கோசாரக் கிரமத்தைக் கணிக்கும் முறைகள், சக்கரங்கள், நிபந்தனைகள் எல்லாவற்றையும் விஸ்தாரமாக எழுதியிருக்கிறார். துரதிருஷ்டவசமாக அவர் அந்த நூலை வடமொழியில் எழுதிவிட்டார். மேல்நாட்டுச் சோதிட முறையின் வாசனையையே அறியாத சிலர், 'பழைய சித்தாந்த நூல் போதாதா? இந்தப் புது நூல் வேறு வேண்டுமோ?' என்று அதை அலட்சியம் செய்துவிட்டார்கள். வடமொழியில் பரிசயம் இல்லாத ஆங்கிலப் படிப்பாளிகள், 'சுலபமாக அர்த்தம் புரியும் ஆங்கிலப் புத்தகங்கள் இருக்கும்போது இது எதற்கு?' என்று அசிரத்தையாக இருந்துவிடுகிறார்கள். இந்தமாதிரி விஞ்ஞான நூல்களோடு பலன்களைச் சொல்லும் நூல்களையும் எழுதியிருந்தால் இந்தக் கிரகங்களைப்பற்றி நம்மவருக்கு அதிகமாகத் தெரிந்திருக்கும்.

"இந்தப் புதிய கிரகங்கள் இல்லாவிட்டால் முகூர்த்த சோதிட சாஸ்திரங்களுக்கு என்ன குறை வந்துவிட்டது? சோதிட சாஸ்திரத்தை எழுதி வைதத நம் முன்னோர்

களான ரிஷிகள் இந்தக் கிரகங்களைப்பற்றி ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே? ஒப்பற்ற திரிகால ஞானிகளாகிய அவர்களுக்கு இந்தக் குட்டிக் கிரகங்கள் இருப்பது தெரியாமல் போய்விட்டதா? இவற்றின் பலனைச் சொல்லுவதற்குக் கொஞ்சம் இடமிருந்தாலும் சொல்லியிருக்கமாட்டார்களா? ஆதியோடந்தமாகக் குறி தவருமல் பலன் சொல்லும் நாடி நூல்களை நம் ரிஷிகள் எழுதவில்லையா?" என்று கேட்கலாம்.

கிரகஸ்திதியை யன்றி ஞான திருஷ்டியையும் உதவியாகக் கொண்டு மகரிஷிகள் நாடி சோதிடத்தை எழுதியிருக்கலாம். ஞான திருஷ்டி பெறும் திறமை இல்லாத நாம் கிரகசாரங்களின் பலனைச் சொல்ல அநுபவத்தையும் சேர்த்துக்கொள்ளுகிறோம். பௌதிகம், ரசாயனம், வைத்தியம் இவைகளைப் போல் சோதிடமும் அநுபவத்தால் அபிவிருத்தி அடையத் தகுந்த சாஸ்திரம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். அப்படி முன்னேற்றம் அடையாத எந்தச் சாஸ்திரமும் அழிந்துவிடுவது சகஜந்தான்.

மகரிஷிகளின் அநுஷ்டானங்கள், கொள்கைகள் எல்லாவற்றையும் இஷ்டம் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தக் காலத்தில் மாற்றிக்கொண்டுதானே வருகிறோம்? சோதிட நூலின்படி நாம் பலன் சொல்லும்போது பராசரர் சொன்ன வாக்கியத்தை அப்படியே ஒப்பிக்கிறோமா? காலத்துக்குத் தகுந்தபடி மாற்றித்தானே சொல்லுகிறோம்? 'வாகன சௌக்கியம்' என்று வந்தால், பலன் சொல்லும் போது, 'தேர், யானை, குதிரை ஆகியவை கிடைக்கும்' என்று சொல்வதில்லையே; 'சைக்கிள், மோட்டார், ரெயில், விமான வசதி ஆகியவை கிடைக்கும்' என்றுதானே சொல்லுகிறோம்?

அதேமாதிரி, இந்த இரண்டு கிரகங்களையும் சேர்த்துக்கொண்டால் நம் சோதிட சாஸ்திரம் எவ்வளவோ முன்னேறலாம்.

"ஞானதிருஷ்டி படைத்த மகரிஷிகள் இந்திராவருணர்களைக் கண்டுபிடிக்காமல் விட்டுவிடவில்லை; இவற்ருல் ஜாதகங்களில் எந்த விதமான பலனும் ஏற்படாது. அதனுல் தான் விட்டிருக்கிருர்கள்" என்று ஒரு சாரார் வாதிக்கிருர்கள். ரிஷிகள் ஏன் விட்டுவிட்டார்கள் என்பது நமக்குத் தெரியாத விஷயம். இன்றைக்கு, மேல்நாட்டார் ஆராய்ந்து, 'இந்தக் கிரகங்கள் இன்ன பலனைக் கொடுக்கின்றன' என்று ஆதாரங்களுடன் நிரூபித்த பிறகு, நாமும் ஜாதக ராசிச் சக்கரங்களில் இவற்றைச் சேர்த்துக்கொண்டால் பிறகு பலனை அறியலாம். நம்மவர்கள் கல்யாண முகூர்த்தங்கள் வைக்கும்போது இந்தக் கிரகங்களை ஒதுக்கிவிடுகிருர்கள். அதனுல் பல கேடுகள் விளைகின்றன. ஏழாம் பாவத்தின் மத்தியில் வருணன் இருக்கும்போது பிறந்த பெண்ணை மணந்த புண்ணியவான்களின் வாழ்க்கையையோ, வருணன் அஸ்தமிக்கும் சமயத்தில் கல்யாணம் நடந்த பெண்ணின் வாழ்க்கை முடிவையோ கவனித்தால் நமக்கு இவற்றின் அவசியம் தெரியும்.

மேலே சொன்ன விபரீத பலன்களுக்கு, 'வருணன்தான் காரணம்' என்று ஒப்புக்கொள்ள இஷ்டம் இல்லாத சிலர், இரண்டில் இருக்கும் செவ்வாயையோ, மூன்ரும் வீட்டுச் சுக்கிரனையோ சந்தியில் இழுத்து விடுகிருர்கள்; நீச ராசியில்

இருக்கும் சுக்கிரனுலோ, சத்துரு வீட்டில் இருக்கும் களத்திராதி பனுலோ சேர்ந்த துன்பங்களென்று சப்பைக் கட்டுக் கட்டித் திருப்தி அடைந்துவிடுகிறுர்கள்.

பாவகுண்டலிகளில் கிரகங்களின் நிலைகளைத் தெளிவாக, பாகை விப்தைகளுடன் சர்வ சாதாரண மாக எழுதும்படி சாஸ்திரம் உத்தரவு போட்டிருக்கிறது. ஆனுல் நம்மவர்கள் இந்த வழக்கத்தை விட்டுவிட்டார்கள். பாவகுண்டலி எழுதும் பழைய முறையில் இந்தப் புதிய கிரகங்களின் பலன் தெளி வாகத் தெரிந்துவிடும் என்பதில் சந்தேகம் இல்லை.

ஸாயன முறையைப் பின்பற்று பவர்கள் இந்தக் கிரகங்களைச் சேர்த் துக்கொள்ளுகிறுர்கள். நிரயன முறையையே நம்பிக்கொண் டிருக்கும் நம் தேசத்தில் இந்தக் கிரகங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டாமென்றே பலர் சொல்லு கிறுர்கள். நிரயன முறைப்படியே குண்டலிகளில் இந்தக் கிரகங்களை உபயோகிப்பதில் ஒரு தடையும் இல்லை.

'புதிது புதிதாகத் தோன்றும் கிரகங்களை யெல்லாம் சோதிட சாஸ்திரத்தில் சேர்த்துக்கொள் வதானுல் இன்னும் கண்டுபிடிக்கப் போகும் கிரகங்கள் எல்லாவற்றை யும் சேர்த்துக்கொள்ள வேண்டி யிருக்குமே? சமீபத்தில் ப்ளூடோ என்னும் கிரகத்தைக் கண்டுபிடித் திருக்கிறுர்கள். இன்னும் எத்தனை வருமோ?' என்று சிலர் யோசிக் கிறுர்கள். உண்மைதான். சாஸ் திரம் முடிவற்றது. 'ப்ளூடோ' என்னும் நுண்ணிய கிரகத்தை 1930 - ஆம் வருஷத்தில் கணித சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித் தார்கள். மேல்நாட்டு ஜோஸ்யர்கள் இதற்கு ஜாதகங்களில் உள்ள இடம் எது, இதன் பலன் என்ன என்று ஆராய்ந்து வருகிறுர்கள். அதற்குள் இந்த 'ப்ளூடோ'வுக்கு நம்மவர் சிலர் 'யமன்' என்று பெயர் வைத்து விட்டார்கள்!

இந்திராவருணர்கள் விஷயத் தில் இந்தமாதிரி சங்கடத்துக்கு இடமில்லை. அவற்றின் பலன்களைத் திருப்திகரமாகக் கண்டுபிடித்திருக் கிறுர்கள்.

'கிரகங்களின் எண்ணிக்கை அதிகம் ஆக ஆக யோகங்கள் விரிவாகவேண்டி யிருக்கிறது; பலன் சொல்பவர்களின் பாடு சங்கடம் ஆகிவிடும்' என்று சிலர் பயப்படுகிறுர்கள். நவக்கிரகங்களைத் தவிர உபக்கிரகங்கள் என்ற பெய ரால் பல புள்ளிகளைக் கணிதத்தை ஆதாரமாகக் கொண்டு குண்டலியில் நம் முன்னேர்கள் சேர்த்திருக்கிறுர் கள். அவற்றின் பலனையும் ஊகித் திருக்கிறுர்கள்; தவிர, ஆரூடம் வேறு இருக்கிறது. எப்படி இருந் தாலும் சரி, இந்த இரண்டு கிரகங் களையும் நாம் ஆதரித்து வரவேற் பதில் நம் சோதிட சாஸ்திரத்துக்கு எந்த விதமான கஷ்டமும் வந்து விடாது.

"இந்திராவருணர்களைக் கிரகங் களாகக் கொண்டால் அவர்களுக்கு எந்த ராசிகளின்மேல் ஆதிபத்தியம் கொடுக்கிறது?" என்று சிலர் கேட் கிறுர்கள். ஆதிபத்தியம் இல்லா விட்டால் குடி முழுகிப் போய் விடாது. குளிகனுக்கு என்ன ஆதி பத்தியம் கொடுத்திருக்கிறேம்? ராகு, கேதுக்களுக்குத் தங்களுடைய தென்று ராசியில் ஆதிபத்தியம் இருக்கிறதா? ஏழு கிரகங்களுக்கு ஆதிபத்தியம் கொடுத்திருக்கும் முறையை நாம் மாற்றவேண்டிய தில்லை. இந்திராவருணர்கள்

என்னவோ தங்களுக்கு ஸ்தான ஆதிபத்தியம் கொடுங்கள் என்று கேட்கவில்லை. அவர்கள் குண்டலி களில் சஞ்சரிப்பதற்குமட்டும் விட்டால் போதும். மேல்நாட்டில் சிலர் கும்பராசியின்மேல் வருண னுக்கும், மீனராசியின்மேல் இந்திர னுக்கும் ஆதிபத்தியம் கொடுக்கப் பார்க்கிறார்கள். ஆனல் அதற்குத் தகுந்த காரணம் இல்லையென்று வாதிப்பவர்களும் உண்டு. ஆகை யால் ஆதிபத்தியம் கொடுக்கும் விஷயத்தைப் பின்னால் பார்த்துக் கொள்ளலாம்.

வான ஆராய்ச்சியின் பலனைச் சோதிட சாஸ்திரத்தில் அவசிய மான மாறுதல்களைச் செய்து வழக் கத்தில் இருக்கும் முறையை இப்படி மாற்றி அமைப்பது முன் காலத்திலும் உண்டு. பல நூற்றாண்டு களுக்கு முன் வருஷப்பிறப்பு மார்கழி மாதத்தில் வருமாம். அத னலேயே மார்கழி மாதத்துக்கு 'ஆக்ரஹாயணிகா' என்று பெயர். இந்த வழக்கம் மாறிப் பல நூற் றாண்டுகள் ஆகிவிட்டன. கிருத்தி கையை முதலாக வைத்து நட்சத்திர மண்டலத்தை எண்ணும் வழக்கம் ஒரு காலத்தில் இருந்திருக் கிறது. நாம் இப்போது அசுவினியை முதலாகக் கொண்டு எண்ணுகிறோம். இருபத்தெட்டு நட்சத்திரங்கள் என்ற முறையை மாற்றி இருபத்தேழு என்று வழக் கத்தில் கொண்டு வந்துவிட்டோம். இந்தமாதிரி எவ்வளவோ உதா ரணங்கள் சொல்லலாம். சாஸ்திர ரீதியாகப் பார்ப்பவர்கள் இதைக் குற்றமாக எண்ணமாட்டார்கள்.

நம் தேசத்தில் சோதிட சாஸ் திரத்துக்கு முதலில் இருந்த கௌர வம் இப்பொழுது போய்விட்டது; இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். பொது ஜனங்கள் ஆதரவு காட்டி அக்கறை கொள்ளச் செய்ய வேண்டுமானல், புதிய முறைகளைக் கூட மாற்றி அமைக்க, நாம் பின் வாங்கக்கூடாது.

பிறருடைய கொள்கைகளை நம் கொள்கைகளோடு இணைத் துக்கொள்வது பல நூற்றாண்டு களுக்கு முன்னேயே உண்டு. மயாசுரனை ராட்சசன் என்று நம்ம வர் தள்ளிவிடவில்லை; யவனர்களை வேறு கண்டத்தவர்கள் என்று தூஷிக்கவில்லை. அவர்களுடைய சம் பிரதாயங்கள் ஏற்கனவே நம் சாஸ் திரங்களில் ஒன்றிப் போய்விட்டன. அப்படியிருக்க நாம் இந்தப் புதிய கிரகங்களை மட்டும் ஏன் வெறுக்க வேண்டும்? எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ, யார் கண்டார்?

பிரசங்கம் கேட்டால் போதுமா?

பியானோ வாத்தியத்தைப்பற்றிப் பல பிரசங்கங்களைக் கேட்டுவிட்டால், பியானோ வாசிக்க வந்துவிடாது; நீங்களே வாசிக்க முயன்றுதான் அதைக் கற்றுக்கொள்ள முடியும். இது போலவே நல்ல பிரஜைகளாக வாழ்வதற்கும் பல பிரசங்கங் களைக் கேட்டுப் பயனில்லை; நல்ல பிரஜைகளுக்கு வேண்டிய கலைகளையும் அறிவையும் உணர்ச்சியையும் நீங்களே பயின்று வாழ முயல்வதன் மூலந்தான் நல்ல பிரஜைகளாக முடியும்.

—எர்னெஸ்ட் எல். மெல்பி, 'இண்டர்நேஷனல் ஆல்ட்ருஸான்'

ஒரு பக்கம் வெந்நீர் ஊற்று; மறுபக்கம் குளிர்ந்த நீர் ஊற்று; இன்னுந்தான் எத்தனை அற்புதங்கள் இந்த இடத்தில்!

வஜ்ரேசுவரி வெந்நீர் ஊற்று

ஆனந்த்

பம்பாயிலிருந்து 50 மைல் தூரத்தில் வஜ்ரேசுவரி என்னும் இடம் ஒன்று இருக்கிறது. அங்கே போகப் பஸ் வசதி உண்டு. பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தால் வழி முழுவதும் பசுமையான மரங்கள், வயல்வெளிகள், அடர்ந்த காடுகள், கிராமக்குடிசைகள் இந்தமாதிரி அழகிய காட்சிகளைப் பார்த்துக் கொண்டே சிரமம் இல்லாமல் போகலாம்.

வஜ்ரேசுவரி ஒரு சிறிய கிராமம். பம்பாய்வாசிகள் அடிக்கடி அங்கே உல்லாசமாகப் போய் வருவார்கள். போகவர ஓர் ஆளுக்கு நாலு ரூபாய் செலவாகும். இரண்டு நாள் தங்கினால் இன்னும் இரண்டு ரூபாய் மேலே ஆகும்.

இங்கே எப்போதும் ஜனங்கள் வந்துகொண்டே இருக்கிறார்கள். கிராமத்தின் மத்தியில் வஜ்ரேசுவரியின் கோயில் இருக்கிறது. வெள்ளைச் சலவைக் கல்லில் தேவியின் சிலை அமைந்திருக்கிறது. அதனால்தான் வஜ்ரேசுவரி என்று பெயர். சுற்றிலும் காடும் குன்றும் விசேஷம். எங்கே பார்த்தாலும் சிறிய ஓடைகள். ஆறு ஒன்றும் இருக்கிறது. இரண்டு சிறிய கோயில்கள் இருக்கின்றன; 'ஓகோ' என்று மலைக்கும்படி வேலைப்பாடு இல்லாவிட்டாலும், சரித்திர விசேஷம் உள்ள பழமையான கோயில்கள். வஜ்ரேசுவரியின் சிலை சுமார் ஐந்து அடி உயரம் இருக்கும். கோயில் ஒரு சிறு குன்றின்மேல் ஓரத்தில் இருக்கிறது. குன்று ஏறப் படிகள் இருக்கின்றன. இங்கிருந்து சுமார் அரைமைல் தூரத்தில் சிவன் கோயில் இருக்கிறது. வழக்கம் போல நந்தி, பிராகாரம் எல்லாம் உண்டு. கோவிலின் முன், மூன்று குளங்கள் இருக்கின்றன. இவை தாம் மிகவும் பிரசித்தம். குளம் ஒவ்வொன்றும் சுமார் டன்னிரண்டு அடி நீளம்; ஆறடி அகலம்; நாலடி ஆழம். இவற்றைக் குளம் என்பதை விட நீர்த்தேக்கம் என்றே சொல்லலாம். குளங்களுக்குக் கல் போட்டுப் படி இறக்கி இருக்கிறார்கள்; அடியிலும் கல் பரப்பி இருக்கிறது. பரப்பிய கற்களின் இடுக்குகளைத் தவிரத் தண்ணீர் ஊறுவதற்கு வேறு வழியே இல்லை. அடியில் ஊற்று இருப்பதால்தான் அந்த இடுச்குகளின் வழியே குளங்களில் நீர் தேங்குகிறது. இப்படி ஊறித் தேங்கிய நீரைக் காலி செய்யவும் முடியும். தொட்டிகளைத் திறந்துவிட உள்ள வழி மாதிரி இந்தக் குளங்களுக்கும் வடிகால் வைத்திருக்கிறார்கள்.

இந்தக் குளங்களில் ஒன்று வெந்நீராக இருக்கும்; இரண்டாவது சாதாரணச் சூடு; மூன்றாவது வெதுவெதுப்பு. இவை தவிர

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 2-4-'48), பெங்களூர்.

நான்காவது குளம் ஒன்றும் இருக்கிறது. அதில் ஜலம் சில்லென்று குளுமையாக இருக்கிறது. குளிர் காலமோ வெயில்காலமோ, சௌகரியப்படி இந்தக் குளங்களில் ஸ்நானம் செய்யலாம்.

சிறிய குழந்தைகள் முதல் அவரவருக்கு வேண்டியப்படி எந்தக் குளத்தில் வேண்டுமானாலும் ஆனந்தமாய்க் குளிப்பார்கள்.

சிவன் கோவிலை விட்டுப் பத்தடி தூரம் சென்றால் இந்த மாதிரியே இன்னும் பல குளங்கள் இருக்கின்றன. சில சதுரவடிவு; சில வட்டவடிவு. அவைகளின் நீர் சுத்தமாக இருக்கும்; குடிப்பதற்கு ஏற்றது. தெரியாமல் உள்ளே இறங்கி நின்றால் மின்சார சக்தி தாக்கியது போல் இருக்கும். எல்லாம் ஒரே சூடாக இல்லாமல் விதம்விதமாக இருப்பதுதான் விசேஷம். சில குளங்களின் அடியில் மணல் படிந்து இருக்கிறது. பார்வைக்கு அந்த மணல் தீய்ந்து கருகியது போல் இருக்கும். எல்லாக் குளங்களின் நீரிலும் கந்தக வாசனை அடிக்கிறது. இதனால்தான் இந்த நீர் எப்போதும் சுத்தமாக இருக்கிறது. எந்த நோயையும் தீர்க்கும் சக்தி இந்த நீருக்கு உண்டு என்கிறார்கள். தினமும் தவறாமல் இதில் குளித்தால் எந்த விதமான கடி, சொறி, சிரங்குகளும் சொஸ்தமாகி விடும்; தொற்று நோயோ சருமவியாதியோ இருப்பவர்கள்கூட இங்கே வந்து எவ்வளவோ குணமடைந்திருக்கிறார்கள். குளங்களில் படுத்தோ உட்கார்ந்தோ ஊறிக் குளித்தால், வாதம், உடம்பு வலி, பிடிப்புகள் எல்லாம் தீர்ந்து விடும்.

இங்கிருந்து இரண்டு மைல் தூரத்தில் கணேசபுரம் என்று ஓர் இடம். அங்கே ஒரு பிள்ளையார் கோவில். அதன் எதிரிலும் இப்படியே தொட்டிகள் போன்ற மூன்று குளங்கள் இருக்கின்றன. ஒன்று மிகவும் சூடு; மற்றொன்று சாதாரணம்; மூன்றாவது குளிர்ந்த நீர். கோவிலுக்கு எதிரில் ஒரு சத்திரம். இது அன்ன சத்திரம் இல்லாவிட்டாலும் இங்கே சமைக்கவோ, தங்கவோ வேண்டிய சௌகரியங்கள் செய்துகொடுப்பார்கள். இந்த ஊரில் காய்கறி, பழவகைகளுக்குக் குறைவில்லை. வேண்டிய பால் கிடைக்கும்; கொள்ளை மலிவு. சிற்றுண்டிச் சாலைகளுக்கும் பஞ்சமில்லை.

பிள்ளையார் கோவிலுக்குப் பக்கத்தில் ஒரு குடிசை இருக்கிறது. அங்கே ஒரு பெரியவர் இருக்கிறார். அவர் பெயர் நித்தியானந்த சுவாமிகள். இளைத்துத் துரும்புபோல் இருக்கிறார். பெரிய கம்பளி ஒன்றை உடம்பில் சுற்றிக்கொண்டு எப்போதும் நடமாடிக்கொண்டேயிருக்கிறார். நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்வதும் குழந்தைகளுடன் விளையாடுவதுமே அவர் வேலை. இது தவிர, குழந்தைகளுக்கு ஒரு பள்ளிக்கூடமும் ஏற்படுத்தியிருக்கிறார். அவரைப்பற்றி ஜனங்கள் எவ்வளவோ கதைகள் சொல்லுகிறார்கள். அவருக்கு ஆங்கிலம் தெரியும் என்பதுமட்டும் பேசும்போதே தெரிகிறது. அவருடைய பிரசங்கம் ஒன்றை நான் கேட்டேன். அந்தப் பிரசங்கத்தின் ஒரு பகுதி இது:

"ஓர் இரவு சத்திரத்தில் தங்கினேன். நல்ல நிலவொளி வீசிக்கொண்டிருந்தது. வானத்தில் நட்சத்திரங்கள் பளிச்சென்று மின்னின. இயற்கையின் அழகையும் அற்புதத்தையும் எண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண்டிருந்தேன். அப்போது ஒரு குரல், 'ஐயோ! அப்பா!' என்று கேட்டது. எவனோ

ஒருவன் இருமி இருமித் துடித்துக் கொண்டிருந்தான். அவன் அந்தச் சத்திரத்திலேயே இருக்கிற ஒரு நோயாளி. பாவம்! உடனே எழுந்து அங்கே போனேன். 'ஏன், அப்பா, இப்படி அவதிப்படுகிறாய்? ஏதாவது மருந்து வாங்கிக்கொள்வதுதானே? எக்ஸ்ரே படம் பிடித்துப் பார்க்கலாமே?' என்றேன். அதைக் கேட்ட நோயாளி கண்ணீர் வடிக்க ஆரம்பித்துவிட்டான். 'பெரியவரே, அதை ஏன் கேட்கிறீர்கள்? எல்லாம் பார்த்தாகிவிட்டது. க்ஷயம் என்று கூறிவிட்டார்கள். ஆஸ்பத்திரியில் இடம் கேட்டேன். அதுவும் இல்லையாம். நானோ ஏழை. இதுவோ தொற்று நோய். நான் என்ன செய்வேன்? என்னைக் கடவுள்தான் கவனிக்க வேண்டும். இந்தக் குளங்களின் நீர்தான் எனக்கு மருந்து' என்று சொல்லும்போது அவன் தொண்டை தழுதழுத்தது. குழந்தை போலக் கோவென்று அழுதான். 'தம்பீ, வருத்தப்படாதே; பகவான் கண் திறப்பார்' என்று சொல்லித் தேற்றினேன்."

அன்று முதல் அவர் அந்த நோயாளிக்குத் தம் கையினாலேயே பணிவிடை செய்துவருகிறார். நோயாளியையும் பார்த்தேன். அவன் என்னிடம், "என்னைப்போல் ஓர் ஏழைக்கு இந்த நோய் வந்தால் சமாளிக்க முடியுமா? எல்லாம் பகவானின் செயல். பணம் படைத்தவர்களுக்கு ஆஸ்பத்திரியும் வைத்தியமும் இருக்கின்றன. நமக்கெல்லாம் இதைப்போல இடந்தான் மருந்து" என்றான்.

'ஸானிடோரியம், ஸானிடோரியம்' என்கிறார்களே; உண்மையில் இந்த இடத்தைத்தான் அப்படிச் சொல்ல வேண்டும். யார் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் இங்கே இருக்கலாம்; ஆனந்தமாகக் காலம் கழிக்கலாம்.

வைத்தியனின் யுக்தி

வைத்தியன் நோயாளியைப் பார்த்து, 'உனக்கு நிச்சயம் குணமாகிவிடும்' என்று ஆரம்பத்திலேயே தைரியமூட்டினால் நோயாளி கவலையற்று இருப்பான்; வைத்தியனுக்கும் பணம் தர மாட்டான். 'நீ இறந்துவிடுவாய்' என்று அதிகமாகப் பயமுறுத்தினாலும், 'இனிமேல் நான்தான் பிழைக்கப் போவதில்லையே' என்று பணம் தரமாட்டான். ஆகவே, தைரியம், பயம் இரண்டையும் நோயாளிக்கு வைத்தியன் அளவறிந்து ஊட்டுவான்.

வைத்தியன் என்ன மருந்து வேண்டுமானாலும் கொடுப்பான். ஆனால் பத்தியத்தைமட்டும் கடுமையாகச் சொல்வான். நோய் குணமானால், 'மருந்தின் மகிமை' என்பான்; ஆகாவிட்டால், 'பத்தியத்தில் ஏதோ தவறு செய்துவிட்டீர்கள்' என்று சொல்லிவிடுவான்.

நோய் அதிகமாகி நோயாளி இறந்த பிறகுதான் நோயின் தன்மை இப்படி என்று வைத்தியன் புரிந்துகொள்வான்.

முதலில், 'வைத்தியம் செய்ய ஆரம்பிக்கவேண்டும்' என்றும், அப்புறம் 'மருந்துச் செலவுக்கு' என்றும், கடைசியில், 'சம்மானம்' என்றும் வைத்தியன் பணம் பறிப்பான்.

—நீலகண்ட தீட்சிதரின் 'கலிவிடம்பனம்'



பரமஹம்ஸர்

ஆசையும் அமைதியும்: ஒரு கப்பலின் பாய்மரத்தில் ஒரு பறவை உறங்கிக்கொண் டிருந்தது. கப்பல் புறப்பட்டு நடுக்கடலுக்கு வந்ததும் அது விழித்துக்கொண்டது; சுற்று முற்றும் பார்த்தது. கரை கண்ணுக்குத் தெரியவில்லை. பேடையை விட்டு வந்துவிட்டோமே என்று அதற்கு ஏக்கம், பாவம்! முதலில் வடக்கு நோக்கி வெகுதூரம் பறந்து போயிற்று. அப்படியும் கரை தெரியவில்லை. மறுபடியும் பாய் மரத்தில் வந்து உட்கார்ந்தது. சற்றுநேரம் ஆனதும் திரும்பவும் ஏக்கம் வந்துவிட்டது. இந்தத் தடவை கிழக்கு நோக்கிப் போயிற்று. அங்கேயும் கரை தெரியவில்லை. இப்படி நாலு பக்கமும் போய்ப் போய் அலுத்துச் சலித்துக் கடைசியாக அந்தப் பாய்மரத்திலேயே வந்து அமர்ந்துவிட்டது. அப்போதுதான் அதற்கு நிம்மதி ஏற்பட்டது. அது மாதிரியே, சம்சாரத்தின்மேல் உள்ள கொஞ்ச நஞ்சம் பற்றும் நீங்கினால்தான் மனிதனுக்கு அமைதி ஏற்படும். (வாக்கு)

கடவுளின் காட்சி: ஸ்ரீ ராமகிருஷ்ணர் கடவுளைக் காணவேண்டுமென்று தவியாகத் தவித்தார். கடவுளைக் காணாமல் உயிர் வாழ்வதைவிட உயிரை விட்டுவிடுவதே நலம் என்று துடித்தார். ஒவ்வொரு கணமும் அவருடைய உள்ளம் ஆவல் மிகுந்து படபடத்தது. ஒரு நாள், 'இனி வாழ்வதில் பயன் இல்லை' என்று உயிரைப் போக்கிக் கொள்ளத் துணிந்தார். சீதை அசோக வனத்தில் தன் உயிரைப் போக்க எண்ணியபோது மாருதி தோன்றி ராமனது திருநாமத்தைச் சொல்லி நம்பிக்கை ஊட்டினான்.

உயிரை மாய்ப்பது என்ற நிலைக்கு வந்தபோது ராமகிருஷ்ணருக்கும் இறைவன் திருவருட் சோதியைத் தரிசிக்கும் பேறு கிடைத்தது. அவரே தம் அநுபவத்தை எடுத்துச் சொல்லியிருக்கிறார். அவர் தங்கியிருந்த அறை



வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

யும் அதன் கதவுகளும் கோவிலும் அவரைச் சுற்றிலும் இருந்த அனைத்தும் திடீரென்று அவர் கண்ணுக்கு மறைந்தன. ஒன்றும் இல்லாத வெறும் பாழாக இருந்தது. ஆனால் அங்கே கண்ணைக் கூசுவிக்கும் அருட்பெருஞ்சோதி! அகண்டமான பேரொளி! அந்தச் சோதியின் அலைகள் ராமகிருஷ்ணரை வந்து மோதின. அந்த ஒளி வெள்ளத்தில் அவர் ஆழ்ந்தார். தம்மையே மறந்து கீழே விழுந்தார். பிறகு அங்கே என்ன நடந்தது என்பதே தெரியாது. இரண்டு நாட்கள் தம்முடைய உணர்வையே இழந்திருந்தார். என்றும் நுகர்ந்தறியாத பேரின்பம் ஒன்று அவருக்குள்ளே தங்கியது. அதன் உணர்ச்சி இன்னதென்று சொல்லவொண்ணாததாக இருந்தது. ‘அந்தத் திருச்சோதிக் காட்சி அவருடைய உள்ளத்தில் பதிந்துவிட்டது. (வாழ்வு)



பாம்பின் கால் பாம்பறியும்: சாலை ஓரத்தில் ஒரு சாது சமாதியில் ஆழ்ந்திருந்தார். அந்த வழியே போய்க்கொண்டிருந்த ஒரு திருடன் அவரைப் பார்த்தான். "ஓகோ! இந்த ஆசாமி எங்கோ திருடிவிட்டு வந்திருக்கிறான். களைப்பினால் சாய்ந்துகொண்டிருக்கிறான். போலீஸ்காரர்கள் வந்து அழைத்துப் போய்விடுவார்களே என்ற கவலை இருந்தால் இப்படித் தூங்குவானா? சரி, சரி. இவன் எக்கேடு கெட்டால்

என்ன? நாம் ஜாக்கிரதையாக இருப்போம்'' என்று போய்விட்டான். கொஞ்ச நேரத்துக்குப் பிறகு ஒரு குடிகாரன் அந்தப் பக்கமாக வந்தான். அவனும் அந்தச் சாதுவைப் பார்த்தான். ''அடேடே, இவன் மிடாக் குடியனாக இருப்பான்போல் இருக்கிறது. அளவுக்கு மிஞ்சிக் குடித்துவிட்டு உடம்பு தெரியாமல் கிடக்கிறானே! இவனல்லவா அசல் குடிகாரன்? நம்மைக் குடிகாரன் என்று சொல்கிறார்களே; நாம் என்ன, இப்படி நிதானம் தவறிக் கிடக்கிறோமா?'' என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான். அப்பால் ஒரு சாது சாலை வழியே வந்தார். சமாதியிலே ஆழ்ந்த பெரியாரைப் பார்த்தார். அருகிலே சென்று கவனித்தபோது அவருடைய முகத்தில் இருந்த ஒளியைக் கண்டு அவர் மிகவும் பெரியவரென்று உணர்ந்தார். 'என்ன ஆச்சரியம்! அருள் பெற்ற பெரியார் எந்த இடத்தில் இருப்பார்கள் என்று வரையறையாகச் சொல்ல முடியாது போல் இருக்கிறது. இந்த மகான் திருடனும் குடியனும் மாடும் மனிதனும் போகும் சாலைக்கருகே புழுதி தவழக் கிடந்தாலும், ஆண்டவனது அருள் வெள்ளத்திலே யல்லவா நீந்திக்கொண்டிருக்கிறார்? இவரைத் தரிசித்தது நம்முடைய பாக்கியம்' என்று எண்ணி அவருடைய திருவடிகளை மெல்ல வருடலானார். (வாக்கு)

அணிலும் அணையும்

அணை கட்ட ராமனுக்கு அணிலும் உதவியதாக ராமாயணம் சொல்கிறது. அதை நம்மில் பலர் இப்போது நம்ப மாட்டோம். ஆனால், இதோ இந்த நிகழ்ச்சி உண்மையில் நடந்தது; அமெரிக்க 'மகஸீன் டைஜெஸ்ட்' பத்திரிகையில் வெளியாகியிருப்பது:

'நியூ யார்க் பவர் அண்ட் லைட் கார்ப்பொரேஷன்' என்ற மின்சார உற்பத்திக் கம்பெனியார், ஸகாண்டகா என்ற நதியில் ஓர் அணை கட்டி மின்சாரம் உற்பத்தி செய்ய விரும்பினார்கள். ஆனால், அந்த அணையை எப்படிக் கட்டுவது என்று புரியாமல் எஞ்சினீர்கள் யோசித்துக்கொண்டேயிருந்தார்கள். இந்தச் சமயத்தில் 'பீவர்' என்ற பல நீர்நாய்கள் வந்து அவசர அவசரமாக 126 அடி அகலம், 6 அடி உயரமுள்ள ஓர் அணையைக் கட்டிப் பக்கத்திலே 15 ஏகரா நிலத்தை வெள்ளத்தில் முழுகடித்துவிட்டன. 'பேஷ்! இனிக் கட்டிவிடலாம்' என்று எஞ்சினீர்களுக்கு நம்பிக்கை வந்துவிட்டது. தங்கள் திட்டப்படி அந்த அணையைப் பூர்த்தி செய்துவருகிறார்கள்.

உதவி செய்யத் தயார்

பிரயாணி: பத்து நிமிஷத்தில் ரெயில் புறப்படுகிறது. அதற்குள்ளே டிக்கட் வாங்கவேண்டும், சாமானைப் பார்த்துக் கொள்ள வேண்டும், ரொட்டியும் தின்னவேண்டும். நீ கொஞ்சம் உதவி செய்வாயா?

நண்பர்: ஆஹா! உனக்காகக் கடைசிக் காரியத்தை நான் முடித்துவிடுகிறேன். மற்ற இரண்டையும் நீ பார்த்துக்கொள்.

—'வீக்லி டெலிகிராப்', ஷெப்பீல்ட்.

குருவாயூர் சத்தியாக்கிரகம் ஒரு காலத்தில் பிரசித்தம்;
அந்தக் கோயிலின் மகிமை என்றென்றும் பிரசித்தம்.

குருவாயூர் அப்பன்

கே. கே. மேனன்

சாயங்காலம். அந்தச் சிறு கோவில் கோபுரத்தின்மேல் சூரியனின் பொன்னொளி படிந்து அதன் இயற்கை அழகுக்குப் பின்னும் மெருகு கொடுத்தது. தீபாராதனை வேளை நெருங்கியது. கர்ப்பக்கிருகத்துக்கு வெளியே ஆண்கள், பெண்கள், சிறுமிகள், சிறுவர்கள், குழந்தைகள் எல்லாரும் கதவு திறக்கும் நிமிஷத்தை எதிர்பார்த்துக்கொண்டு பக்தி பரவசமாக நின்றார்கள். சிலர் சுத்தமாக இருக்க வேண்டுமென்று ஈரத்துணி கட்டியபடி நின்றார்கள். ஒரே நிச்சப்தம்.

சற்று நேரத்தில் மணிகள் கண கணவென்று ஒலித்தன. கதவு திறந்தது. குருக்கள் சிலர் இனிய சுரத்துடன் மந்திரங்களை உச்சரித்தார்கள். கதவு திறந்ததும் பல வாத்தியங்கள் முழங்க, அபூர்வமான அலங்காரத்தோடு கண்ணபிரானுடைய திவ்விய தரிசனம் கிடைத்தது. "நமோ குருவாயூரப்பா" என்று பக்தர்கள் எல்லாரும் சொல்லும் போது, அங்கே எவனாவது நாஸ்திகன் வந்தால்கூட உணர்ச்சி மேலிட்டுப் பக்தியில் ஈடுபட்டு விடுவான். இந்தக் காட்சியை அங்கே இருந்து அநுபவித்தால்தான் தெரியும்; வாயால் வர்ணித்துச் சொல்ல முடியாது.

தென்மலையாளத்தில் பொன்னானி தாலூகாவில் ரெயில் மார்க்கத்துக்கு விலகி ஒரு மூலையில் இருக்கிறது குருவாயூர். சோரனூரிலிருந்தோ திருச்சூரிலிருந்தோ 20 மைல் தூரம் பஸ்ஸில் பிரயாணம் செய்தால் குருவாயூர் போய்ச் சேரலாம். இந்த இடங்களிலிருந்து பஸ் சுலபமாகக் கிடைக்கும். பட்டாம்பி என்ற ஊரிலிருந்து குருவாயூருக்குப் பஸ் போகிறது.

இந்தக் கோவில் சிறியது. வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு ஆடம்பரமாகத் தோன்றாது. தென்னாட்டிலுள்ள பல கோயில்களில் இருப்பதுபோல் இங்கே சிற்பங்களும் இல்லை. கோவிலுக்குள்ளே கால் வைத்ததும், அங்கே இருக்கும் பரிசுத்தமான சூழ்நிலையால் உலகத்தையே நாம் மறந்து விடுவோம். பகவானுடன் இரண்டறக் கலந்துபோகும் உணர்ச்சியைத் தவிர வேறு நினைவுக்கே மனத்தில் இடம் இராது. கோவிலிலிருந்து வெளிவருபவர்கள், 'என் மனமார வேண்டிக்கொண்டேன்; எனக்குப் பரிபூர்ணமான திருப்தி கிடைத்தது' என்று நினைக்காமல் இருக்க மாட்டார்கள்.

தென்னாட்டில் உள்ள பிரசித்தமான பல கோவில்களின் சரித்திரம் போல் இந்தக் கோயிலின் சரித்திரமும் மர்மமாக இருக்கிறது. ஆனால் கோவிலைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. எல்லாவற்றிலும் அதிகமாய் ஜனங்கள் சொல்லு

காப்பிரைட்: கிருகலட்சுமி (தெலுங்கு), சென்னை.

வது நாரதீய புராணத்தில் உள்ள ஒரு கதை.

பரீட்சித்து மகாராஜாவின் பிள்ளை ஜனமேஜயன், தன் தந்தை பாம்பு கடித்து இறந்ததற்குப் பழி தீர்ப்பதற்காகச் சர்ப்ப யாகம் செய்தான்; பல பாம்புகள் யாககுண்டத்தில் விழுந்து இறந்தன. அதன் பலனாக ஜனமேஜயனுக்குக் குஷ்ட ரோகம் பிடித்தது; சுற்றத்தார் விலகினார்கள். அவனுக்கு மன அமைதி போய்விட்டது. அப்போது அவன்மேல் இரக்கப்பட்டு ஆத்திரேய மகரிஷி, "குருவாயூர் அப்பனைப் போய்ப் பிரார்த்தனை செய்" என்று யோசனை சொல்லி அந்தக் கோயிலைப்பற்றிப் பின்வரும் வரலாற்றையும் தெரிவித்தார்:

"சுத்தபாஸ் என்று ஒரு பிரஜாபதி இருந்தான். அவன் மனைவி பிரச்னி. இருவரும் பிள்ளைப் பேற்றை விரும்பி, பிரம்மாவைக் குறித்துத் தவம் செய்தார்கள். அவர் பிரத்தியட்சமானார்; தம் பதிகளுக்குப் பத்மநாபனுடைய விக்கிரகம் ஒன்றைக் கொடுத்தார். அதைத் தமக்குப் பகவானே கொடுத்ததாகவும் அதைப் பூஜிக்கும் முறையையும் அவர் தெரிவித்தார். சுத்தபாஸும் அவன் மனைவியும் இமயமலைச் சாரலுக்குப் போய்த் தவம் செய்தார்கள். மகா விஷ்ணு பிரசன்னமானார். தாம் அவர்களுக்கு மூன்று ஜன்மத்தில் குழந்தையாகப் பிறக்கப் போவதாக வரம் தந்து மறைந்தார். பிரச்னி கர்ப்பம் தரித்தாள். பிள்ளை பிறந்தது. பிள்ளையின் பெயர் பிரச்னி கர்ப்பன். அவன் புகழ் பெற்று வாழ்ந்தான்.

"பிறகு அந்தத் தம்பதிகள் அதிதியாகவும் கச்யபராகவும் பிறந்தார்கள். பகவான் அவர்கள் வயிற்றில் வாமனமூர்த்தியாய் அவதரித்தார். மூன்றும் முறை அவர்கள் தேவகியும் வசுதேவருமாய்ப் பிறந்து கண்ணனைப் பெற்றெடுத்தார்கள். கம்சனைக் கொன்றபின் கண்ணன் துவாரகையை நிருமித்து அங்கே ஓர் ஆலயம் அமைத்தான். அதில் பத்மநாபனைப் பிரதிஷ்டை செய்தான். யதுவம்சம் பூண்டோடு அழிந்து, துவாரகை கடலில் மூழ்கும் நிலையில் விக்கிரகத்தைப் பிருகஸ்பதியே காக்கவேண்டுமென்று கண்ணன் முந்தியே சொல்லிவைத்திருந்தான். அவர் விக்கிரகத்தை எடுத்துக்கொண்டு வாயுவின் துணையுடன் தகுந்த இடம் பார்த்துக்கொண்டே வந்தார். வழியில் சிவபெருமான் எதிர்ப்பட்டுக் கேரள தேசத்துக்குப் போகும்படி குறிப்பாகச் சொன்னார். அப்படியே கேரளத்தில், ஒரு புனிதமான பிரதேசத்தில் விக்கிரகத்தைப் பிருகஸ்பதி ஸ்தாபித்தார். வாயுவின் உதவியால் ஏற்பட்ட அந்த ஸ்தலந்தான் குருவாயூர்."

இந்தக் கதையைக் கேட்ட ஜனமேஜயன் குருவாயூருக்குப் போய்க் கண்ணனைச் சேவித்துக் குஷ்ட நோயிலிருந்து விடுபட்டான், கிருஷ்ண பஜனை செய்துகொண்டே வெகுகாலம் சுகமாக வாழ்ந்தான்.

இந்தப் புராணம் மிகவும் புராதனமானதால் கோவிலும் பழையதாகவே இருக்கவேண்டும். குருவாயூரைப்பற்றி வழங்கும் கதைகளில் பல, கற்பனை மூலமாக எழுந்தவை. என்றாலும் சில கதைகளுக்குச் சரித்திர ஆதாரம் உண்டு. வடமொழியில் நாராயணீயம் என்ற மகா காவியத்தை இயற்றிப் புகழ்பெற்றவர் மெல்பட்டூர் நாராயண பட்டாத்திரி பாதர். அவரைக் கொடிய குஷ்ட நோய் பற்றிக்கொண்டது. பல மருந்துகள் சாப்பிட்டார்; குண

மாகவில்லை. கடைசியாக வீட்டை விட்டுக் குருவாயூர் அப்பனையே சரணாக வந்து அடைந்தார். படிப் படியாகப் பட்டரின் நோய் குண மாகி வந்தது. அதனால் அவர் தம் வாழ்வில் மிகுந்த காலத்தையும் அங்கேயே கழித்துவிடத் தீர்மா னித்தார். அப்போது கண்ணன் அவரைச் சோதிக்க ஆரம்பித்தான்.

ஒரு நாள் பட்டர் வழக்கப்படி கோவிலை வலம் வந்துகொண் டிருந்தார்; கையில் ஏடுகளுடன் அவரை ஒரு நம்பூதிரி தொடர்ந்து வந்தார். பட்டர் முன்கோபி. பட படப்பும் அகம்பாவமும் உடையவர். குருவாயூர் அப்பனுக்குத் தாமே முதல் பக்தர், வடமொழிப் பண்டிதர்களுள் தாமே தலை சிறந்த வர் என்று அவருக்கு எண்ணம். நம்பூதிரியைப் பார்த்துக் கடுகடுப் போடு, "நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டார். நம்பூதிரி தயக்கத்தோடு, "ஒன்று மில்லை; நான் குருவாயூர் அப்பனைப் பாடியிருக்கிறேன். என் பாட்டில் ஏதாவது பிழை இருந்தால் திருத்திக் கொடுக்க வேண்டும்" என்று கேட் டார். "நீர் பாடியிருப்பது ஸம்ஸ்கிரு தத்திலா, மலையாளத்திலா?" என்று பட்டர் கேட்டார். "மலையாளத்தில்" என்று பதில் வந்தது. "சரி; அப்படி யானால் வேறு யாரிடமாவது போய்க் கேளும்; ஸம்ஸ்கிருதத்தைத் தவிர வேறு எந்தப் பாஷையையும் நான் பார்க்கமாட்டேன்" என்று பட்டர் எடுப்பாகச் சொல்லிவிட்டார். நம்பூ திரி முகம் வாடிப் பேசாமல் போய் விட்டார். அதுமுதல் பட்டரை மறுபடியும் நோய் தொற்றிக் கொண்டது. உடம்பிலும் மனத் திலும் எரிச்சல் எழுந்தது. "ஸ்வாமி! இதென்ன அவஸ்தை!" என்று கூக்குரலிட்டு அவர் தவித்தார். கடைசியில் அவர் கனவில் அப்பன் ஒரு சிறுவனைப்போல் தோன்றி, "அகம்பாவம் தலைவிரித்தாடும் உன் பக்தியைவிட வணக்கம் நிறைந்த நம்பூதிரியின் பக்தியே எனக்குப் பிடித்தது. எழுந்திரு, போய் அவனைச் சமாதானம் செய்" என்று கட்டளையிட்டான்.

பட்டர் எழுந்தார். கோவிலுக்குள் ஓடினார். கர்ப்பக்கிருகத்தின் முன், ஏட்டுச்சுவடிகளோடு கிடந்து இதயம் வெடித்து விடும்படி நம்பூதிரி அழுதுகொண்டிருந்தார். அவருடைய காலில் விழுந்து கண்ணீரைத் துடைத்தார் பட்டர். ஏட்டுச்சுவடிகளை வாங்கித் திருத்திக் கொடுத்தார். அந்த நூலுக்குக் 'கிருஷ்ண விலாஸம்' என்று பெயர்.

இந்தக் கோவிலில் பூஜை செய்து வந்த ஒரு கிழவருக்கு மனைவி ஒருத்தி யும் ஏழெட்டு வயதுள்ள ஒரு பைய னும் இருந்தார்கள். அவர்கள் ஏழை களாக இருந்தாலும் நாள் தவறாமல் தாங்கள் சமைத்த அன்னத்தைக் கண்ணனுக்கு நிவேதனம் செய்து அதை உண்டு காலம் தள்ளினார்கள். கிழவர் ஒரு நாள் அயலூர் போக வேண்டியிருந்தது. பையனிடம் பூஜையை ஒப்பித்தார்; "அப்பா, சாமி சாப்பிடுவாரா?" என்று கேட்டான் பையன். "ஆகா! சாப்பிடுவார். ஸ்வாமியின் முன்னே சாதத்தை வைத்துக் கதவைச் சாத்திவிட்டு வெளியில் இரு; அவர் சாப்பிடுவார்!" என்று சொல்லிவிட் டுப் போனார்.

மறுநாள் பையன் அப்படியே செய்தான். ஆனால் வைத்த மாதிரியே இருந்தது நைவேத்தியம்; பையன், 'ஸ்வாமிக்குத் தொட்டுக் கொள்ள ஏதோ வேண்டும்போல் இருக்கிறது!' என்று எண்ணினான். ஒரு மாம்பழத்தைப் பறித்து

ஓட்டாஞ்சல்வியால் அதை நறுக்கினான். வீட்டுக்குப் போய் உப்புக் கொண்டுவந்தான். உப்பையும் பழத் துண்டுகளையும் கொட்டாங்கச்சியில் போட்டு ஸ்வாமியின்முன் வைத்தான். "இப்போது சாப்பிடு. நீ சாப்பிடாவிட்டால் அப்பா என்னை அடிப்பார்" என்று வேண்டிக்கொண்டு கதவைச் சாத்திவிட்டு வெளியே நின்றான். மீண்டும் உள்ளே போனபோது நைவேத்தியம் மாயமாய் மறைந்துவிட்டது. வேளை தப்பியும் பையன் வரவில்லையே என்று தாய் கவலைப்பட்டாள். முக மலர்ச்சியுடன் அவன் ஓடிவந்து விஷயத்தைச் சொன்னான். அவள் நம்பவில்லை. "நம் சாப்பாட்டுக்கு வழி என்ன?" என்றாள். பையன் பொய் சொல்லுகிறானென்று நினைத்துக் கணவர் வந்தவுடன் எல்லாவற்றையும் சொன்னாள். 'பையன் நைவேத்தியத்தை எங்கேயோ எறிந்திருக்கவேண்டும்; இல்லாவிட்டால் யாருக்காவது கொடுத்திருக்க வேண்டும்' என்று நினைத்து, கிழவர் பையனை அடித்துக் குற்றுயி ராக்கிவிட்டார். அன்று எல்லாரும் பட்டினி. பையனின் அழுகைக்குக் கண்ணன் செவி சாய்த்தான்; இரவில் பட்டரின் கனவில் சிறு பிள்ளைபோல் வந்து, "உங்கள் பையனின் வார்த்தை எழுத்துக்கு எழுத்து உண்மை" என்றான். மகனுக்குக் கிடைத்த அதிருஷ்டத்தை எண்ணி எண்ணிப் பட்டர் அவனை வாரி அணைத்துக்கொண்டார்.

இது உண்மையோ, கற்பனையோ தெரியாது; இன்றைக்கும் குருவாயூர் அப்பனுக்குக் கொட்டாங்கச்சியில்தான் நைவேத்தியம் நடக்கிறது!

இவை எல்லாம் பழைய கதைகள்; சமீபத்தில் நடந்த விஷயம் இது: நல்ல பாண்டித்தியம் உள்ள வித்வான்களை அழைத்துச் சிலபேர் பாகவதம் படிக்க வைப்பது வழக்கம். இதை 'ஸப்தாஹம்' என்பார்கள். அப்போது வித்வான்களுக்கு அவரவர் தகுதிக்கு ஏற்றபடி சம்மானம் செய்வார்கள். இப்படி ஒரு தடவை ஸப்தாஹம் நடந்து கொண்டிருந்தது. ஏழாம் நாளன்று ஒரு கிழவி வந்து, "இன்ன பெயருள்ளவர்தாமே ஸப்தாஹம் செய்து வைக்கிறார்?" என்று விசாரித்தாள். பக்கத்தில் இருந்தவர்கள் "ஆமாம்" என்றார்கள்.

"நான் நேற்று இரவு சொப்பனம் கண்டேன்: சிறு பையன் ஒருவன் வந்து, 'இங்கே இன்னார் ஸப்தாஹம் நடத்துகிறார்கள்; நாளைக்குக் கடைசி நாள். நீ போய் அங்கே குழந்தைகளுக்கு வாழைப்பழம் விநியோகம் செய்; நூறு ரூபாய் செலவாகும்; உன் கோரிக்கை நிறைவேறும்' என்றான். நான் இதோ பணம் எடுத்து வந்திருக்கிறேன்" என்றாளாம் கிழவி.

கோபுரத்தருகில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. இந்தக் கோபுரம் 1747 ஏப்ரலில் காரியக்கார் பணிக்கவீட்டில் இத்திராரிச மேனன் மேற்பார்வையில் கட்டியது என்று அதிலிருந்து தெரிகிறது.

கீழ்க் கோபுரத்தருகில் ஸம்ஸ்கிருதத்தில் ஒரு கல்வெட்டு இருக்கிறது. இந்தக் கோபுரம் 1842-இல் கள்ளிக்கோட்டை ஜாமொரின் ராஜா கட்டியதென்று அதிலிருந்து தெரிகிறது. 1790-இல் திப்பு சுல்தான் படை எடுத்தபோது ஒரு பாகம் சிதிலம் அடைந்திருக்க வேண்டும். அதை 1840 - இல் சீர்ப்படுத்தி இருக்கலாம். இந்தக் கல்வெட்டுக்களிலிருந்து கோவிலின் காலத்தை நிர்ணயிப்பதற்கில்லை.

கோவிலின் நித்திய பூஜைக்கு ஸ்ரீமத் ஆதிசங்கரர் ஏதோ ஏற்பாடு செய்திருக்கிறாராம். விடியற்காலை நாலு மணிக்குக் கோவில் கதவைத் திறக்கிறார்கள். பூஜையில் சிரத்தை உள்ளவர்கள் பலர் இந்த வேளைக்கே வந்து கூடிவிடுவார்கள். முதல் நாள் அலங்காரத்தைக் கலைப்பதற்கு முன்பே மறுநாள் விடியற்காலையில் தரிசனம் செய்வது விசேஷமாம். இதை 'நிர்மால்ய தரிசனம்' என்பார்கள். அலங்காரத்தைக் கலைத்தபின் விக்கிரகத்தின் மேல் நல்லெண்ணெய் ஊற்றி அபிஷேகம் செய்வார்கள். அது முடிந்ததும் சுத்தி செய்வதற்கு 'வாகை சார்த்து' என்று பெயர். இந்த எண்ணெயில் அபூர்வமான ஔஷத குணம் இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். பிறகு முதல் காலசந்தி பூஜை நடக்கிறது. அது ஆனதும் உற்சவ விக்கிரகத்தை யானைமேல் வைத்து ஊர்வலம் வருவார்கள். 'ஜண்டை' என்ற வாத்தியகோஷம் வானைப்பிளக்கும். அதற்குப் பின் ஒரு மணி நேரத்துக்கெல்லாம் அபிஷேகம் நடக்கும். இந்த அபிஷேகத்துக்கு, ஒன்பது வெள்ளிப் பாத்திரங்களில் தண்ணீர் எடுத்து உபயோகிக்கிறார்கள். அதனால் இதை 'நவகம்' என்கிறார்கள். பின்பு பத்து மணிக்குப் 'பந்தீரடி உற்சவம்.' உச்சிகாலபூஜை முடிந்தபின் பன்னிரண்டு மணிக்குக் கோவில் கதவைச் சாத்திவிடுவார்கள். மாலை ஆறு மணிக்கு மறுபடியும் கதவைத் திறப்பார்கள். மறுபடியும் ஊர்வலம்; தீபாராதனை. இரவு ஒன்பது மணிக்குப் பூஜை முடிந்தபின், எட்டு வித வாசனைகளால் தூபம் சமர்ப்பிப்பதோடு ஒரு நாள் பூஜை முடிவடைகிறது. இதற்குத் 'த்ரிபுக பூஜை' என்று பெயர்.

கார்த்திகை மாதத்தில் நடக்கும் உற்சவத்துக்குத்தான் ஏராளமான கூட்டம் வரும். இதை 'மண்டலோற்சவம்' என்பார்கள். 41 நாள் தொடர்ந்து நடக்கும் இந்த உற்சவத்தில் தினந்தோறும் சந்தனக் காப்பு உண்டு. இதைக் 'கல்பாபிஷேகம்' என்பார்கள். முதல்நாள் அப்பிய சந்தனத்தை மறுநாள் காலையில் எல்லாருக்கும் பிரசாதமாகக் கொடுப்பார்கள். இந்த உற்சவத்திலேயே, குருவாயூர் ஏகாதசி வருகிறது. அன்று எல்லா ஜாதியாரும் கோவிலுக்கு வந்து பூஜை செய்வார்கள். சித்திரை வைகாசியிலும், தை மாசியிலும் பத்து நாள் உற்சவம் நடக்கும். கள்ளிக்கோட்டை ஜாமொரின் ராஜாவே இந்தக் கோவிலுக்குத் தர்மகர்த்தா. கல்விசேரி நம்பூதிரிபாட் உதவி தர்மகர்த்தா. சென்னை தேவஸ்தானக் கமிட்டியின் மேற்பார்வையில் கோயிலை இவர்கள் கவனித்து வருகிறார்கள். கேரள தேசத்தில் இதற்கு ஏராளமான சொத்து இருக்கிறது. அதன் மூலம் வருஷத்தில் லட்சம் ரூபாய் கிடைக்கிறது. பக்தர்கள் சமர்ப்பிக்கும் தொகை மற்றொரு லட்சம். ஹரிஜன ஆலயப்பிரவேசத்துக்கு முதலில் தடை இருந்தது; இப்போது இல்லை.

இந்தியாவின் மற்றப் பாகங்களிலிருந்தும் பக்தர்கள் இங்கே தரிசனத்துக்கு வருகிறார்கள். குருவாயூர் அப்பனை வேண்டிக்கொண்டால் வீண்போவதில்லையாம். ரோகிகளுக்கு ஆரோக்கியம் உண்டாகிறதாம்; கஷ்டத்திலும் துக்கத்திலும் அடிபட்டவர்களுக்கு விடுதலையும் மனச்சாந்தியும் கிடைக்குமாம்.

கொலைபுரியும் மோகினிகள்

பி. கே. ஸேன்

'பெண்ணாக வந்ததொரு மாயப் பிசாசு' என்று பட்டினத்தார் பாடியது எல்லாப் பெண்களையும் குறித்தல்ல; அது போலவே இந்தக் கட்டுரையும் உத்தமிகளைக் குறிப்பதல்ல. அவர்களைப் பத்தினித் தெய்வம் என்று பாராட்டுவோம்; உலகப் பிரசித்தி பெற்ற இந்த மோகினிகள் அப்படி அல்ல. எழுதுபவர் போலீஸ் கமிஷனர்.

இதைப் படிக்கும்போது பெண் மணிகளுக்கு என்மேல் பிரமாதமாகக் கோபம் வரும். அதற்கு முன்னாலேயே அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு விடுகிறேன். கருணையே உருவான உத்தமிகளைப்பற்றி நான் இங்கே சொல்லவில்லை. நெஞ்சிலே ஈரமில்லாமல், ஆதிகாலம் முதல் தம் மேனி யழகைக் காட்டிப் புருஷர்களைக் குட்டிச்சுவராக்கினார்களே, அந்தப் பெண் பேய்களைப்பற்றித் தான் சொல்லவந்தேன். "இந்த மாதிரி பெண்களிடம் சிக்குவதை விடக் கொலைகாரன் கையில் மாட்டிக் கொள்வதே மேல்" என்கிறார் நீட்ஷே என்னும் ஜெர்மன் ஞானி.

'எந்தத் தகராறுக்கும் மூல காரணம் பெண்களே' என்று பிரெஞ்சுப் பாஷையில் ஒரு பழமொழி உண்டு. முன் நாளில் எத்தனை புருஷர்கள் இந்த மாதிரி பெண்களுக்காக ரத்தம் சிந்தி வெட்டி மடிந்திருக்கிறார்கள்! இப்போதுமட்டும் என்ன? இவர்கள் கைதான் ஓங்கியிருக்கிறது. எத்தனை குடும்பத்தை இவர்கள் கெடுத்திருக்கிறார்கள்! இவர்கள் செய்த அரசியல் கொலைகள் தாம் எத்தனை! அந்தக் காலத்தில் கௌடில்யர் என்ற அரசியல் நிபுணர் இவர்கள் இருக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்று தம் அர்த்த சாஸ்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இவர்கள் மனம் வைத்தால் ஆக்கவும் முடியும், அழிக்கவும் முடியும் என்கிறார். சமீபகாலத்தில் மாதா ஹரி போன்ற வேவுகாரிகள் நடத்திய மாயா விநோதங்களைக் கேட்டு யார்தாம் பிரமிக்கவில்லை?

கௌடில்யருடைய அர்த்த சாஸ்திரத்தில் வரும் செய்தி இது: "ஓர் அரசன் இராப் பொழுதைக் கழிக்க அந்தப்புரத்துக்கு வருகிறான். ஆசை நாயகி அவனை அன்போடு அழைத்து ஆதரவு காட்டுகிறாள். மையலில் ஈடுபட்டு மதிமயங்கி அவளை அணைத்துக் கொள்கிறான் அரசன். சந்தனம் பூசிய அவன் உடலில் அவளுடைய வைர வளையலின் கூர் பட்டுச் சிராய்த்துவிடுகிறது; அவ்வளவுதான். உடனே வளையலில் இருக்கும் விஷம் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. அந்தப்புரத்தின் மங்கலான ஒளியில் இன்னிசை கேட்கிறது; அதே சமயம் அரசன் விறைத்துப் போய்ப் பிணமாகி விடுகிறான்." - ஆயிரம் வருஷத்துக்கு முன்னே இப்படி நடந்திருக்கிறது! இப்போது பாருங்கள்: இந்த மாதிரி பெண்கள் ஒரே குண்டில் ஆளைத் தீர்த்துவிடுகிறார்கள்.

காப்பிரைட்: அமிர்தபஜார் பத்திரிகா (ஆங்கிலம்:3-4-'49), கல்கத்தா.

கொலைகாரனே பக்காத் திருடனே நல்ல அழகனுக இருந்தால் சில சமயம் அவனை இவர்கள் தெய்வமாகக் கூடக் கொண்டாடுவது உண்டு; இந்த அன்பு அளவுக்கு மீறினுல் இவர்கள் அவனுக்கு அடைக்கலமும் கொடுப்பார்கள்; சில சமயம் அசட்டுக் கற்பனையில் ஈடுபட்டுத் தாங்களே அவனுக்குப் பலியாகிவிடுவதும் உண்டு.

திருட்டிலும் கொலையிலும் சம்பந்தப்பட்டவனை அவன் ஆசைநாயகி எப்படி வேண்டுமானுலும் ஆட்டி வைப்பாள். இந்த மாதிரி பெண்களின் மோகவலையில் சிக்கிவிட்டால் பணச் செலவு ஏராளமாகப் பிடிக்கும்; ஆனுலும் மன அமைதி இராது. இவர்களோடு காலந் தள்ளுவதைத் தவிர வேறு வழியும் இல்லை. என்ன செய்வது? இப்படி இவர்களிடம் மாட்டிக்கொண்டு தவித்த சிக்காகோ பக்காத் திருடன் ஒருவன் தன்னைத் தூக்குப் போடுவதற்கு முன் என்ன எழுதிவைத்தான் தெரியுமா? தான் சிறையில் இருந்த அறையின் சுவரில், "அட பயல்களே! பெண்களை நம்பவே நம்பாதீர்கள்! அவர்களிடம் உங்கள் ரகசியங்களையும் சொல்லாதீர்கள்!" என்றுதான் தன் சகாக்களுக்கு எச்சரிக்கை செய்துவிட்டுப் போனுன்.

சொத்துச் சுதந்தரத்துக்கு ஆசைப்படுவதுபோல் ஒரு பெண்ணுக்காக எத்தனை கொலைகள் நடக்கின்றன! 'இவள் எனக்கே சொந்தம். பிறத்தியாருக்கு விட்டு விடுவேனே?' - எப்போதும் அவர்கள் மனத்தில் இதே எண்ணந்தான்.

திடீரென்று ஓர் ஆசாமி போலீஸ் ஸ்டேஷனுக்கு வருகிருன். "எங்களைத் தரித்திரம் பிடுங்கித் தின்றது. என் மனைவி இப்படித் தவிப்பதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. அவளை என் கையாலேயே கொன்றுவிட்டேன்" என்று தானே குற்றத்தை ஒப்புக்கொள்கிருன். இந்த மாதிரி சந்தர்ப்பத்தில் விஷயத்தை ஆராய்ந்து பார்த்தால், "அவள் என் சொத்து" என்ற மனேபாவமே கொலைக்குக் காரணம் என்று கண்டு கொள்ளலாம். "நமக்குப் பிரியமான பொருள்தான்; ஆனுல் அது இனிமேல் நமக்குப் பயன்

1. கிளிடெம்னெஸ்ட்ரா; 2. கிளியோபாட்ரா; 3. மதாம் து பாரி; 4. மாதா ஹரி - இவர்களின் ஆவிகள் இன்னமும் நம்மைச் சுற்றி அலைந்துகொண்டே இருக்கின்றன.

படாது; அதை ஒரேயடியாகத் தீர்த்து விட்டால் என்ன?'' என்று தன் அதிகாரத்தைச் செலுத்தப் பார்க்கிறான். தரித்திரம் விருத்தி ஆக ஆக ஆசையும் அதிகமாகிறதே யொழியக் குறைவதில்லை. பசியும் காமமும் அளவுக்கு மீறினால் ஆபத்துத்தான்.

வாழ்க்கையில் சிலருக்கு நினைத்தது கை கூடாமல் போகலாம். அதனால் உலகத்தின் மேலேயே வெறுப்புத் தட்டுகிறது. இது கடைசியில் கொலையில் வந்து முடிகிறது.

1929 - 30 - இல் லண்டனில் ஒரு விநோதக் கொலை வழக்கு நடந்தது. பதினாறு வயதுப்பெண் ஒருத்திமேல் அதே வயதுப் பையனுக்கு ஆசை; காதல்வெறி தலைக்கேறிவிட்டது. அவர்களுடைய பெற்றோர்கள் இதற்குத் தடையாக இருந்தார்கள். இரண்டு பேரையும் பிரித்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் பெண்ணை வேறு ஓர் இடத்துக்கு அனுப்பிவிட்டார்கள். ஆனால் பையன் விடவில்லை; அவளை எப்படியோ ஒரு நாள் தேடிக் கண்டுபிடித்துவிட்டான். அன்று இரவு அவளோடேயே தங்கினான். பெண்ணின் உறவினர்கள் இதைப் பார்த்துவிட்டார்கள். அவளைக் கண்டித்தார்கள். கொஞ்ச நாள் ஆனதும் பையன் எப்படியோ அவளை வெளியே அழைத்துக் கொண்டு போனான். பெண் திரும்பி வரவே இல்லை. பையன் மட்டும் சற்று நேரங் கழித்து நேராகப் போலீஸ் ஸ்டேஷனில் ஆஜரானான்; ''பி— செத்துப் போய்விட்டாள். நான் அவளைக் கொன்றுவிட்டேன்'' என்று திரும்பத் திரும்பக் கூவ ஆரம்பித்தான். அவனுக்கு வெறி பிடித்துவிட்டது! போலீஸ்காரர்கள் போய்ப் பார்த்தார்கள்; பாழடைந்த ஒரு வீட்டில் அந்தப் பெண்ணின் பிணம் கிடந்தது. அவள் மார்பில் ஆழமாகக் கத்தி பதிந்த அடையாளம் இருந்தது. பையன் அவளை ஏன் கொன்றான்? ''இவள் எனக்கே சொந்தம்; ஆனால் எனக்குக் கிட்டவில்லை. பிறத்தியாருக்கு மட்டும் கிட்டுவானேன்?'' என்ற எண்ணமே அவன் மூளையைக் குழப்பிவிட்டது.

கல்கத்தாவில் இந்தப் பத்துப் பன்னிரண்டு வருஷ காலத்தில் நடந்திருக்கும் பல கொலைகளுக்கு மூல காரணம் யாரென்று பார்த்தால் பெண்கள் தாம். வாழ்க்கையில் வெறுப்போ, பொறாமையோ, காதல் முறிந்து போனதோ, ஆசை அவலமானதோ ஏதாவது ஒன்று காரணமாக இருக்கும். 1936-இல் நடந்த பாக்லா கொலை வழக்கிலும் சரி, சமீபத்தில் ஒரு பிரபலஸ்தர் கொலையுண்டாரே அதிலும் சரி, இதெல்லாந்தான் காரணம்.

கொலையாளியாக இருந்தாலும் அவனுக்கு வாழ்க்கைத்துணை வேண்டுமே; அது மனித இயல்புதானே! அதனால் எவளாவது ஒருத்திமேல் ஆசை வைக்கிறான். இந்தப் பெண் மிகவும் நல்லவள் மாதிரிதான் நடிப்பாள். அதனால் அவளிடம் இன்னும் கவர்ச்சி ஏற்படும். சமூகக் கட்டுப்பாட்டுக்கு அடங்காமல் திரியும் ஒரு துஷ்டன், பெண்களோடு சகவாசம் செய்வது சாத்தியமில்லை; அவர்கள் இல்லாமலும் அவனால் காலந் தள்ள முடியாது. இந்த மாதிரி தர்ம சங்கடமான நிலையில் அவன் ஆசைநாயகி அவனை ஆட்டிவைக்கிறாள். அவன் தலைவிதியே அவள் கையில்தான் இருக்கிறது.

''தன் ஆசைநாயகனைக் காட்டிக் கொடுக்கும்போது அவளுக்குக் கஷ்

டமாக இராதா?'' என்றால் அப்படித் தான் இருக்கும். போலீஸார் கை யில் அவன் சிக்கின பிறகு எத்தனை பெண்கள் நாள் கணக்காக அழு திருக்கிறார்கள் தெரியுமா? பாக்லா வழக்கில்கூட இப்படித்தான் நடந்தது.

சென்ற 5000 வருஷ காலமாக, திரும்பத் திரும்ப இதையேதான் நாம் பார்த்துக்கொண்டு வருகி றோம். உலகத்தில் மனிதன் இருக் கும் வரையில் பொறாமையும் காம மும் பயமும் இருந்துதான் தீரும். அந்த நாளில் புருஷனைக் கிளிடெம் னெஸ்ட்ரா, கிளியோபாட்ரா இவர் கள் ஆட்டி வைத்தார்கள். சமீப காலங்களில் மதாம் து பாரி, மாதா ஹரி போன்றவர்கள் ஆட்டி வைத் தார்கள். செத்துப் போயும் இவர்கள் பிசாசு நம்மைச் சும்மா விட்டால்தானே! இன்னும் இந்தமாதிரி எத்தனையோ பெண் பேய்கள் இருக்கத்தான் இருக் கின்றன! நம்மைப் போல் ஆண்கள், பாவம், இவ்வளவெல்லாம் பார்த் தும் கேட்டுங்கூட இந்த மோகினி களின் மாயவலையில் சிக்கி மயங்கி விடுகிறோம்!

தலையணைச் சித்திரம்

உங்களுக்குத் தூக்கம் வராத சமயத்திலும் உடம்பு சரியாக இராதபோதும் ஒன்று செய்யுங்கள். உங்கள் தலையணையைக் கசக்கிவிட்டுக் கண்ணைக் கோணிக்கொண்டு அதையே பாருங் கள். ஏதாவது அட்டை இருந்தால் உடனே எடுத்துக் கொள்ளுங் கள். அதில் உங்களுக்குத் தோன்றுகிறபடி தலையணையின் சுருக் கங்களைப் பார்த்துப் படம் வரையுங்கள். பெரிய சித்திரகாரராகி விடுவீர்கள். இப்படித்தான் அமெரிக்காவில் இல்லினாய்ஸில் வசிக்கும் மிஸ் ப்ரைடே என்பவளுக்குத் திடீரென்று ஒரு நாள் படம் எழுதத் தோன்றிற்று. கொஞ்ச நாளாக அவளுக்கு ஜுல தோஷம்; அது சற்றுக் குணமானதும் கசங்கிக் கிடந்த தன் தலை யணையைக் கவனித்தாள். அதில் பலவிதமான உருவங்களும் காட்சிகளும் அவள் கண்ணுக்குத் தெரிந்தன. உடனே அவற் றைப் படம் வரைந்து, பெரிய சித்திரகாரி ஆகிவிட்டாள்.

''நான்தான் இதை முதல்முதலாகக் கண்டுபிடித்தேன் என்று நினைக்கிறேன்'' என்றாள் அவள். இதற்குத் 'தலை யணைச் சித்திரம்' என்று அவள் பெயர் வைத்திருக்கிறாள். ''எந்தக் கலைக்கும் பழக்கமும் திறமையும் வேண்டியிருக்கும். ஆனால் இது அந்த வகையைச் சேர்ந்ததில்லை. பழக்கம் உள்ளவர், இராதவர் யார் வேண்டுமானாலும் இப்படி வரைந்து பார்க்கலாம், மனத்துக்குள்ளே மறைந்து கிடக்கும் விஷயங் களைச் சில பேர் உருவகச் சித்திரமாக வரைவது வழக்கம். ஆனால் இது வேறு விதம்; கண்ணால் பார்த்ததைக் கற்பனையைக் கொண்டு உருவங்களாகவோ காட்சிகளாகவோ சித்திரிக்கிறோம்; தலையணைச் சித்திரத்திலுள்ள விசேஷம் இதுதான்'' என்று அவள் சொல்லுகிறாள்.

கார்ட்டூன் கதம்பம்

பாலன்ஸ் செய்வதில் வல்லவர் ராஜாஜி" என்றப் ஓமாந்துள்

— மார்ச்



— ப்ளிட்ஸ்

— சங்கர்ஸ் வீக்லி


கரடி வேட்டை
அட்லாண்டிக் ஒப்பந்தம்
— ப்ரீ இந்தியா


புதிய குழந்தை ஜனனம்
பழம் பசலி ராஜஸ்தான்
ஜனநாயகம்
— அமிர்தபஜார் பத்திரிகை


மார்ச் 1949!
நடந்ததை நினைத்தால்...
மார்ச் 1950!
காமராஜ்
ராஜா
காமராஜ்
ராஜா
— ஸ்வதந்த்ரா

'அன்ன விக்கிரயம் பாவம்' என்பது பழைய தர்மம். இன்று அதுவே மகத்தான சேவை.

ஹோட்டல் தொழில்

எஸ். ஸி. ஸேன் குப்த

முன் காலத்தில் எகிப்து, தென் அரேபியா, பாரசீகம், இந்தியா இந்த நாடுகளிலிருந்து கடல்மார்க்கமாகவும் தரை வழியாகவும் வியாபாரிகள் கூட்டமாகப் புறப்பட்டுப் போவார்கள். நடுநடுவே அவர்கள் தங்கும் இடங்களில் தண்ணீர்ப்பந்தல் மாதிரி அப்போதைக்கு வசதி செய்துவைத்திருக்கும். வியாபாரம் ஓங்க ஓங்க, சத்திரங்கள் உண்டாயின. கி. பி. 15-ஆம் நூற்றாண்டு வாக்கில் சத்திரம் வைத்து நடத்துவது பெரிய தொழிலாகிவிட்டது. 16, 17, 18 - ஆம் நூற்றாண்டுகளில் வியாபார அபிவிருத்தியோடு இந்தத் தொழிலும் விருத்தி அடைந்தது. ஒவ்வோர் ஊரிலும் ஒவ்வொரு கிராமத்திலுங்கூட இப்படிச் சத்திரம் சாவடிகள் ஏற்பட்டன.

19, 20 - ஆம் நூற்றாண்டுகளில் போக்குவரத்து வசதி அதிகமாயிற்று. பழைய சத்திரங்கள் போய் ஹோட்டல்கள் தலையெடுத்தன. சுமார் நூறு வருஷத்துக்கு முன் ரெயில் பிரயாணம் தொடங்கினபோதுதான் 'ஹோட்டல்' என்ற சொல் வழக்கில் வந்தது. அப்போது பிரெஞ்சுக்காரர் கையில் இருந்தது இந்தத் தொழில். நாளடைவில் ஐக்கிய அமெரிக்கர் அவர்களிடமிருந்து தொழில் நுட்பத்தை அறிந்துகொண்டார்கள்; அமெரிக்காவில் ஐந்நூற்றுக்குமேல் அறைகளும் மற்ற வசதிகளும் உள்ள பிரம்மாண்டமான ஹோட்டல்கள் கட்டினார்கள். இந்த நூற்றாண்டு ஆரம்பமானதும் இவை ஏராளமாகிவிட்டன. ஐரோப்பாவில் இப்போது உள்ள பெரிய ஹோட்டல்களில் சகஜமாக ஐந்நூற்றுக்கும், ஐக்கிய அமெரிக்காவில் உள்ளவற்றில் ஆயிரத்துக்கும்மேல் அறைகள் இருக்கின்றன.

வட அமெரிக்காவில் இந்தமாதிரி ஆயிரம் அறைகள் உள்ள ஹோட்டல்கள் முப்பத்தொன்பதும், இரண்டாயிரம் அறை உள்ளவை எட்டும் உண்டு. வால்டார்ப் அஸ்டோரியா என்பது உலகத்திலேயே பெரிய ஹோட்டல்; பேஷானது என்றும் பெயர் எடுத்திருக்கிறது. மகாயுத்தத்தின்போது அதன் சராசரி வருமானம் வருஷம் ஒன்றுக்கு 41,25,000 பவுனும்.

இந்தியாவில் பொதுஜனங்களுக்கு இன்னும் ஹோட்டல் விஷயத்தில் அப்படி அக்கறை விழவில்லை. அரசாங்கத்தாரும் இந்தத் தொழிலைக் கைதூக்கி விடவில்லை. ஆனால் முன்னைக்கு இப்போது ஹோட்டல் அபிமானிகளின் தொகை பத்து மடங்கு அதிகரித்துவிட்டது; இருந்தும் நாம் இந்தத் துறையில் மற்ற நாடுகளுக்கு எவ்வளவோ பின் தங்கிவிட்டோம். இது அபிவிருத்தி

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: ஏப்ரல் '49), கல்கத்தா.

அடைவது எவ்வளவு அவசியம் என்பதைச் சென்ற இருபது வருஷ அநுபவத்திலிருந்தே சொல்லலாம். அப்போதைக்கு இப்போது நாலுக்கு ஒன்று விகிதம் ஹோட்டல்கள் பெருகிவிட்டன; பல தேசத்துப் பழக்க வழக்கங்கள் வந்து சேரச் சேர அவை இன்னும் அதிகமாகும். தொழிற்சாலைகளில் 'காண்டீன்'கள், அந்த அந்த ஸ்தாபனத்தாரின் சொந்த முயற்சியினாலோ சர்க்காரின் உத்தரவுப்படியோ ஏற்பட்டாக வேண்டும். வயிறு காயாது இருந்தால்தானே ஊழியர்கள் திறம்பட வேலை செய்வார்கள்? இங்கிலாந்திலும் மற்ற மேற்கத்தி நாடுகளிலும் லட்சக்கணக்கான தொழிலாளிகளுக்குச் சட்டப்படி சம்பளத்தோடு விடுமுறை கிடைக்கிறது. அதைப்போல் நம் நாட்டிலும் ஏற்படும். அப்போது அவர்கள் தங்கள் குடும்பத்தோடு கடலோரமும் உள்நாட்டிலும் இருக்கும் ஆரோக்கிய ஸ்தலங்களில் போய்த் தங்கலாம். மோட்டாரும் ரேடியோவும் ஆகாயவிமானமும் வந்ததிலிருந்து ஜனங்களுக்கும் பிரயாணத்தில் அதிக விருப்பம் ஏற்பட்டிருக்கிறது.

சாப்பாடும் தண்ணீரும் தங்க வசதியும் நம் வீட்டில் கிடைக்கும். பிரயாணம் போனாலும் அதே வசதி நமக்கு வேண்டியிருக்கிறது. வியாபாரிகளுக்கோ கேட்கவேண்டியதில்லை; நாலு இடம் போய்வர வேண்டியிருக்கும். அப்போது ஹோட்டல் இல்லாமல் முடியுமா?

சர்வதேச மகாநாடுகள் கூடப் பெரிய பெரிய ஹோட்டல்களில் தான் கூடுகின்றன. வெளிநாட்டிலிருந்து வந்திருக்கும் பிரதிநிதிகளைக் கௌரவமாக நடத்தினால்தானே அவர்கள் நல்ல அபிப்பிராயத்தோடு திரும்புவார்கள்? இதுமாதிரி சந்தர்ப்பங்களில் ஹோட்டல் வசதியைத்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அப்போதுதான் ஹோட்டல் முதலாளி 'தேசத்தின் சார்பாக விருந்தாளிகளை உபசரித்தார்' என்று நல்ல பெயர் எடுக்க முடியும்.

இது ஒரு நாட்டுக்கே உரிய தொழில் அல்ல. யார் வேண்டுமானாலும் எங்கே வேண்டுமானாலும் இதை நடத்தலாம். சந்தர்ப்பத்துக்கும் ஜனங்களின் விருப்பத்துக்கும் தகுந்தமாதிரி நடந்தால் தானாகவே விருத்தியாகும். ஆனால் ஐரோப்பா, அமெரிக்கா போன்ற மேல்நாடுகளுக்கும் இந்தியாவுக்கும் ஒருவித்தியாசம்: இங்கே அப்படி அதிக வசதி வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் தொகை மிகவும் சொற்பம். அதனால் உயர்தர ஹோட்டல்களும் குறைவு. பொதுவாக, மற்ற நாட்டாரைப் போல் நம் நாட்டுமக்களுக்குப் பிரயாணத்தில் அதிக விருப்பமும் இல்லை; இதுவும் ஒரு காரணம். இந்தியாவிலுள்ள முக்கியமான சில ஹோட்டல்களைப்பற்றி இங்கே குறிப்பிடவேண்டியது அவசியம்:

கல்கத்தாவில் உள்ள 'ஆக்லாண்ட் ஹோட்டல்' 1841-இல் ஸ்தாபித்தது. கிழக்கிலேயே இது பெரிய ஹோட்டல் என்று இப்போது பிரசித்தி பெற்றிருக்கிறது. சமீபத்தில் இந்தக் கட்டிடத்தைப் புதுப்பிக்க இந்த ஹோட்டல் கம்பெனியார் இதன் மூலதனத்தை முப்பது லட்சத்திலிருந்து ஒரு கோடி ஆக்கியிருக்கிறார்கள். சௌரிங்கியில் இருந்த 'ராயல் ஹோட்டலை' 1894-இல் ஒரு பிரபல ஹோட்டல் வியாபாரி வாங்கினர். அதற்குப் பக்கத்தில் இருந்த இரண்டு கட்டிடங்களையும் அவரே வாங்கி 1906-இல் மூன்றையும் ஒன்ருகச் சேர்த்தார். இப்

போது அதற்குக் 'கிராண்ட் ஹோட்டல்' என்று பெயர். இதையும், சமீபத்தில் அமெரிக்க ஹோட்டல் ரீதியில் புதுப்பிக்கப் போகிறார்களாம். இதற்காக 5 கோடி ரூபாய் முதல் போட்டிருக்கிறார்கள்.

பம்பாயிலுள்ள தாஜ் மஹல் ஹோட்டலைக் கட்டியவர் ஜாம்ஷேட்ஜி டாடா என்ற பிரபல பார்ஸி வள்ளல். லாபத்தை உத்தேசித்து இதை அவர் கட்டவில்லை; பம்பாய் நகருக்கு அலங்காரமாக இருக்கவேண்டுமென்றுதான் கட்டினாராம். 1898 - இல் ½ கோடி ரூபாயை மூலதனமாக வைத்து இதை லிமிடெட் கம்பெனியாக்கினார்கள். இப்போது இது டாடா ஹோட்டல் கம்பெனியாருக்குச் சொந்தம். அவர்கள் சீக்கிரத்திலேயே பம்பாயிலுள்ள 'இந்தியாவின் தலைவாசல்' என்ற இடத்துக்கு அருகில் ஒரு பிரம்மாண்டமான ஹோட்டல் கட்டப்போகிறார்களாம்.

ஐக்கிய அமெரிக்காவிலே உள்ள முக்கியமான தொழில்களில் இது ஏழாவது என்கிறார்கள். 1948-49-இல் அங்கே இதற்கென்றே 5, 000, 000, 000 டாலர் முதல் வைத்தார்களாம். ஆஸ்திரியா, பிரான்ஸ், இத்தாலி, ஸ்விட்ஜர்லாந்து ஆகிய நாடுகளில் இந்தத் தொழில்தான் எல்லாவற்றையும் விட ஓங்கியிருக்கிறதாம். சில இடங்களில் அரசாங்க உதவியினாலும் மற்றும் சில இடங்களில் தானாகவும் இது அபிவிருத்தி அடைந்திருக்கிறது. 1913 - இல் ஆஸ்திரேலியாவில் இதற்காக 6 கோடியிலிருந்து 8½ கோடி பவுனும், ஜெர்மனியில் 25 கோடி பவுனும் முதல் வைத்தார்களாம். ஸ்விட்ஜர்லாந்தில் 1926 - 28க்குள் 5 கோடி பவுன் முதல் வைத்தார்கள். அந்த நாட்டின் மொத்த மூலதனத்தில் அது முப்பத்தாறில் ஒரு பங்கு என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்! இங்கிலாந்தில் 1939 - இல் இதற்காக 40 கோடி பவுன் முதல் வைத்தார்கள். 1930 - இல் பிரிட்டிஷ் ரெயில்வே கம்பெனியார் போட்ட தொகையே 96,44,280 பவுன். "அழகான இடம் எதுவாக இருந்தாலும் அங்கே ஹோட்டல் இருப்பது அவசியம்" என்பார்கள் ஆங்கிலேயர்கள். அதற்கு ஏற்றபடி லைஸென்ஸ் பெற்ற 800 நல்ல ஹோட்டல்களும், 40,000 சிற்றுண்டிச்சாலைகளும், பதிவு செய்த 16,000 கிளப்புகளும், 18,000 தொழிற்சாலை 'காண்டீன்'களும், தனிப்பட்டவர்கள் சொந்தத்தில் நடத்தும் 90,000 சிறு ஹோட்டல்களும் சாப்பாட்டு விடுதிகளும் இப்போது இங்கிலாந்தில் இருக்கின்றன.

இந்தியா இனிமேல்தான் உலகத்தில் பிரபலமாக வேண்டும். அதற்கு இங்கே ஹோட்டல் தொழில் முன்னேறவேண்டியது அவசியம். நாட்டின் செல்வவளம் பெருக வேண்டுமானால் இந்தத் தொழிலுக்கு அரசாங்க உதவி தேவை. சமீபத்தில் இந்திய அரசாங்கத்தார், பிரயாணிகளுக்கு வசதி அளிக்கும் ஸ்தாபனங்களுக்கு உதவுவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

ஒரு நாட்டில் பார்க்கவேண்டிய அழகிய இடங்கள் ஏராளமாக இருக்கலாம். ஆனால் நல்ல ஹோட்டல் வசதி இருந்தால்தான் அங்கேவரும் பிரயாணிகளின் தொகையும் அதிகரிக்கும்.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்.

கே: இந்தியாவில் ஹிந்துக்களுக்குரிய மிகச்சிறந்த தலம் எது?

ப: அவரவர் வீடுகளே; அடுப்பங்கரையின் வெதுவெதுப்பில் அங்கே தோத்திரத்தையும் தாலாட்டையும் ஒருங்கே பாடி மகிழலாம்.

*　*　*

கே: உலகத்தை ஆள்பவர் கடவுளா? சைத்தானா?

ப: கடவுள் ஆள்கிறார்; சைத்தான் நடத்துகிறான்.

*　*　*

கே: சினங்கொண்ட பெண்ணிடம் உங்களுக்கு அதிக பயமா? சினமூண்ட புலியிடம் அதிக பயமா?

ப: புலியை நான் சுடலாம்; சுட்டால் பரிசு கிடைக்கும். பெண்ணை அப்படிச் செய்தால் கழுத்தில் சுருக்கு ஏறும்.

*　*　*

கே: காதல் என்பது மனிதனுக்கு வழக்கமா? அல்லது உணர்ச்சியா?

ப: காதல் என்பது ஆணின் தர்க்கம்; பெண்ணின் மயக்கம்; கவிஞனின் கவிதை.

கே: வக்கீல்கள் அரசியலில் புகக்கூடாதென்று தடுத்துவிட்டால் பிறகு என்ன நடக்கும்?

ப: பேச்சுக் குறையும்; வேலை அதிகமாக நடக்கும்.

*　*　*

கே: தேக சுகம் இல்லாத செல்வத்தை என்ன என்பது?

ப: டாக்டருக்கு அதிருஷ்டம் என்றுதான்.

*　•　*

கே: நடுத்தர வயது என்பது என்ன?

ப: எதிர்காலத்தை நோக்கிய அடிகளும் இறந்த காலத்திலே சிக்கிய உள்ளமும் படைத்த பருவம்.

*　*　*

கே: ஒரு பெண்ணின் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வழிகள் யாவை?

ப: உள்ளத்தை உள்ளத்தாலேதான் பெறவேண்டும். ஓர் உள்ளத்தைப் பெற மற்றோர் உள்ளத்தை அளிக்கவேண்டும். இது பரஸ்பரமான காரியம்.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம் : ஏப்ரல் '49), பம்பாய்.

கே: முட்டாளைக் கண்டுபிடிப்பது எப்படி?

ப: முட்டாள் தன்னைத் தானே வெளிப்படுத்திக்கொள்வான்; நெடு நேரம் மற்றவர்கள் சந்தேகப்படும் படி விட்டு வைக்கமாட்டான்.

* * *

கே: பிச்சைக்காரர்களின் கனவு எப்போது பலிக்கிறது?

ப: தூக்கத்தில் பலிக்கிறது.

* * *

கே: பிச்சைக்காரன் அரசனாக மாறுவேடம் புனைய முடியுமா?

ப: மற்றப் பிச்சைக்காரர்கள் அவனைக் கண்டுபிடிக்காத வரையில் அந்த மாறுவேடம் பலிக்கும். ஆனால் அரசர்களால் கண்டு பிடிக்கவே முடியாது. பிச்சைக்காரர்கள் எப்படி இருப்பார்கள் என்பது அவர்களுக்குத் தெரியாதே!

* * *

கே: இந்த உலகில் எதுவும் உண்மை அல்லவே?

ப: துன்பம் இருக்கிறதே; அது தான் செல்வர்களுக்கும் ஏழைகளுக்கும் எப்படிப் புத்தி புகட்டுகிறது!

* * *

கே: இளம் மனைவிகளை உடைய வயசான சில புருஷர்கள் ஏன் வௌவாலைப் போலக் குருடு ஆகிறார்கள்?

ப: காமம் வயதான கண்ணிலே படலத்தைப் போர்த்து அதை மறைக்கிறது.

* * *

கே: அமெரிக்காவில் உங்களுக்குப் பிடித்ததும் பிடிக்காததும் இன்னவை என்று சொல்வீர்களா?

ப: அமெரிக்க ஜனங்களை எனக்குப் பிடிக்கிறது; ஆனால் அந்த நாட்டு அரசியல்வாதிகளைக் கண்டால் எனக்குப் பிடிக்கிறதில்லை.

கே: மண்ணோடு மண்ணாய்ப் போய் இடுகாட்டில் மறைந்த அரசனுக்கும் குடியானவனுக்கும் வித்தியாசம் என்ன?

ப: அரசன் இடுகாட்டிலிருந்து எழுந்து சரித்திரப் புத்தகத்தில் ஏறிக்கொள்கிறான். குடியானவன் பூமாதேவியின் வயிற்றில் இன்னும் கொஞ்சம் மண்ணைச் சேர்க்கிறான்.

* * *

கே: பணக்காரர்கள் யாசகம் செய்கிறார்களா? எப்படி?

ப: அவர்கள் அதிகப் பணமும் நீண்ட ஆயுளும் நிறையக் குழந்தைகளும் வேண்டுமென்று கடவுளை யாசிக்கிறார்கள். தங்கள் சொத்து நெடுங்காலம் இருக்க வேண்டுமென்கிறார்கள்.

* * *

கே: அமெரிக்கர்கள் நம்மிடத்திலுள்ள எதை அதிகமாக விரும்புகிறார்கள்?

ப: நம் பெண்மணிகள் அணியும் அழகிய புடைவைகளை.

* * *

கே: நீங்கள் தனிமையில் எப்போதாவது அழுதிருக்கிறீர்களா?

ப: ஆண்களின் கண்ணீர் யாரையும் உருகச் செய்வதில்லையாகையால் தனிமையில் அழுகிறார்கள். பெண்மணிகள் கண்ணீர் விட்டால் ஒரு கூட்டமே வேண்டியிருக்கிறது, அதைப் பார்க்க; அதைப் பைத்தியக்காரக் கவிஞர்கள் முத்து என்று வேறு வர்ணிக்கிறார்கள்!

* * *

கே: கடவுள் ஏன் மலரைப் படைத்தார்?

ப: நயமான எழிலும் அமைதியான மணமும் இன்னவென்று உலகுக்கு அறிவிக்க.

தொண்டும் பக்தியும்

ஆசார்ய விநோபா பாவே

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

மகாத்மா காந்தியின் தனி நபர் சத்தியாக்கிரகத்தில் முதல் சத்தியாக்கிரகி' ஆசிரியர். தொண்டின் நுட்பத்தை அவரைவிட அறிந்தவர் வேறு யார் இருக்க முடியும்? இதோ அதை எவ்வளவு அருமையாக அவர் விளக்குகிறார்!

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

இந்த முப்பது வருஷங்களாக நான் ஏதாவது வேலை செய்திருக்கிறேன் என்று சொன்னால், அது பொதுஜன வேலைதான். மாணவனாக இருந்த காலத்திலிருந்தே எனக்குப் பொதுஜனத் தொண்டில் ஈடுபாடு உண்டு. என் வாழ்க்கையில் நான் பொதுஜன சேவையைத் தவிர வேறு ஒன்றுமே செய்யவில்லை, செய்ய விரும்பியதும் இல்லை என்றே சொல்லிவிடலாம். ஆனால் மற்றவர்கள் செய்தது போன்ற பொதுஜன சேவையை நான் செய்யவில்லை என்பது என் அபிப்பிராயம். "நீங்கள் காங்கிரஸ் மகாநாட்டுக்குப் போகவில்லையா?" என்று ஒரு சகோதரர் என்னைக் கேட்டார். "நான் எப்போதுமே காங்கிரஸுக்குப் போனதில்லையே" என்றேன். காங்கிரஸுக்குப் போவதும் அங்கே வாதாடுவதும் என் தொண்டுக்கு உகந்த முறையோ இயல்போ அல்ல. அப்படிச் செய்வது பெருமைதான் என்று எனக்குத் தெரியும்; ஆனால் அது எனக்கு ஏற்றதல்ல. காங்கிரஸின் செயல் முறைகளை நான் அறியாதவனல்ல. சிந்தனை செய்யும் சகோதரர்கள்தான் நிறைய இருக்கிறார்களே; நான் ஊமைத் தொண்டு செய்ய விரும்புகிறவர்களைச் சேர்ந்தவன். ஆயினும் என் தொண்டு நான் விரும்பும் அளவுக்கு, ஊமையாக இருக்க முடியவில்லை. பக்திதான் என் தொண்டின் நோக்கம். பக்தியுணர்ச்சியோடுதான் நான் தொண்டு செய்கிறேன்; முப்பது வருஷமாக நேரடியான தொண்டு செய்துவருகிறேன். இதுவரைக்கும் பிரசாரம் செய்ததில்லை; இனியும் அது நடக்கக் கூடியதல்ல.

'தொண்டு நபருக்கு; பக்தி சமூகத்துக்கு' என்று நான் ஒரு சூத்திரம் மாதிரி அமைத்துக்கொண்டிருக்கிறேன். பக்தியைத் தனி நபரிடத்திலே கொண்டால் அதனால் பற்று வளருகிறது; ஆகையால், சமூகத்தினிடந்தான் பக்தி கொள்ள வேண்டும். தொண்டு, சமூகத்துக்குச் செய்யவேண்டும் என்று விரும்பினால் நாம் ஒன்றுமே செய்ய முடியாது. சமூகம் என்பது ஒரு கற்பனைதான். கற்பனைக்கு நாம் தொண்டு செய்ய முடியாது. தாய்க்குத் தொண்டு செய்யும் மகன் உலகம் முழுவதற்கும் தொண்டு புரிகிறான் என்பது என் கொள்கை. பிரத்தியட்சமான பொருளுக்குத்

காப்பிரைட்: 'விநோபாவின் சிந்தனைகள் - 1 (ஹிந்தி புஸ்தகம்),
ஸஸ்தா ஸாஹித்ய மண்டல், புது டில்லி.

தான் தொண்டு செய்ய முடியும்; மறைவான பொருளுக்கு அல்ல. சமூகம் என்பது பிரத்தியட்சமில்லாத, வியக்தமில்லாத, நிர்க்குணமான விஷயம். ஆண்டவன் வரைக்கும் போய்ச் சேருவதுதான் தொண்டு. இப்போதெல்லாம் நாம் காணும் தொண்டு ஒரு விசித்திர முறையாகத்தான் இருக்கிறது. தொண்டு செய்வதற்குப் பரந்த துறை வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். ஆனல் உண்மையில் நாம் தொண்டு செய்யவேண்டுமானல், சேவைமயமாகிவிடவேண்டுமானல், தொண்டுக்கு நம்மை அர்ப்பணம் செய்யவேண்டுமானல், ஏதாவது ஒரு கிராமத்துக்குப் போக வேண்டும். என்னிடத்தில் ஒரு சகோதரர், ''அறிவாளிகளையெல்லாம் நீங்கள் கிராமத்துக்குப் போகச் சொல்லுகிறீர்களே. விசாலமான அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய அவ்வளவு நீளமும் அகலமுமான துறை அங்கே ஏது?'' என்று கேட்டார். "உயரந்தான் இருக்கிறதே; முடிவே காணுத ஆகாயம் இல்லையா? அறிவாளி அங்கே நீளமான யாத்திரை செய்ய முடியாது; ஆனல் உயரப் போகலாமே. ஆழமாகப் போகலாமே!'' என்று நான் பதில் சொன்னேன். பக்தப் பெரியார்கள் ஏறின உயரத்துக்குக் கணக்கே இல்லை. மிகப் பெரிய விஞ்ஞானப் புலவனுக்குக்கூட ஆகாயத்தின் உயரம் இவ்வளவென்று தெரியவில்லை. கிராமத்தில் நாம் குறுக்கும் நெடுக்குமாகப் போக முடியாது; ஆனல் உயரப் போகலாம். மிகவும் உயரத்தில் செல்வதற்கு அங்கே சந்தர்ப்பம் உண்டு. உயர்ந்த அல்லது ஆழ்ந்த தொண்டு அங்கே நிறையச் செய்ய முடியும். நம்முடைய அந்த ஏகாக்கிரமான தொண்டு முதல்தரமாக இருக்கும்; பயனும் கொடுக்கும்.

நாட்டின் பிரச்னைகள் யாவும் கிராமத்து விவகாரத்தில் வந்துவிடுகின்றன. நாட்டிலுள்ள சமூக இயல் அவ்வளவும் ஒரு குடும்பத்திலேயே அடங்கிக் கிடக்கும்போது, கிராமத்திலே அது அடங்குவதைப்பற்றிச் சொல்லவே தேவையில்லை. சமூக இயலைக் கற்றுக்கொள்ளக் கிராமத்தில் நிறைய வசதி உண்டு. 'வயது வந்தவர்கள் கல்யாணம் செய்து கொள்ளும் வழக்கம் ஏற்பட்ட பிறகு பாரதநாடு சீர்திருந்தியிருக்கிறது; பால்ய விவாகத்தில் அது கெட்டுப் போயிருந்தது' என்ற நம்பிக்கையை நான் அறிவில்லாமை என்றே மதிக்கிறேன். வயது வந்தவர்கள் செய்து கொண்ட எத்தனையோ கல்யாணங்களில் மணவாழ்க்கை இன்பமில்லாமலும் போகிறது; பால்ய விவாகம் ஆகியுங்கூட, கணவனும் மனைவியும் சுகமாகவும் அமைதியாகவும் வாழும் உதாரணங்கள் எத்தனையோ இருக்கின்றன. விவாக அமைப்பிலே புலனடக்கமாகிய தூய உணர்ச்சியை எப்படி உண்டாக்குவது என்ற சிக்கலை நாம் விடுவித்துவிட்டால், எல்லாமே ஆனமாதிரி. திருமணத்தின் நோக்கமே இதுதான். இதே போல இந்திய அரசியலின் மாதிரி அமைப்பும் நமக்குக் கிராமத்திலே பூர்ணமாகக் கிடைக்கும். ஒரே ஒரு கிராமத்து மக்களையாவது சுய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் ஆற்றல் வாய்ந்தவர்களாக நாம் ஆக்கிவிட்டால், அது மிகவும் பெரிய வேலை. அங்குள்ள பொருளாதாரத்தைக் கொஞ்சமாவது சீர்திருத்தினல், எவ்வளவோ செய்ததுபோல. கிராமத்து மக்களிடையே போய் வாழ்ந்தால் நாமும் அவர்களோடு ஒன்றிவிடுவோம் என்றுதான் எதிர்

பார்க்கிறேன். அங்கே போய் நாம் அவர்களோடு சேர்ந்து தரித்திர நாராயணர்கள் ஆகவேண்டுமே தவிர 'முட்டாள் நாராயணர்கள்' அல்ல. நமது அறிவை அவர்களுக்காகப் பயன் படுத்தவேண்டும்; நமது அகங்காரத்தை ஒழிக்கவேண்டும். அவர்கள் எல்லாரும் சுத்த அடிமுட்டாள்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. பாரதநாட்டுக் கிராமங்களின் வாழ்க்கையநுபவம், மற்ற நாடுகளைப் போலச் சில நூற்றாண்டு கால அநுபவம் அல்ல; குறைந்தது, இருபதினாயிர வருஷகாலத்து அநுபவம் அது. அந்த அநுபவத்தைக் கொண்டு நாம் பயன் அடையவேண்டும். அறிவுக் களஞ்சியத்தைப்போலவே பொருட் களஞ்சியத்தையும் நாம் அங்கிருந்துதான் உற்பத்தி செய்யவேண்டும்; அகங்காரத்தை முற்றும் துறந்து நாம் அதில் புகவேண்டும்.

இந்தச் சீர்திருத்தக்காரர்கள் ஊரைக் கெடுப்பதாக ஜாதி ஹிந்துக்கள் கருதுகிறார்கள். ஹரிஜனங்களிடம் நமக்கு இருக்கும் அளவுக்கு ஜாதி ஹிந்துக்களிடம் தொடர்பு இருப்பதில்லை. ஜாதி ஹிந்துக்களை நமது முயற்சியில் இழுத்துக் கொள்ளவும், அவர்களின் சந்தேகங்களைப் போக்கவும் என்ன திட்டம் போட்டிருக்கிறது?— இது ஒரு கேள்வி.

தீண்டாமையை ஒழிக்கும் வேலையை நாம் இரண்டு வழிகளில் செய்யவேண்டும். ஹரிஜனங்களின் பொருளாதார நிலையையும் மனப்பான்மையையும் மாற்றுவது ஒரு வழி; ஹிந்து மதத்தைத் தூய்மைப் படுத்துவது, அதாவது தன் சுய உருவத்தோடு அதை விளங்கச் செய்வது, மற்றொரு வழி. தீண்டாமையைக் கடைப்பிடிப்பவர்கள் எல்லாருமே கெட்டவர்கள் என்று நாம் நினைக்கக்கூடாது. அவர்கள் அறியாமையில் மூழ்கியிருக்கிறார்கள் என்று கொள்ளலாம். அவர்கள் கெட்டவர்களோ கெட்ட புத்தியுடையவர்களோ அல்ல; அவர்களுடைய குறுகிய சிந்தனைகளின் விளைவு இது. "கிரேக்கர்களைத் தவிர வேறுயாரும் என் நூல்களைப் படிக்க வேண்டாம்" என்று பிளேட்டோ சொன்னான். 'கிரேக்கர்களே எல்லாரையும்விட மேம்பட்டவர்கள்' என்று இதற்கு அர்த்தமாகிறது. மனிதனுடைய ஆத்மா பரந்ததாயினும், குறுகிய தன்மை அதில் தங்கிவிடுகிறது. என்னதான் இருந்தாலும், மனிதனுடைய ஆத்மா ஒரு தேகத்துக்குள்தானே உறைகிறது? ஆகையால் சநாதனிகளிடம் நாம் நிறைய அன்பு கொள்ளவேண்டும்; அவர்களை எதிர்க்கக்கூடாது. நாம் கிராமத்தில் இருந்து, பேசாமல் தொண்டு செய்யவேண்டும். ஹரிஜனங்களுக்குத் தொண்டு செய்வதோடுகூட, சந்தர்ப்பம் நேரும்போதெல்லாம் ஜாதி ஹிந்துக்களுக்கும் தொண்டு செய்யவேண்டும்.

ஒரு சகோதரர், ஹரிஜனங்களைத் தீண்டுவதில்லை; ஆனால் இரக்கமுள்ளவர் என்றால், நாம் அவரிடம் போவோம்; அவருடைய இரக்கத்தைப் பயன்படுத்திக் கொள்வோம்; அவருடைய எல்லையை அறிந்து அவரோடு பேசுவோம். சில நாளில் அவருடைய உள்ளம் தூய்மை அடையும்; அவருடைய அக இருள் நீங்கும். சூரிய வெளிச்சத்தைப் போல, நமது தொண்டின் ஒளி தானாகப் பரவும். நமது ஒளியிலே நமக்கு நம்பிக்கை வேண்டும். ஒளிக்கும் இருளுக்கும் நடக்கும் போராட்டம் கணத்தில் முடிந்துவிடுகிறது. ஆனால் நமது முறை அஹிம்சை

முறையாக, அன்பு முறையாக இருக்கவேண்டும். நான் கதவை முட்டித் தள்ளிக்கொண்டு உள்ளே போகமாட்டேன். இதுதான் என் எல்லைக்கோடு. சூரிய கிரணங்களை நான் பின்பற்றுபவன். சுவரிலோ கூரையிலோ கதவிலோ எங்காவது சின்னஞ்சிறு துவாரம் இருந்தால் கூடக் கதிர்கள் பேசாமல் உள்ளே ஊடுருவிப் பாயும். இதேதான் நமது நோக்கம். நம்மிடமுள்ள சிந்தனைதான் ஒளி. ஒரு குகையிலுள்ள லட்ச வருஷத்து இருட்டுக் கூட ஒரே கணத்தில் ஒளியினால் விலகிப்போகும். ஆனால் இது அஹிம்சை முறையில்தான் நடக்கும். சநாதனிகளைத் திட்டுவது அஹிம்சை முறையல்ல. நாம் சொற்களை நன்றாக நிறுத்துப் பார்த்த பிறகே வெளியே பேசுவோம். நமது வாக்கின் கசப்பு நீங்கிவிட்டால் அவர்கள் உள்ளம் மாறும். இந்த மாதிரியான போராட்டம் இன்று நடப்பதல்ல; இது மிகப் பழமையானது. தம் எதிரிகளோடு போராடுவதிலேயே பக்தர்கள் வாழ்க்கையைக் கழித்தார்கள். ஆனால் அவர்கள் போராடிய முறை அன்பு முறை. நமக்கு அறிவைக் கொடுத்த ஆண்டவன்தான் நம் எதிர்க் கட்சியாருக்கும் அதைக் கொடுத்திருக்கிறான். முப்பது வருஷங்களுக்கு முன்னால் நாமும் அவர்களைப்போலத் தீண்டாமையை ஒப்புக்கொண்டுதானே இருந்தோம்? நம் பக்தர்கள் தன்னம்பிக்கையோடு செயலாற்றியிருக்கிறார்கள். விவாதங்களில் கலந்துகொள்வது நம் வேலையல்ல. நாம் தொண்டு செய்து கொண்டே மடிவோம். நமது பிரசார வேலைக்குத் தொண்டுதான் தனிப்பட்ட சாதனம். பிறரிடம் குற்றம் காண்பதிலும், நம்முடைய யோசனையைப் பரக்கப் பேசுவதிலும் நமக்கு ஆசை இருக்கவே கூடாது. தாய் தன் குழந்தையிடம் குற்றமா காண்கிறாள்? அவள் அதன்மீது அன்புமழை பொழிகிறாள்; அதற்குப் பிறகு லேசாக அதன் குற்றத்தை எடுத்துச் சொல்கிறாள். அன்புமயமான தொண்டின் விளைவும் இப்படித்தான் இருக்கும்.

தேசந்தோறும் ஈசன் நாமம்

நாடு	கடவுள் பெயர்	நாடு	கடவுள் பெயர்
அபிஸீனியா	இலியா	தார்த்தார்	மாகான்
அயர்லாந்து	தியா	துருக்கி	அல்லா
அரேபியா	அல்லா	நார்வே	காட்
ஆர்மீனியா	டிவுடி	பிரான்ஸ்	தியு
இங்கிலாந்து	காட்	பெல்ஜியம்	கேயிட்
இத்தாலி	தியோ	போர்த்துகல்	தேயஸ்
இந்தியா	பகவான்	போலந்து	பாக்
இரான்	ஸாயார்	ஜப்பான்	காய்ஸர்
இஸ்ரேல்	இலோஹா	ஜெர்மனி	டாயிட்
எகிப்து	தியும்	ஸ்விட்ஜர்லாந்து	கட்
கிரீஸ்	தியஸ்	ஹாலந்து	கட்
சீனா	க்லாஸா		
டென்மார்க்	காட்		

—'வலம்புரி'

சிறு கதை:

அகதி

எச். வி. சாவித்திரி அம்மாள்

இன்று கண்ணுக்கு முன்னே பிரளயம்போல் நடந்த சம்பவங்களை வைத்துக்கொண்டு ஏன் கதை எழுதக் கூடாது? நம் காலத்தில்தான் மதியிழந்து கற்பனையற்று மனித உணர்ச்சியே மரத்துச் செயல் புரிந்தோம். இதன் பலாபலன்களைச் சித்திரித்து வைத்தால், பின் சந்ததிக்காவது அநுபவ பொக்கிஷமாக இருக்கும் அல்லவா? இது அப்படிப்பட்ட ஒரு சிறுகதை.

சந்திரனுக்கு வாழ்க்கையில் குறை ஒன்றும் இல்லை. பிறக்கும் பொழுதே தாய் தந்தையரை இழந்தான். அவனுடைய மாமா அந்தக் குறை தெரியாமல் அவனை வளர்த்துவிட்டார். நினைவு தெரிந்ததுமுதல் அவரே தகப்பனாரைப்போல் அன்பைச் சொரிந்தார். மாமாவுக்குத் துளசி ஒரே பெண்; சிறுவயதிலேயே துளசிக்கும் சந்திரனுக்கும் கல்யாணப்பேச்சு நடந்தது. தெய்வமும் அப்படியே கூட்டிவைத்தது. துளசியைக் கல்யாணம் செய்துகொண்ட வருஷத்திலேயே அவன் வைத்தியப் பரீட்சையையும் முடித்தான். சந்திரன் தம்முடனேயே இருந்து டாக்டர் தொழில் ஆரம்பிக்கவேண்டுமென்று அவன் மாமா ஸ்ரீநிவாச ராயருக்கு விருப்பம். சந்திரன் ஒரு முடிவுக்கும் வரவில்லை. அரைமனத்தோடு ராவல்பிண்டி வேலைக்காக மனுப் போட்டிருந்தான். வேலையை ஒப்புக்கொள்ளும்படி ராவல்பிண்டி ஆஸ்பத்திரியிலிருந்து தந்தி வந்தது. அவன் அங்கே போவதில் மாமாவுக்குத் துளிகூட இஷ்டமில்லை. "நீ எதற்காகச் சர்க்கார் உத்தியோகத்துக்குப் போகவேண்டும்? சொந்தமாகத் தொழில் ஆரம்பித்தாயானால் அவர்கள் கொடுக்கும் ஐந்நூறு ரூபாய்க்கு மேலேயே சம்பாதிப்பாய்" என்று சொல்லிப் பார்த்தார். அவர் மனைவி சரஸ்வதி அம்மாளும் அப்படியே சொன்னாள். "நீயும் துளசியும் இங்கிருந்து போய்விட்டால் எங்களை, 'இருக்கிறாயா?' என்று கேட்பார் யார்?" என்று கண்ணீர் பெருக்கினாள். துளசிக்கும் தாய்தந்தையரைப் பிரிந்து அவ்வளவு தூரம் போவதில் இஷ்டம் இல்லை. இளமை முறுக்கினால் சந்திரன் போய்த்தான் தீருவேனென்று பிடிவாதம் பிடித்தான்.

"வளர்த்த மருமகனாயிருந்தாலும் சரி, யாராயிருந்தாலும் சரி; மாப்பிள்ளை ஸ்தானத்துக்கு வந்துவிட்

காப்பிரைட்: உஷா (கன்னடம்: வருஷமலர்), பெங்களூர்.

டால் எல்லாரும் ஒன்றுதான்'' என்று நிஷ்ரேமாகப் பேசினுள் சரஸ்வதி அம்மாள்.

ஸ்ரீநிவாஸராயர், “நீ சும்மா இரு. அப்படி யெல்லாம் சொல்லாதே. சந்திரன் நல்ல பிள்ளை. போய்விட்டுக் கொஞ்சநாளில் தானே வருவான். எங்கேயாவது சௌக்கியமாய் இருந்தால் சரி'' என்று மனைவியைச் சமாதானப்படுத்தும் ரீதியில் தம் மனத்தையும் சமாதானப்படுத்திக்கொண்டார். சந்திரனும் துளசியும் புறப்பட்டுவிட்டார்கள். கண்ணீர் விட்டுக் கலங்கி உட்கார்ந்திருந்த சரஸ்வதி அம்மாளை ராயர் அநுதாபத்தோடு பார்த்தார்; “என்றைக்கும் உனக்கு நானும் எனக்கு நீயுந்தான் துணை; எழுந்திரு; சற்று வெளியே போய்விட்டு வருவோம்'' என்று தேற்றினுர். இருந்தாலும் சரஸ்வதி அம்மாளுக்கு வெகுநாள் வரைக்கும் அதே ஏக்கம். பண்டிகை வந்தாலும், பட்சணம் செய்தாலும் 'துளசி இல்லையே' என்ற நினைவு தான். வீட்டைக் கண்டாலே எரிச்சலாக இருந்தது அந்த அம்மாளுக்கு.

துளசிக்கும் முதலில் தாய்தந்தையரை விட்டு வந்தது சிரமமாகத் தான் இருந்தது. புதுக் குடித்தனம், இளமையின் உற்சாகம் எல்லாம் சேர்ந்து அவள் நினைவை மாற்றி விட்டன. வீட்டை அலங்கரிப்பது, சந்திரனுக்குப் பிடித்த தின்பண்டங்களைச் செய்வது, அவனுடன் இன்பமாகப் பேசிக்கொண் டிருப்பது இந்தமாதிரி பொழுதைக் கழிப்பதில் துளசி உலகத்தையே மறந்திருந்தாள். சந்திரனும் தொழிலில் உற்சாகமாக ஈடுபட்டான். பெயரும் புகழும் கிடைக்கவே ஊக்கம் ஏற்பட்டது. அதைவிட வேறு என்ன வேண்டும்?

“நாம் என்றைக்கு ஊருக்குப் புறப்படுவது?''

“போகத்தான் வேண்டுமா, துளசி? உன் அம்மாவையே இங்கே வரவழைத்துவிடலாமே!''

துளசிக்குப் பிறந்தகம் போக வேண்டுமென்ற ஆசை தீவிரமாக எழுந்தது. குழந்தையாக இருந்த போது அநுபவித்த சுகங்களை மறுபடியும் அநுபவிக்க வேண்டும் போல் இருந்தது அவளுக்கு. “இப்பொழுது நான் போகாவிட்டால் அப்பா ரொம்பவும் வருத்தப் படுவாரே...'' என்ருள்.

சந்திரன் புன்னகையுடன், “என் கதி என்ன?'' என்ருன்.

“நீங்களும் வாருங்கள்'' என்று துளசியும் சிரித்துக்கொண்டே பதில் சொன்னுள்.

துளசி பிறந்தகம் போய்விட்டாள். சந்திரன் இரண்டு மாதங்கள் தள்ளினுன்; அதற்குமேல் அவனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அவனும் போனுன். பெண்ணும் மாப்பிள்ளையும் தங்கிய அந்த நான்கு மாதங்களையும் சரஸ்வதி அம்மாள் பண்டிகையாகவே கொண்டாடினுள். எவ்வளவு செய்தும் தாயின் மனம் திருப்தி அடையவில்லை. ராதை பிறந்து இரண்டுமாதந்தான் ஆயிற்று. சந்திரனே ஊர் நினைவாகவே இருந்தான்.

“துளசி இன்னும் சில நாள் இங்கேயே இருக்கட்டும். பச்சைக் குழந்தையை வைத்துக்கொண்டு தனியாய் என்ன செய்வாள்?'' என்ருள் சரஸ்வதி அம்மாள்.

“குழந்தையைப் பார்த்துக் கொள்ள ஆள் போட்டுவிடுகிறேன்'' என்ருன் சந்திரன்.

“அத்தனை தூரப் பிரயாணம்

குழந்தைக்கு ஒத்துக் கொள்ளாது'' என்றாள் மாமியார்.

சந்திரன் சிரித்துக்கொண்டே, "நான் இருக்கிறேனே சொந்த டாக்டர்; பார்த்துக் கொள்கிறேன்'' என்றான்.

அதற்குமேல் சரஸ்வதி அம்மாள் வாயை மூடிக்கொண்டாள். புதுப் புடைவை கொடுத்துக் குங்குமம் இட்டுத் துளசியை மனமார ஆசீர்வதித்து அனுப்பினாள்.

துளசி சந்திரனுடன் பிறந்த வீடு வந்தது அதுவே கடைசித் தடவை.

அன்று நடந்ததை, வாழ்நாள் முடியும்வரை சந்திரன் மறக்கவே மாட்டான். "ரத்தபலி இல்லாமலே இந்திய சுதந்தரமென்னும் அருணோதயம் பிறந்துவிட்டது'' என்று தேசமக்கள் பூரித்துப் போனார்கள். பின்னால் நடக்க இருக்கும் பயங்கர ஸம்பவங்களைப்பற்றி அன்று பொழுது விடியும்போது எந்தவித மான அறிகுறியும் இல்லை. பண்டித ஜவாஹர் தேசீயக் கொடியை ஏற்றும்பொழுது தேவர்களே ஆசீர்வதித்ததுபோல் வான வில்லின் ஒளி சிதறியது. அதற்குப் பின் பதினைந்தே தினங்கள்! பயங்கரப் பிரளயம் ஆரம்பித்தது. சந்திரன் ஆஸ்பத்திரியிலிருந்து சீக்கிரமாகப் புறப்பட்டான். ஊரில் கலகம் ஆரம்பித்த சமயத்தில் அவன் ஆஸ்பத்திரியில் ரண சிகிச்சை செய்துகொண்டிருந்தான். விஷயத்தை அவனிடம் தெரிவிக்க யாருக்கும் தைரியம் வரவில்லை. கை கழுவி வெளியில் வந்தவுடனே ஒரு சேவகன் அதைச் சொன்னான். பரபரப்புடன் சந்திரன் புறப்பட்டான். 'பகவானே! துளசியும் ராதையும் சௌக்கியமாய் இருக்க வேண்டுமே' என்ற ஒரே நினைவு தான். எந்தப் பக்கம் திரும்பினாலும் கார் போக வழியில்லை. அவன் உடம்பு வேர்த்தது. மெல்ல எல்லாரையும் விலக்கிக் காரை ஓட்ட அரை மணி நேரம் பிடித்தது. வீட்டுக்குப் போகும் வழியில் ஜனக் கூட்டம் அதிகரித்தது; சந்திரனுடைய மனத்தில் பயம் அதிகரித்தது. வீட்டை நெருங்க நெருங்கக் கார் போக வழி இல்லை. காரை அப்படியே நிறுத்திவிட்டுக் கூட்டத்தில் புகுந்து வீடுபோய்ச் சேர்ந்தான். வீடு பற்றி எரிந்துகொண் டிருந்தது. பக்கத்தில் இருந்தவர்கள் நெருப்பை அணைக்க முயன்று கொண்டிருந்தார்கள். "துளசி!'' என்று கதறிக்கொண்டு முன்னால் பாய்ந்த சந்திரனை யாரோ தோளைப் பிடித்து அழுத்தி நிறுத்தினார்கள். ராதையை மடியில் வைத்துக் கொண்டு கிழச்சேவகன் உட்கார்ந்திருந்தான். ராதையின் உடம்பு உருத்தெரியாமல் வெந்து கிடந்தது. அவளை மெல்ல எடுத்தான் சந்திரன். அந்த வலியைப் பொறுக்காமல் குழந்தை, "அம்மா'' என்று கத்தினாள். அவள் பிழைக்கமாட்டாள் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டது. சேவகனைப் பார்த்து, "அம்மா எங்கே?'' என்று கேட்டான். சேவகனின் கண்களிலிருந்து நீர் ஆறாகப் பெருகியது. தலையை மாத்திரம் ஆட்டினான். 'குழந்தை இனிப் பிழைக்கமாட்டாள்' என்று எல்லாருக்கும் தெரிந்துவிட்டது. கொஞ்சநேரத்துக்கெல்லாம் ராதையின் உயிர் பறந்துவிட்டது.

மனிதனுடைய பொறுமைக்கும் ஓர் எல்லை உண்டு. சந்திரனுடைய துக்கம் எல்லையை மீறிவிட்டது. அவனுடன் வேலை செய்பவர்களும் வேலைக்காரர்களும் துளசியைத் தேடி ஊர் முழுதும் அலைந்தார்கள்.

அவள் சுவடே தெரியவில்லை. தான் புறப்பட்டதும் மாமா வீட்டுக்கு வந்ததுங்கூட அவனுக்குத் தெரியாது. அவன் துக்கத்தின் ஆழத்தை அறிந்த மாமனாரும் மாமியாரும் அவனை அதிகமாகக் கேள்வி கேட்கவில்லை. ராதை இறந்துவிட்டாள், துளசி போன இடம் தெரியவில்லை என்றுமட்டும் தெரிந்து கொண்டார்கள்.

"அப்பா சந்துரு. இன்னும் எத்தனை நாள் இப்படி மங்கி மாண்டு கிடப்பாய்? நடந்தது நடந்தாகி விட்டது. மேலே நடப்பதைப் பார். என்னைப் பார்த்துத் தைரியப்படுத்திக் கொள்" என்றார் ஸ்ரீநிவாஸ ராயர். இதைச் சொல்லும்போதே அவர் கண்களிலிருந்து பொல பொல வென்று நீர் சொரிந்தது.

சந்திரன் நிராசையோடு அவர் பக்கம் திரும்பி, "என்ன செய்ய வேண்டும்?" என்றான்.

"என்ன செய்ய வேண்டும் என்று கேட்டால் முடியுமா? நீ இன்னும் சிறு பிள்ளை; நடக்க வேண்டிய காரியம் எவ்வளவோ இருக்கிறது."

"இனிமேல் யாருக்காகச் செய்ய வேண்டும்?"

"நான் யாருக்காகச் செய்கிறேன்?" - இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போதே ராயர் விக்கி விக்கி அழுதார்.

சந்திரனுக்கு அவமானமாக இருந்தது. 'நான் என் துக்கமே பெரிதென்று வளர்த்துக்கொண் டிருக்கிறேன்; அவருக்கு எவ்வளவு துக்கமாக இருக்கும் என்பதை யோசித்துப் பார்க்கவே இல்லையே!' என்று மனம் மறுகினன். எழுந்து வந்து மாமாவின் தோள்களைப் பிடித்துக் கொண்டான்.

ஸ்ரீநிவாஸ ராயர் கண்ணைத் துடைத்துக்கொண்டு, "இன்றோடு துக்கத்தை விடு. டில்லியில் டாக்டர்களுக்கு ஏராளமாக வேலை இருக்கிறதாம். லட்சக்கணக்கான அகதிகள் வந்து குவிகிறார்களாம். அவர்களைக் கவனிக்க டாக்டர்கள் வேண்டுமாம்" என்றார்.

அகதிகள் என்றவுடனே, சந்திரனின் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போல் இருந்தது. அறையில் குறுக்கும் நெடுக்கும் உலாவினன். ஸ்ரீநிவாஸ ராயர் சோகம் கலந்த சிரிப்புடன், "அவர்களில் துளசி இல்லையாம்; விசாரித்துவிட்டேன்" என்றார்.

சந்திரனுக்கு உண்மையிலேயே வேலையினால் கொஞ்சம் நிம்மதி கிடைத்தது. இரவு பகல் என்று பாராமல் அகதிகளின் இருப்பிடத்தைப் பார்வையிட்டான். மனத்தை உருக்கும் அவர்களுடைய கதைகளைக் கேட்டு அவன் உடம்பு புல்லரித்தது. அந்த நிலைமையில் துளசியைப்பற்றி எண்ணக்கூட அவனுக்குச் சக்தி இல்லை. அங்கே இருந்த ஸ்திரீகள் பலர் துளசியைப் போல் சுகமாக வாழ்ந்தவர்கள். அவர்களுக்குச் செய்யும் சேவை, துளசிக்கு நல்ல வழி காட்டும் என்ற நினைவில் சந்திரன் தேகம் தெரியாமல் அலைந்தான். அவன் மனம் உழைப்பில் உற்சாகம் கொண்டது. அவனுக்கு ஓய்வே கிடையாது. அகதிகளுக்குச் சிகிச்சையோடு நிற்கவில்லை; அவர்களுக்கு ஆகாரம், துணிமணி இவற்றைச் சேகரிப்பதிலும் ஈடுபட்டான். அகதிகள் அவனைத் தெய்வமாகப் போற்றினார்கள்.

சந்திரனுக்கு முதலில் இருந்த உற்சாகம் குறைந்தது. தன் துக்கத்தை மறைக்கக் கடுந்தவம் செய்வதாகவே தோன்றியது

அவன் செய்கை. சரஸ்வதி அம்மாள் அவனைப் பார்த்துப் பார்த்து மனம் புழுங்குவாள். "வேளைக்குச் சாப்பிட வந்துவிடு, சந்துரு. உடம்பைச் சரியாக வைத்துக்கொண்டால் தானே உத்தியோகம்!" என்று பரிவுடன் சொல்லுவாள்.

ஒரு நாள் சாயங்காலம். ராயர் வெளியில் போகத் தயாராக நின்ருர். சைக்கிளில் சந்திரன் அப்பொழுதுதான் வந்து இறங்கினன். மாமாவைப் பார்த்து, "எங்கேயோ புறப்படுகிறீர்கள் போல் இருக்கிறதே?" என்று கேட்டான்.

"காந்திஜீயின் பிரார்த்தனைக் கூட்டத்துக்குப் போகலாமென்று புறப்பட்டேன்" என்ருர் அவர்.

"நானும் வருகிறேன்" என்ருன் சந்திரன். மாமனும் மாப்பிள்ளையும் புறப்பட்டார்கள். இவர்கள் போவதற்குள் பிரார்த்தனைக் கூட்டத்தில் ஜனங்கள் நிறைந்துவிட்டார்கள். மகாத்மா வந்து உட்கார்ந்திருந்தார். முன்னுல் இருந்த இடத்தில் இருவரும் உட்கார்ந்தார்கள். அன்றைப் பேச்சு அகதிகளைப்பற்றியது; முக்கியமாகப் பெண்களைப் பற்றியது. "கெட்டுப்போனவர்களென்று அவர்களை ஜாதியை விட்டுத் தள்ளாதீர்கள். அவர்கள் வேண்டுமென்றே தவறு செய்யவில்லை. பலாத்காரத்தாலும் ஹிம்ஸையாலும் குலப் பெண்கள் நெறி தவறிவிட்டால் நாம் அவர்களிடத்தில் நம்பிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும்; அவர்களைத் திரும்பவும் ஏற்றுக்கொண்டு ஆதரிக்கவேண்டும்" என்று அமுதமாரி பொழிந்தார் மகாத்மா.

சந்திரன் அதைக் கவனமாகக் கேட்டான். மகாத்மாவின் சந்நிதியில் உலகிலேயே எட்டாத சாந்தி கிடைத்தது. எந்தக் கஷ்டத்துக்கும் அஞ்சாத மகாத்மா பெண்களின் துக்கத்தைக் காணச் சகியாமல் தவித்தார். இப்பொழுதுதான் சந்திரன் அருவருப்பில்லாமல் துளசியைப்பற்றி நினைக்கத் துணிந்தான். 'இனிமேல் துளசி ஒருவேளை கிடைத்தால் அவளைச் சந்தோஷத்தோடு வீட்டுக்கு அழைத்து வருவேன்; என் இதய ராணியாய் வைத்துக்கொள்ளுவேன். துளசி விட்டுப் போன இடத்தை நிரப்ப யாரால் முடியும்?' என்று எண்ணமிட்டான். மகாத்மாவின் பேச்சை மேலும் கேட்கவேண்டுமென்று தோன்றியது. கூட்டம் கலைந்த பின்னும் அவன் எழுந்திருக்கவில்லை. ஸ்ரீநிவாஸ ராயர் தட்டி எழுப்பிய பிறகுதான் அவனுக்குச் சுய நினைவு வந்தது. அவர் கண்ணிலிருந்து நீர் தாரை தாரையாகப் பெருகியது. 'மறுபடியும் துளசி கிடைப்பாளா?' என்று பெருமூச்சு விட்டார்.

மறுநாள் சந்திரன் பிர்லா மாளிகைக்குப் போனுன். மாளிகையில் வேறு மனிதர்கள் வராததால் சந்திரனுக்கு உடனே மகாத்மாவின் தரிசனம் கிட்டியது. சகஜமாக அன்போடு மகாத்மா அவனைக் கையைப் பிடித்து உட்கார வைத்தார்.

"நீங்கள் அகதிகள் விஷயத்தில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொண்டு உழைக்கிறீர்கள் என்று கேள்விப்பட்டேன். மிகவும் சந்தோஷம்" என்ருர் மகாத்மா. கிருஷ்ணன் ஒரு முறை அர்ஜுனன் உடம்பைத் தடவினுனும். அவனுடைய துக்கமெல்லாம் பறந்தோடியதாம். சந்திரனும் அதே நிலையில் இருந்தான். தன் வேலைக்குப் பயன் கிடைத்து

விட்டதென்று நினைத்துத் தலை குனிந்து உட்கார்ந்தான்.

"பிறர் கஷ்டப்படும்போது இரக்கம் காட்டுவது கடவுள் கொடுத்த வரம்" என்றார் மகாத்மாஜி.

"நானும் கஷ்டப்பட்டவன், பாபூஜி" என்று சொல்லிச் சந்திரன் தன் கதையை யெல்லாம் சொன்னான். மகாத்மாவின் முகம் வாடி விட்டது. சற்றுப் பேசாமலிருந்து விட்டுச் சந்திரனை முதுகில் தடவிக் கொடுத்தார்; "துளசி உங்களுக்குக் கண்டிப்பாகக்கிடைப்பாள். கடவுளை நம்புங்கள். மனம் தளரவேண்டாம். ஒன்று மாத்திரம் சொல்லிவிடுகிறேன்! அவளை விசாரணை செய்யும் அதிகாரத்தைக் கடவுள் உங்களுக்குக் கொடுக்கவில்லை. பரமாத்மா கொடுப்பதை வணக்கத்தோடும் நம்பிக்கையோடும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். சந்திரனுடைய மனத்தின் பாரம் குறைந்தது. துளசி போனதிலிருந்து அன்று தூங்கியது போல் அமைதியாக என்றுமே அவன் தூங்கியதே இல்லை.

பல நாட்கள் வந்து போய் விட்டன. சந்திரனுக்குக் காந்தியடிகளின் வாக்கில் ஏற்பட்ட நம்பிக்கை மெல்ல மெல்லக் குறைந்து வந்தது. 'இனிமேல் துளசியாவது, வருகிறதாவது? இந்த ஜன்மத்தில் அவளைப் பார்க்கும் ஆசையை விட்டு விட வேண்டியதுதான்" என்று நினைத்தான்.

நிராசை அதிகரித்த சமயங்களில் சந்திரன் வேலையில் இரண்டறக் கலந்துவிடுவான். அதற்கு முதலும் இல்லை; முடிவும் இல்லை. சோற்றுக்கும் துணிக்கும் கதியற்ற நிலையில் அகதிகளை நோய் வாட்டி எடுத்ததில் என்ன ஆச்சரியம்! பகலெல்லாம் இவர்களைப் பார்த்துப் பார்த்துச் சந்திரன் மனம் சோர்ந்துவிடும். வீட்டுக்கு நடக்கவும் சக்தி இராது. ஒரு நாள் இப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது பின்னால் யாரோ ஒரு பெண் வருவது தெரிந்தது. வெயில் கொளுத்தியது. அவள் முகத்தைத் தலைப்பால் மூடியிருந்தால் ஆள் அடையாளம் தெரியவில்லை. அவள் முன்னால் போகட்டுமென்று நடையைத் தளர்த்தினான் சந்திரன். அவள் முன்புறம் வந்ததும் அவள் முகத்தை மூடியிருந்த திரை விலகியது. ஆகா! துளசி! ஆயாசத்தால் களைத்து அநாதையாய் வாடிய துளசி! கந்தல் உடுத்திருந்தாள். தலை எண்ணெய் கண்டு எத்தனை நாளாயிற்றோ! தன் இதய தேவதையை இந்த நிலையில் கண்ட சந்திரன் தன் கண்ணையே ஒரு விநாடி நம்பவில்லை. பிறகு தெளிந்து, "துளசி!" என்று கூப்பிட்டுக் கையை நீட்டினான். துளசி தூக்கிவாரிப் போட ஓரடி பின்னால் வைத்தாள். சந்திரன் சந்தேகத்தோடு, "நீ துளசி இல்லையா?" என்று கேட்டான். சற்று நேரம் அவள் பதிலே சொல்லவில்லை. கண்ணீர் பெருக்கினாள். பிறகு "ஆமாம்; அந்தத் துரதிருஷ்டம் பிடித்தவள்தான்" என்றாள்.

தான் காண்பது கனவென்றே சந்திரன் நினைத்தான். பல முறை தனியாகப் படுத்திருக்கும்போது இந்தக் காட்சியை நினைத்துப் பார்த்திருக்கிறான். துளசியைக் கண்டதும் தான் என்ன பேசவேண்டும் என்று கூட உருப் போட்டு வைத்திருந்தான். அவள் வருத்தத்தை யெல்லாம் மறக்கச் செய்ய வேண்டுமென்று சத்தியம் செய்திருந்தான்.

ஆனால் இந்தச் சமயத்தில் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. ஊமை போல் அவளைப் பார்த்துக்கொண்டு நின்றான். அவளும் பேசவில்லை. பெருகிய கண்ணீரைப் புடைவைத் தலைப்பால் துடைத்துக்கொண்டாள். சந்திரன் சட்டென்று சுய நினைவை அடைந்தான். "வீட்டுக்கு வா, துளசி" என்று அழைத்தான்.

"வரலாமா?" என்று கேட்டாள் அவள்.

"அதென்ன, கேட்கிறாய்? உன் வீட்டுக்கு வர நீ யாருடைய உத்தரவைக் கேட்கவேண்டும்? வா போகலாம்."

"அப்படியானால் இருங்கள். குழந்தையைக் கொண்டு வருகிறேன்."

"குழந்தையா!" - சந்திரன் திகைத்து நின்றான். அவன் கற்பனையில் குழந்தையின் சித்திரம் தோன்றவில்லை. அது துளசியின் குழந்தைதான்; ஆனால் தனக்குப் பிறந்ததல்ல. அவமானத்தால் அவன் ரத்தம் கொதித்தது. அவன் சந்தேகத்தைக் கண்ட துளசி, "ஆமாம், அதிருஷ்டம் கெட்ட குழந்தை ஒன்று இருக்கிறது; இரண்டு மாசமாகிறது. ராதை சுகமாயிருக்கிறாளா?" என்று கேட்டாள்.

"ராதையா! அவள்தான் வீட்டோடு வெந்து போய்விட்டாளே!" ஒரு கணம் இருவர் கண்ணெதிரிலும், சுகமாய் வசித்த அந்தக் குடும்பத்தை நாசமாக்கிய பிரளயாக்கினி கொழுந்து விட்டு எரிந்தது. ஆனால் கஷ்டத்தின்மேல் கஷ்டமாக அநுபவித்த துளசியை ராதையின் மரணச் செய்தி அதிகமாகத் தாக்கவில்லை. வலியை உணரும் சக்திகூட அவளை விட்டுப் போய்விட்டமாதிரி இருந்தது.

சந்திரன், "குழந்தையை வேண்டுமென்றால் ஏதாவது அநாதைகள் விடுதியில் விட்டுவிடலாம். நீ வா, துளசி" என்றான். துளசி பழைய துளசியாக இல்லை. கஷ்டத்தின் கொடுமையால் அவளுடைய மென்மையான சுபாவங்கூட மாறிவிட்டது. கடினமான உலகத்தில், கல்லைப்போல் இறுகிவிட்டது அவள் மனம்.

"குழந்தையை விட்டுவிட்டு வர முடியாது. வரவேண்டுமென்றால் இருவருமாக வருகிறோம்" என்றாள். அவளுடைய சிரிப்பில் ஓர் அலட்சியம் தொனித்தது.

சந்திரன் திகைத்தான். "அவளை விசாரணை செய்யும் அதிகாரம் உனக்கு இல்லை" என்று மகாத்மா சொன்னது அவன் நினைவுக்கு வந்தது. அது ரத்தத்தால் எழுதியது போல் அவன் கண்முன் நின்றது. இருந்தாலும் அவமானமென்று பிறர் சொல்வார்களே; அதை எப்படி மீறுவது? அவன் மனநிலை அவ்வளவு பக்குவமாகவில்லை. குழந்தையின் முகத்தைப் பார்க்கவே பின் வாங்கினான். சற்று யோசித்து, "சாயங்காலம் இங்கே வா. மாமாவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு வருகிறேன்" என்றான். துளசி, "சரி" என்று தலையை ஆட்டிவிட்டுப் போனாள்.

சந்திரன் யோசித்துக்கொண்டே போனான். கற்பனையில் அவன் துளசிக்கு எவ்வளவு ஆதரவு காட்டினான்! உண்மையில் நடப்பதென்ன? அவன் வைத்தியன்; இந்தமாதிரி விஷயத்தைப் பெரிதாக எடுத்துக் கொள்ளக்கூடாதென்று தெரியும். இருந்தாலும் அவமானம் பெரிதாகத் தோன்றியது. அவளுக்கு ஏற்பட்ட களங்கத்தைக் குத்திக்

காட்டும் அந்தக் குழந்தையைத் தன் ராதையின் ஸ்தானத்தில் வைத்துக் கொஞ்சுவதா? வீட்டுக்குப் போன பின்னும் சந்திரனுக்குத் திக்குத் திசை தெரியவில்லை. மகாத்மாவின் வாயிலிருந்து, "துளசியைச் சேர்த்துக் கொள்" என்ற வாக்குப் பிறந்த போது அதில் ஒன்றும் விபரீதம் இருந்ததாகப் படவில்லை. இப்பொழுது அது அசாத்தியமாகத் தோன்றியது.

என்னவோ யோசித்துக் கொண்டே சாப்பிட்டுவிட்டுப் படுத்தான். கடைசியில் ஒரு கடிதம் எழுதி மாமாவின் கண்ணில் படும்படி மேஜைமேல் வைத்துவிட்டு, சைக்கிளில் ஏறி எங்கோ போய் விட்டான்.

மாலையில் ராயர் வெளியே புறப்படும் சமயம்; மேஜைமேல் கடிதம் இருப்பதைப் பார்த்தார். "உங்கள் நட்புக்காவது துளசியின் அன்புக்காவது நான் ஏற்றவன் அல்ல. என்னை மன்னியுங்கள். அகதிகளின் விடுதிக்குப் பக்கத்தில், ஆலமரத்தின் கீழ்த் துளசி உங்களை எதிர்பார்த்துக் காத்திருப்பாள்" என்று சந்திரன் எழுதியிருந்தான்.

ராயருக்கு ஒன்றும் தோன்றவில்லை. மனைவியிடமும் சொல்லாமல் அந்த இடத்துக்குப் போனார். அவரைக் கண்ட துளசிக்குத் துக்கம் பொங்கி வந்தது. கம்மிய குரலில், "அப்பா!" என்றாள். ராயர் அழுதுவிட்டார். "வா, அம்மா; வீட்டுக்குப் போகலாம்" என்றார். மறுபடியும் துளசியின் மனம் கல்லாயிற்று. "இல்லை, அப்பா; நான் வர முடியாது. குழந்தை ஒன்று இருக்கிறது" என்றாள்.

ராயர் யோசித்தார். மகாத்மாவின் உபதேசம் அவர் காதில் அப்போதும் ஒலித்தது. ஒரு கணம் தயங்கினார்; அடுத்த கணமே, "குழந்தையையும் எடுத்துக்கொண்டு வா, அம்மா. உன் குழந்தை எனக்குப் பேரன்தானே?" என்றார்.

துளசி விக்கல்களுக்கிடையே, "அப்பா! நீங்கள் தெய்வம்" என்றாள்.

"அப்படி இல்லை! வேறொரு தெய்வம் வழி காட்டியது, அம்மா!" என்றார் அவர்.

வீட்டுக்குப் போனவுடன், "அவர் எங்கே?" என்று துளசி பயத்தோடு கேட்டாள். சந்திரன் எழுதி வைத்த கடிதத்தை ராயர் கொடுத்தார். படித்த பின் துளசி, "இப்படித்தான் நடக்கும் என்று நான் நினைத்தேன்" என்றாள்.

ஸ்ரீநிவாஸ ராயர், "மனிதர்களைத் தெய்வம் இப்படிச் சோதிக்கக் கூடாது, அம்மா" என்று கண்ணைத் துடைத்துக்கொண்டார்.

திறமையுள்ள கமிட்டி

மூன்று பேர் உள்ள ஒரு கமிட்டியினால் எந்தக் காலத்திலும் ஒரு வேலையும் நடவாது. ஆனால், அவர்களில் ஒருவர் நோயால் வாடவேண்டும்; இன்னொருவர் ஆஜராகாமல் இருக்க வேண்டும்; அப்போது வேண்டுமானால் ஏதாவது வேலை நடக்கும்.

—'பார்ட்னெர்ஸ்'

காப்பிரைட் 1947: ஜே. பி. ரைன்; விலை 3·50 டாலர்; வெளியிட்டோர்: வில்லியம் ஸ்லோவன் அஸோஸியேஷன், நியூ யார்க், ஐக்கிய அமெரிக்கா.

எல்லையற்ற மனம்

நாம் இருக்கிறோமே மனிதர்கள் - நீங்களும் நானும் உள்படத்தான் - நாம் யார்? அதை அறிந்தவர் எவரும் இல்லை. மனிதனைப்பற்றி எத்தனையோ விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கிறார்கள். ஆனால், அவனுடைய அடிப்படையான சுபாவம் - நடவடிக்கையின் மூலகாரணம் - மாத்திரம் பெரிய மர்மமாகவே இருக்கிறது. மனிதனுடைய மனம் என்பது என்ன? இதை ஸயின்ஸினால் விளக்க முடியவில்லை. பிரஞ்ஞை என்பது எப்படி ஏற்படுகிறது? அது யாருக்கும் தெரியாது. எண்ணம் என்பது என்ன? அதுவும் தெரியாது.

மனிதனுக்குத் தேகம், ஆத்மா என்ற இரண்டு அம்சங்கள் உண்டு என்று முன் ஒரு காலத்தில் நம்பியிருந்தோம். ஆனால், நடத்தைக்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது; குணங்களைக் கிரந்திகள் ஆட்டி வைக்கின்றன; மூளை வளர வளரத்தான் குழந்தையின் மனம் பக்குவம் அடைகிறது; மனத்தின் சில செயல்கள் மூளையின் சில குறிப்பிட்ட பகுதிகளோடு சம்பந்தமுள்ளவை; அந்தக் குறிப்பிட்ட பகுதிகளில் ஒன்று சேதமடைந்தால், அதற்குரிய மனத்தின் செயல் நின்றுவிடுகிறது - இந்த விஷயங்களையெல்லாம் ஸயின்ஸ் இப்போது நிரூபித்துவிட்டது. ஆகையால், மனிதனை முற்றும் பௌதிக இயற்கை படைத்த ஒரு 'வஸ்து'வாகவே பலர் நினைக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட மனம் அல்லது ஆத்மாவே மனிதனின் நடத்தையைக் கண்காணித்துக் கொள்கிறது என்று மதித்து, வாலிப உபதேசியார்களைத் தீவிரமாக ஒரு பாதிரிப் பள்ளிக்கூடம் தயாரித்துக்கொண் டிருக்கிறது. அதற்குக் கூப்பிடு தூரத்தில் உள்ள ஒரு வைத்திய கலாசாலையோ, உடற் கூறுகளைத் தவிர வேறு ஒன்றுமே இல்லை என்று மதித்து, அதற்கேற்ற முறையில் வாலிப வைத்தியர்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. மனநோய் வைத்திய வாலிபர்களுங்கூட, வர வர மனத்தை அலட்சியம் செய்துவிட்டு மூளைக்குச் சிகிச்சை செய்கிறார்கள்; அதற்காக, பீச்சாங்குழல், ரண சிகிச்சைக் கத்தி, மின்சார யந்திரம் ஆகியவற்றையே நம்பத் தொடங்கி விட்டார்கள்.

இதில் ஒரு வேடிக்கை: மனம் என்பது பௌதிகப் பொருள்தான் என்று நிரூபித்துவிட்டதாக மட்டும் யாரும் இதுவரையில் பாத்தியம் கொண்டாடவில்லை. ஆனால், அது பௌதிகப் பொருள்தான் என்ற நம்பிக்கையே ஸயின்ஸ் வகுப்புக்களில் இருந்துவருகிறது; பாதிரிப் பள்ளிக்கூடங்களிலோ இதேபோல ஆத்மாவில் நம்பிக்கை இருந்து வருகிறது. இவ்விதமாக நம் நாகரிகத்தில் இரண்டு எதிரிடையான அம்சங்கள் இருக்கின்றன. மனம் பௌதிக வஸ்து அல்ல என்ற கொள்கைப்படி, மனிதன் 'சித்த சுதந்தரம்' உள்ளவன் என்று ஏற்படுகிறது; மறு கொள்கைப்

படி, மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையும் பௌதிகச் சட்டங்களுக்கு உட்பட்டதே, அவனுக்குச் சித்த சுதந்தரம் கிடையாது என்று ஏற்படுகிறது. இரண்டில் எது உண்மை?

மனம் என்பது மூளையின் பௌதிகச் செயல்தானா, வேறா? இதை அறிந்துகொள்வது, நமக்கு - ஜன சமூகத்துக்கே - மிக முக்கியமாகும். மனிதனுக்குச் 'சித்த சுதந்தரம்' இல்லை என்றால், ஒழுக்கம் ஏது? ஜனநாயகம் ஏது? சுதந்தரமாக ஆராயும் ஸயின்ஸ்தான் ஏது?

முற்றும் பௌதிகவஸ்து என்று மனத்தை எண்ணுவது என்னவோ தவறு என்றே இதனால் ஏற்படுகிறது. ஸயின்ஸ் ரீதியாக மனித இயல்பை ஆராயும்போது, சில அதிசயமான நிகழ்ச்சிகளை நாம் அலட்சியம் செய்துவிடுகிறோம். அவை மிகவும் அபூர்வமாகவே நிகழ்கின்றன; அவைகளின் உண்மையை விசாரிக்க முடிவதில்லை. இதனாலேயே அலட்சியம் செய்கிறோம். ஆனால் சில விஞ்ஞானிகள் அவைகளை இப்போது ஆராய்ந்திருக்கிறார்கள். அந்த ஆராய்ச்சியிலிருந்து ஏற்பட்ட முடிவுகள் புரட்சிகரமாக இருக்கின்றன.

அந்த நிகழ்ச்சிகளை 'மானஸ' (ஸைகிக்) நிகழ்ச்சிகள் என்றும், அவைகளின் ஆராய்ச்சியை 'மானஸ ஆராய்ச்சி' (ஸைகி ரிஸர்ச்) என்றும் சொல்லுகிறார்கள். யுனிவர்ஸிடி கோஷ்டிகளில் அதற்கு 'அசாதாரண மனத்தத்துவம்' (பாராஸைக்காலஜி) என்ற பெயர் வழங்குகிறது. இது வரைக்கும் தெரிந்த மனத்தத்துவ சம்பந்தமான கொள்கைகள் எவற்றையும் மிஞ்சிய விவரங்களை ஆராயும் இந்த ஸயின்ஸ், விஞ்ஞான சம்பிரதாயத்துக்கு விரோதமானது; விவாதத்துக்கு உரியது; புதிய ஆராய்ச்சித் துறை பற்றியது. இந்த ஆராய்ச்சி விவரத்தை இங்கே தருகிறேன்.

மனிதனுடைய மனம் முற்றும் பௌதிகமானதா, அல்லது பௌதிகத்தை மிஞ்சியதா? இதை நிர்ணயிப்பதற்கு, 'மானஸத் தந்தி'யை ஆராய்வதுதான் நமது ஆராய்ச்சியில் முதற்படி. டியூக் யுனிவர்ஸிடியில் இந்த விஷயத்தை நாங்கள் விரிவாக ஆராய்ந்தோம்; பிறர் செய்திருக்கும் ஆராய்ச்சிகளையும் பரிசீலனை செய்தோம்.

'மானஸத் தந்தி' என்பது ஒருவர் எண்ணத்தை மற்றொருவர் மனத்துக்கு மாற்றுவது. இது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். இதை விஞ்ஞான ரீதியில் ஆராய எண்ணினோம். ஏனென்றால், ஒருவர் மனத்தில் உள்ள எண்ணத்தை மற்றொருவர் மனத்துக்கு மாற்றிவிட முடிந்தால், வெறும் மூளைக்கு அப்பாற்பட்ட மனச் சக்திகள் மனிதனுக்கு உண்டு என்று நிரூபணம் ஆகிவிடும். 'மானஸத் தந்தி' விஷயத்தை இரண்டு யுனிவர்ஸிடிகளின் சோதனைக் கூடங்களில் 1920 - ஆம் வருஷத்தில் பரீட்சித்தார்கள். வேறு பலரும் தனியே பரீட்சித்தார்கள். பெரும்பாலும் இந்தப் பரீட்சைகளிலெல்லாம் ஓர் அறையில் ஒரு மனிதன் உட்கார்ந்துகொண்டு ஏதாவது ஒரு பொருளையோ, சித்திரத்தையோ முழுக் கவனத்துடன் உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பான். பக்கத்திலோ அல்லது வெகு தூரத்துக்கு அப்பாலோ உள்ள மற்றோர் அறையில் இன்னொரு மனிதன் உட்கார்ந்துகொண்டு முதல் மனிதனின்

கவனத்தில் உள்ள பொருளை வர்ணித்துச் சொல்லுவான்; அல்லது பென்ஸிலால் சித்திரிப்பான்.

இந்தப் பரீட்சைகளில் கிடைத்த பலன்களைக் கொண்டு பார்த்தால், 'மானஸத் தந்தி' உண்மை என்றே ஏற்படுகிறது. விஞ்ஞான ரீதியாக இங்கும் வெளி நாடுகளிலும் ஆயிரக் கணக்கான பரீட்சைகள் நடந்திருக்கின்றன. புலன்களின் உதவி இல்லாமலே அறிவு ஏற்படுகிறது என்பதை அவையெல்லாம் நிரூபித்து விட்டன. சகல ஸயின்ஸ்களிலும் இப்போது பௌதிக நோக்கந்தான் சூழ்ந்திருக்கிறது. அது தவறு என்பதை இந்த 'மானஸத் தந்தி' விளக்கிவிட்டது. சம்பிரதாயமான விஞ்ஞானிகள் இதை அலட்சியம் செய்கிறார்கள். புலன்களுக்கு அதீதமான அறிவு உண்டென்றால், அவர்களுக்குச் சகிக்கவில்லை. ஆனால், நடந்த சோதனைகளைப்பற்றி அவர்களால் ஒரு பழுதும் சொல்ல முடியவில்லை; அவைகளை அவர்கள் அலட்சியம் செய்ய ஒரு நியாயமும் இல்லை.

மனம் முற்றும் பௌதிக இயல்பு படைத்ததே என்று சம்பிரதாயமான விஞ்ஞானிகள் எண்ணிக் கொண்டிருப்பதைத் தகர்க்க மற்றொரு பரீட்சை உண்டு. 'ஞான திருஷ்டி' (க்ளேர்வாயன்ஸ்) என்பது உண்மையா என்று சோதித்தோம். இது நமது இரண்டாவது படி.

'ஞானதிருஷ்டி'யும் 'மானஸத் தந்தி'யும் சகோதர சகோதரிகள் போன்றவை. புலன்களின் உதவி இல்லாமலே பொருள்களையும் காட்சிகளையும் காண்பது 'ஞான திருஷ்டி.' அதுபோலவே புலன்களின் உதவி இல்லாமலே மற்றொரு மனிதனின் மனத்தில் உள்ள எண்ணங்களைக் காண்பது 'மானஸத் தந்தி'.

தன் சகோதரன் தன்னைத் தானே துப்பாக்கியால் சுட்டுக் கொள்வதுபோலக் கனவு கண்டாள் ஒரு பெண். இது 'ஞான திருஷ்டி'க்குச் சிறந்த உதாரணம். அவள் கண்ட காட்சி அவன் மனத்தில் தோன்றியிருக்கக்கூடிய எண்ணமாக இல்லை; அவளே நேரே இருந்து காண்பதுபோல் தோன்றியது. அவளுடைய காட்சியிலே, சகோதரன் உள்ளே வந்தான்; குதிரைகளை லாயத்திலே கட்டினான்; பிறகு வைக்கோற்போருக்கு அருகே சென்றான்; கைத்துப்பாக்கியை வெளியே எடுத்துத் தன்னைத் தானே சுட்டுக்கொண்டான். அவன் உடம்பு கீழே விழுந்து உருண்டதையும், அவன் கையிலிருந்து துப்பாக்கி விழுந்த இடத்தையும் அவள் காட்சியிலே கண்டாள். இந்த விஷயங்களையெல்லாம் தன் கணவனிடம் அவள் வர்ணித்துச் சொன்னாள். நகரத்திலே தன் சகோதரன் வசித்த இடத்துக்கு உடனே தாங்கள் காரில் போகவேண்டும் என்று அவள் பிடிவாதம் பிடித்தாள். அவள் வர்ணித்த அத்தனை விவரங்களும் சரியாக இருந்தன. ஆனால், நேரிலிருந்து அந்தக் காட்சியைக் கண்டவர் யாரும் இல்லை. ஆகையால், இங்கே 'மானஸத் தந்தி' சாத்தியம் அல்ல.

'ஞானதிருஷ்டி'ச் சோதனைகள் பலவற்றை டியூக் யுனிவர்ஸிடியில் நாங்கள் நடத்தினோம். மறைந்த சீட்டுக்களை அடையாளம் கண்டு பிடிக்கும்படி பலரை நாங்கள் சோதித்தோம். இதற்காக 25 சீட்டுக்கள் அடங்கிய ஒரு கட்டைத் தயாரித்தோம். ஆனால், அவற்றில் ஐந்து விதக் குறிகள் மட்டுமே உண்டு.



உங்கள் 'அதீத மனச் சக்தி' எவ்வளவு?

இ. எஸ். பி. சீட்டுக் கட்டின் 25 சீட்டுக்களின் பின்புறம் மேலே இருப்பது. அடுத்த பக்கத்தில் இவைகளின் பினபுறம் இருக்கிறது. அதை இப்போது புரட்டிப் பார்க்காதீர்கள். இதோ இருக்கும் (1) அலை, (2) சதுரம், (3) நட்சத்திரம், (4) வட்டம், (5) சிலுவை இந்த ஐந்து குறிகளுமே முன்புறம் இருபபவை. ஒரே கவனமாக மனத்தைக் குவியவைத்துப் பின்புறம் உள்ள ஒவ்வொரு குறியையும் ஹேஷ்யம் செய்து இந்தக் கட்டங்களில் குறித்துவிடுங்கள். பிறகு அடுத்த பக்கத்தைப் பாருங்கள். 5-ககு மேல் சரியாக இருந்தால், சிறப்பு.

≈	□	☆	○	+

1	2	3	4	5
6	7	8	9	10
11	12	13	14	15
16	17	18	19	20
21	22	23	24	25

நட்சத்திரம், சதுரம், சிலுவை, வட்டம், அலை இவையே அந்தக் குறிகள். புலன்களுக்கு அதீதமான அறிவைச் சோதிப்பது என்று குறிக்கும் 'அதீத அறிவுச் சீட்டுக் கட்டு' (இ. எஸ். பி. டெக்) என்று இதற்குப் பெயர்.

யாரைச் சோதிக்கப் போகிறோமோ அவரிடம் இந்தச் சீட்டுக்களை எல்லாம் காட்டுவோம்; இன்ன பரீட்சை செய்யப்போகிறோம் என்பதையும் தெரிவிப்போம். பிறகு சீட்டுக் கட்டை நன்றாகக் கலைத்துவிடுவோம். சீட்டுக்கள் இன்ன வரிசையில் இருக்கின்றன என்று யாருக்கும் தெரியாது. சீட்டுக்களை யெல்லாம் அவருக்கு முன்னே கவிழ்த்துப் போடு



வோம். முதல் சீட்டு இன்னது என்று அவர் சொல்லுவார். உடனே அதை அகற்றிவிடுவோம். பிறகு அடுத்தது இன்னது என்று சொல்லுவார். அதையும் அகற்றி விடுவோம். இப்படியே எல்லாச் சீட்டுக்களையும் சொல்லுவார். ஆனால் கடைசி வரைக்கும் ஒன்றையும் பார்ப்பதில்லை.

பொதுவாக 25 சீட்டுக்களில் 5 சீட்டுக்களை ஒருவர் சரியாகச் சொல்லிவிடலாம். கணித சாஸ்திர ரீதியாகக் கணக்கிட்டது இந்தச் 'சான்ஸ்' விகிதம். ஆனால், இந்தச் சீட்டுக்களை நாலு தடவை திரும்பத் திரும்ப இப்படி ஒருவர் அடையாளம் சொல்லியதாகவும், மொத்தம் முப்பது சீட்டுக்களை அவர் சரியாகச் சொல்லிவிட்டதாகவும் வைத்துக் கொள்வோம். அப்போது தடவை ஒன்றுக்குச் சரியாக அவர் சொன்னது சராசரி 7½ ஆகிறது. அப்படியானால், அவர் ஒரு சீட்டைச் சரியாகச் சொன்ன 'சான்ஸ்' விகிதம் 150க்கு 1 ஆகிறது. ஆரம்பத்திலிருந்தே ஒரு கணித நிபுணரைப் பக்கத்திலே வைத்துக் கொண்டுதான் எங்கள் பரீட்சையை நடத்தினோம். எங்களுக்குக் கிடைத்த முடிவுகளைக் கணித சாஸ்திர ரீதியாக யாரும் அசைக்க முடியாது.

நாங்கள் பலமான முன்னெச்சரிக்கைகள் எடுத்துக்கொண்டோம். எந்த விதமான சூதுக்கும் இடம் இல்லாதபடி செய்து விட்டோம். அடையாளம் சொல்பவருக்கும் சீட்டுக்களுக்கும் இடையிலே கெட்டியான திரை கட்டினோம். சில சமயம் சீட்டுக்களை அடுத்த அறையிலோ பக்கத்து வீட்டிலோகூடக் கொண்டு போய் வைத்தோம்.

பரீட்சைகளில் கிடைத்த புள்ளி விவரங்களை இனிக் கவனிப்போம். அடையாளம் சொன்னவர்களுக்குள்ளே ஒருவர் முதல்தரமாய் விளங்கினார். அவரை 700 தடவை பரீட்சித்தோம். தடவை ஒன்றுக்

குச் சராசரி 8 விகிதம் அவர் சரியாகச் சொன்னார். இப்படித் தடவை ஒன்றுக்குச் சராசரி 8 விகிதம் தொடர்ச்சியாக மூன்று தடவை ஒருவர் சரியாகச் சொல்லுவதே அபூர்வம். அப்படிச் சொல்லக்கூடிய 'சான்ஸ்' விகிதம் நூற்றுக்கு ஒன்றாகும். தடவை ஒன்றுக்குச் சராசரி 8 விகிதம் 700 தடவை ஒருவர் சரியாகச் சொன்னால், அந்தச் 'சான்ஸ்' விகிதம் பல கோடிகளில் ஒன்றாகும். அந்த எண்ணை எழுதினால் ஒரு பாரா முழுவதையும் அடைத்துக்கொண்டு விடும். இந்த விகிதப்படி ஒருவர் சரியாகச் சொன்னது ஆச்சரியமாகும். இதை வெறும் 'சான்ஸ்' என்று மட்டும் சொல்லிவிட முடியாது. மற்றவர் சரியாகச் சொல்லும் விகிதம் எதுவாக இருந்தாலும் சரிதான்; இந்த மனிதரின் 'சான்ஸ்' விகிதம் அசாதாரணமான அபூர்வம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

'ஞானதிருஷ்டி'த் திறமை படைத்தவர்கள் என்று பூர்வாங்கப் பரீட்சைகளின் மூலம் சிலரைத் தேர்ந்தெடுத்தோம். அவர்களிடம் இந்தச் சோதனையை நடத்திய போது, 25 தடவைகளில் தடவை ஒன்றுக்குச் சராசரி 7 விகிதம் அவர்கள் சரியாகச் சொன்னார்கள்.

'ஞானதிருஷ்டி' உண்டு என்பதற்கு ஆதாரம் டியூக் யுனிவர்ஸிடியில் நடந்த ஆராய்ச்சி மட்டும் அல்ல. இந்த 'அதீத அறிவு' ஆராய்ச்சி கொலராடோ யுனிவர்ஸிடியில்தான் மிகவும் விரிவாக நடந்திருக்கிறது. மனத் தத்துவ சாஸ்திரத்தில் வல்ல மிஸ் டொராதி மார்ட்டின் என்ற வாலிபப் பெண் மணியும், கணித சாஸ்திரத்தில் வல்ல மிஸ் பிரான்ஸிஸ் பி. ஸ்ட்ரிபிக் என்ற பெண்மணியும் அங்கே மூன்று வருஷ காலமாக இந்தச் சோதனையை நடத்தி வருகிறார்கள். 12,000 தடவை பரீட்சித்திருக்கிறார்கள். பரீட்சையில் முதல் தரமாகத் தேறியவர்கள் மொத்தம் 3,500 தடவைகளில் தடவை ஒன்றுக்குச் சராசரி 6·85 சீட்டுக்கள் சரியாகச் சொல்லியிருக்கிறார்கள். எல்லாரும் பரீட்சிக்கப்பட்ட மொத்தம் 12,000 தடவையில் தடவை ஒன்றுக்குச் சராசரி 5·83 சீட்டுக்கள் சரியாகச் சொல்லியிருக்கிறார்கள். கணித சாஸ்திரப்படி 'சான்ஸ்' விகிதத்தைக் கணக்கிட்டால், இப்படி நேர்வது கோடி கோடிக் கணக்கான பரீட்சைகளில் ஒரு முறைதான் சாத்தியம் என்று ஏற்படும்.

இதுவரைக்கும் நடந்த 'அதீத் அறிவு'ப் பரீட்சைகளுக்குள்ளே மிக அதிக விகிதம் சரியாகச் சொன்னவள் ஒரு வாலிபப் பெண்தான். 'மானஸ சக்தி' உடையவள் என்று உள்ளூரிலே பெயர் வாங்கியவள் அந்தப் பெண்; ஆனால், அதைத் தொழிலாகக் கொண்டவள் அல்ல. அவளை நியூ யார்க் நகரில் உள்ள ஹண்டர் காலேஜின் மனத்தத்துவப் புரொபஸரான பி. எப். ரீஸ் என்பவர் 'அதீத அறிவு'ப் பரீட்சை செய்தார். பெண்ணை ஒரு வீட்டுக்குள் வைத்துவிட்டு, மற்றொரு வீட்டுக்குள் சீட்டுக்களுடன் உட்கார்ந்து டாக்டர் ரீஸ் பரீட்சித்தார். இப்படி 74 தடவை பரீட்சித்ததில் சராசரியாகத் தடவை ஒன்றுக்கு 25 சீட்டுக்களில் 18 சீட்டுக்களை அவள் சரியாகச் சொன்னாள். ஒரே ஒரு தடவை 25 சீட்டுக்களையுமே சரியாகச் சொல்லிவிட்டாள். 20 சீட்டுக்களைப் பல தடவைகள் சரியாகச் சொன்னாள்.

சுருங்கச் சொன்னால், புலன்களின் உதவி இல்லாமலே பொருள்களைப் பார்க்கக் கூடிய 'அதீத அறிவு' உண்டு என்பது 1930-ஆம் வருஷ வாக்கிலேயே நிரூபணமாகிவிட்டது. இந்த விஷயம் பற்றி இப்போது வாதப் பிரதிவாதமே கிடையாது.

மனத்தின் சக்திகளை வெளியின் வரம்புகளான தூரம் முதலியவை பாதிக்கவில்லை. இந்த விஷயத்தைக் கண்டுபிடித்தது நமது மூன்றாவது படி.

வெளியைக் கடந்தது மனம் என்பதை ருசுப்பிக்க அநுபவத்தில் எத்தனையோ உதாரணங்கள் உண்டு. எங்கேயோ வெகு தூரத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை, பிரத்தியட்சமாய்த் தெரிந்த எந்தச் சாதனங்களின் உதவியும் இல்லாமல் திடீரென்று பலர் அறிந்துகொண்டிருக்கிறார்கள். இது ஓரளவு சகஜமான அநுபவம். ஒருவர் மனத்தில் உள்ள எண்ணங்களை மற்றொருவர் மனத்துக்கு மாற்றுவது, இருவரும் ஒரே வீட்டுக்குள் இருந்தாலும் முடிகிறது; வெகு தூரத்துக்கப்பால் பிரிந்தாலும் முடிகிறது. பூமண்டலத்தின் ஒரு மூலையில் உள்ள ஒருவர் செத்தால், அந்தச் சாவை மறு மூலையில் உள்ள நெருங்கிய நண்பரோ உறவினரோ 'ஞான திருஷ்டி' சக்தியால் அறிந்து கொள்வதும் உண்டு.

ஆனால் இந்த மாதிரி சம்பவங்களைப் பற்றிய செய்திகளை ஸயின்ஸ் ரீதியான ஆதாரமாகக் கொள்ள முடியாது. இப்பேர்ப்பட்ட சக்திகளை ஸயின்ஸ் ரீதியில் நிரூபிப்பதற்காக, எங்கள் கண்காணிப்பில் சில சோதனைகளை நடத்தினோம். பாதிரிப் பள்ளிக்கூடத்தில் பயிலும் ஒரு மாணக்கனை 'அதீத அறிவு'ச் சீட்டுக்களைக் கொண்டு பரீட்சித்தோம். சோதிப்பவரின் மேஜைக்கு எதிரிலே அவனை உட்கார வைத்து முதலில் சோதித்தோம். பிறகு நூறு கஜ தூரத்துக்கு அப்பால் உட்காரவைத்துச் சோதித்தோம். மேஜைக்கு எதிரில் உட்கார்ந்த போது 36 தடவைகளில், தடவை ஒன்றுக்குச் சராசரி 8 விகிதம் அவன் சரியாகச் சொன்னான். 100 கஜ தூரத்தில் உட்கார்ந்தபோதோ 30 தடவைகளில், தடவை ஒன்றுக்குச் சராசரி 9 விகிதம் சரியாகச் சொன்னான். அதிக தூரத்தில் அதிக வெற்றி!

'மானஸத் தந்தி'ப் பரீட்சை ஒன்று நடத்தினோம். அது இன்னும் ஆச்சரியமாயிருந்தது. மிஸ் டார்னர் என்ற பெண்மணியைச் சோதித்தோம். அவள் இருந்த அதே அறையில் மிஸ் ஒன்பி என்ற பெண்மணியும் இருந்துகொண்டு முதலில் சோதித்தார். இது முற்றும் 'மானஸத் தந்தி'ச் சோதனை. இதில் சீட்டுக்களைக் கையில் வைத்துக்கொள்ளவில்லை. 'அதீத அறிவு'ப் பரீட்சைச் சீட்டுக்களின் ஐந்து குறிகளையும் மட்டில் ஒன்பி மாற்றி மாற்றித் தமது மனத்திலே நினைத்துக் கொண்டார். அதை மிஸ் டார்னர், தடவை ஒன்றுக்குச் சராசரி 8 விகிதம் சரியாகச் சொன்னாள். பிறகு 250 மைல் தூரத்தில் இருந்துகொண்டு எட்டுத் தடவை சோதித்ததில், தடவை ஒன்றுக்குச் சராசரி 10 விகிதம் சரியாகச் சொன்னாள். ஆகவே, 'அதீத அறிவு'ச் சோதனையில் தூரம் எந்த விதத்திலும் பாதிக்கவில்லை.

இந்த விஷயங்களைப் பற்றிப் பல பௌதிக சாஸ்திரிகளிடம் நான் சம்பாஷித்தேன். 'அதீத அறிவு'ச் சோதனையில் கிடைத்த பலன்களைப்

பௌதிக காரணங்கள் எவற்றையும் கொண்டு அவர்களால் விளக்க முடியவில்லை. ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப் பௌதிக சக்தி மாறுவதற்குப் பல காரணங்கள் உண்டு. அவைகளில் எதுவும் இந்த 'அதீத அறிவு'ப் பரீட்சையின் பலன்களுக்குப் பிரயோகமாகாது.

மனத்தின் சக்திகளைக் காலம் பாதிக்குமா என்பதையும் சோதித்தோம். இது நமது நாலாவது படி.

பின்னால் நடக்கப் போவதை முன்னாலேயே கண்டு சொல்லக் கூடிய மகா ஆச்சரியமான சக்தி மனிதனுக்கு இருப்பது உண்மையா, இல்லையா? மகான்கள் இப்படித் தீர்க்க தரிசனமாகப் பின்வரும் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே சொல்லியது கேட்டு, எல்லாக் காலத்திலும் மக்கள் பிரமித்துப் போயிருக்கிறார்கள். ஆனால், அடுத்து வரப்போகும் நிகழ்ச்சிகளைச் சாதாரண மக்களுங்கூட இப்படி முன்னதாகவே கண்டுகொண்டதற்குப் பல உதாரணங்கள் உண்டு. பிரயாணம் செய்யப்போகிற ஒரு மனிதன், கப்பல் கவிழ்ந்ததாகவோ வேறு விபத்து நேர்ந்ததாகவோ கனுக் காண்கிறான்; வரப்போகும் ஆபத்துப்பற்றி வர்ணிக்க முடியாத ஏதோ ஓர் உணர்ச்சி அவன் மனத்திலே உண்டாகிறது. இந்த உணர்ச்சியும் கனுவும் பின் நிகழ்ச்சிகளால் ஊர்ஜிதமாகிவிடுகின்றன. இந்த மாதிரி அநேகம் பேருக்கு நிகழ்ந்திருக்கிறது. ஆனால், இவை பற்றிய சாட்சியமும் வியாக்கியானமும் பிற அம்சங்களும் சரியாக இருப்பதில்லை; அதனால் இவற்றைக் குறித்துத் திட்டமாகத் தீர்மானிக்க முடியவில்லை. என்றாலும், இவை அடிக்கடி நிகழ்கின்றன. ஆகவே, பின் வருவதை முன்னால் உணரும் உணர்ச்சி பற்றி ஆராய்வதற்கு நியாயம் இருக்கிறது. டியூக் யுனிவர்ஸிடி 1933-ஆம் வருஷம் இந்த ஆராய்ச்சியைத் தொடங்குவதற்கு முன்பு, 'தீர்க்க தரிசனம்' பற்றி முறையாக வேறு எந்த ஆராய்ச்சியும் நடந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

பின் நிகழ்ச்சியை முன்னால் காண்பது அசாத்தியம் என்றுதான் சாதாரணமாய்த் தோன்றுகிறது. ஆனால், ஸயின்ஸுக்கு அசாத்தியம் என்பது எதுவும் இல்லை; சாட்சியத்தைக் கொண்டே சித்தாந்தத்தை வகுக்க வேண்டும். எந்த விஷயம் குறித்தாவது கிடைக்கும் சாட்சியம் மிகவும் பலமாக இருந்தால், நூதனமாய்க் கண்டு கொண்ட அந்த விஷயத்துக்கும் இடம் கொடுக்கும் முறையில் நம் அறிவையும் சித்தாந்தத்தையும் மாற்றிக்கொண்டாக வேண்டும். தீர்க்க தரிசனம் என்பது உண்டு என்று ருஜுவாகிவிட்டால் அதை அங்கீகரிக்கும் முறையில் ஸயின்ஸ் மாறியாக வேண்டும்.

முதல்முதலில் நாங்கள் இந்தப் பரீட்சை நடத்தியபோது, சீட்டுக்களைக் கலைத்துப் போடு முன், அவை எந்த வரிசையில் விழும் என்பதை முன்னதாகவே சொல்லும்படி, பலரைக் கேட்டோம். 4,500 தடவைகள் இப்படிப் பரீட்சை நடத்தினோம். அதில் கிடைத்த பலன்கள், முற்றும் 'சான்ஸ்' ஆகவே இருந்திருக்குமானால், 4 லட்சத்துக்கு ஒரு தடவைதான் கிடைத்திருக்க முடியும். 'தீர்க்க தரிசனம்' என்பது உண்டு என்பதை இந்தப் பலன்களே ஓரளவுக்கு ருசுப்பித்துவிட்டன.

திட்டமான பலன்கள் கிடைத்ததும், பரீட்சையில் ஏதாவது குறை இருக்குமோ என்று ஆராய்ந்தோம். சீட்டுக்களைக் கையால் கலைத்துப்போடாமல், யந்திரத்தால் கலைத்துப் போட்டோம். இப்படி நாலு இடத்தில் தனித்தனியாக வெவ்வேறு பரீட்சாதிகாரியின் மேற்பார்வையில் மறுபடியும் பல பரீட்சைகள் நடத்தினோம். இப்போதும் ஆச்சரியப்படத்தக்க பலன்கள் கிடைத்தன. 'தீர்க்க தரிசனம்' சாத்தியம் என்பது மேலும் ஊர்ஜிதமாயிற்று.

ஆனால், பரீட்சை கொடுப்பவர் அல்லது பரீட்சாதிகாரியின் மனமே ஒருவேளை யந்திரத்தை ஆட்டிவைக்குமோ? அதாவது 'மானஸ சலன' (ஸைக்கோ கினெடிக்) சக்தி ஏதாவது இருக்குமோ? இப்படி ஒரு சந்தேகம் வந்தது.

ஜடவஸ்துக்களை ஆட்டிவைக்கும் ஏதாவது சக்தி நமது மனத்துக்கு இருக்கலாம். நாங்கள் நடத்துவது போன்ற பரீட்சையில், இந்த அபிப்பிராயத்தை அலட்சியம் செய்ய முடியாது. உண்மையைச் சொன்னால், மனத்துக்கு இப்பேர்ப்பட்ட சக்தி இருப்பது சாத்தியம் என்று டியூக் யுனிவர்ஸிடி பரீட்சையில் இப்போதே விளங்கியிருக்கிறது. அதைப் பின்னால் சொல்லுகிறேன். இந்தச் சக்திக்கு இடமில்லாமல் எங்கள் 'தீர்க்க தரிசன'ப் பரீட்சையில் முன்னெச்சரிக்கை எடுத்துக்கொள்வது அவசியமாயிற்று.

சீட்டைக் கலைத்துப் போடும் மெஷினைத்தானே மனம் ஆட்டிவைக்கலாம்? அந்த மெஷினுக்குப் பதிலாக, அன்றன்று கால நிலை பற்றிப் பிரசுரமாகும் புள்ளி விவரங்களையே ஆதாரமாகக் கொள்வது என்று தீர்மானித்தோம். இன்ன எண் இன்ன குறியைக் குறிக்கும் என்று சங்கேதம் ஏற்படுத்திக்கொண்டோம். இதில் 'சான்ஸு'க்கோ மனிதசக்திக்கோ இடமில்லை. ஒருவேளை கால நிலையையும் 'மானஸ சலன' சக்தி ஆட்டிவைக்குமானால்தான் இது தவறலாம்.

இந்த ஏற்பாட்டுடன் ஒரு சகாவும் நானும் தொடர்ச்சியாக இரண்டு பரீட்சைகள் நடத்தினோம். இரண்டிலும் கிடைத்த பலன்கள் ஆச்சரியப்படத்தக்கவை. இதுவரைக்கும் நாங்கள் செய்துள்ள பரீட்சைகளிலிருந்து 'தீர்க்க தரிசனம்' சாத்தியம் என்பதற்குப் பலமான சாட்சியம் கிடைத்திருக்கிறது.

'தீர்க்க தரிசனம்' உண்டு என்று நிரூபணமாகிவிட்டால், இது எங்கே போய் முடியும் என்று யாரும் சொல்லமுடியாது. 'தீர்க்கதரிசனம்' உண்டு என்றால், நம் கருத்துக்கள் எல்லாவற்றையுமே அடியோடு மாற்றிக்கொண்டாகவேண்டும். 'தீர்க்க தரிசனம்' என்பது, ஸயின்ஸுக்கு முற்றும் அந்நியமானது. ஆனால், ஞாபக சக்தி பற்றியுந்தான் இதுவரைக்கும் நாம் முழுவதும் உணர்ந்துகொள்ளவில்லை. மனம், சென்ற காலத்துக்குத் தாவுவது ஞாபகசக்தி; வருங்காலத்துக்குத் தாவுவது தீர்க்க தரிசனம். அதைவிட இதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை.

பௌதிக சாதனங்கள் இல்லாமலே ஜட வஸ்துக்களை மனம் ஆட்டிவைக்க முடியுமா என்று ஆராய்ந்தோம். இது நமது ஐந்தாவது படி.

திறந்த மனத்துடன் பின்வரும் விஷயங்களை நாம் கவனிக்க வேண்டும். அவை 'மானஸ சலன

சக்தி' (ஸைக்கோ கினெஸிஸ் - சுருக்கம் 'பி. கே.') ஆராய்ச்சி பற்றியவை. ஜட வஸ்துக்களின் இயக்கத்தை மனம் நேரே பாதிக்குமா என்பதே கேள்வி. இதற்காகச் சொக்கட்டான் காய்களை உருட்டி அந்தப் பரீட்சைகளை நடத்தினேம்.

'சொக்கட்டான் காய்களை நம் இஷ்டப்படி விழச் செய்வதற்குக் கைலாகவமோ தந்திரமோ தேவையில்லை; மனத்திலே உறுதியாக எண்ணுவதன் மூலமே இப்படி விழச் செய்யலாம்' என்றும், இது தங்களால் முடியும் என்றும் அநேகம் பேர் நம்புகிருர்கள். இந்த நம்பிக்கை சரியா, தவரு என்று சோதித்துப் பார்க்கத் தீர்மானித்தோம்.

நாங்கள் நடத்திய முக்கியமான 'மானஸ சலன' சோதனைகளில் ஒன்று இது: சொக்கட்டான் காய்களில் ஏழு என்ற விருத்தம் விழ வேண்டும் என்று நாம் விரும்புவதாக வைத்துக்கொள்வோம். பரீட்சை கொடுப்பவர் இந்தக் காய்களை ஒரு குவளையில் போட்டுக் குலுக்குவார். பிறகு, ஒரு மேஜையின் மேல் அவைகளைப் போடுவார். 6+1, 5+2, 4+3 இப்படி 7 ஆக விழும் விருத்தங்கள் எல்லாவற்றையும் ஒரு காகிதத்தில் நாம் குறித்துக்கொள்வோம். மொத்தம் 12 தடவை காய்களை அவர் குலுக்கிப் போட்டால், இரண்டு தடவை ஏழு விருத்தம் விழலாம். இது தான் முற்றும் சமாசரி 'சான்ஸ்' விகிதம்.

இந்தச் சோதனையில், முதலில் காய்களைக் கையாலேயே குலுக்கச் சொன்னேம். பிறகு, ஒரு குவளையில் போட்டுக் குலுக்கச் சொன்னேம். அதற்கப்புறம் குவளையின் உட்புறத்தைக் கரடு முரடாகச் செய்தோம்; மேஜையின் மேற்புறத்திலும் விசேஷ மாறுதல்கள் செய்தோம். கடைசியில் யந்திரங்களைக் கொண்டு குலுக்கச் செய்தோம்; அதிலும் பலவிதமான கட்டுத் திட்டங்களை ஏற்படுத்தினேம்.

இந்த 'மானஸ சலன' சோதனையில் கிடைத்த பலன்கள் ஆரம்பத்திலிருந்தே 'சான்ஸ்' விகிதத்தை விட அதிகமாயிருந்தன. ஆனல், ஆச்சரிய மூட்டத்தக்க அளவு அதிகமாக இல்லை; 'அதீத அறிவு'ச் சோதனையில் கிடைத்ததைப் போல் உயர்ந்த விகிதமாகவும் இல்லை. ஆனல், ஓரளவு வெற்றி பெற்றவரின் எண்ணிக்கை விகிதம் மட்டும், 'அதீத அறிவு'ச் சோதனையை விடச் சொக்கட்டான் காய்ச் சோதனையில் அதிகமாயிருந்தது.

இதற்கு அடுத்தாற்போல் வேறு சிலரையும் பரீட்சித்தோம். அதிலும் இதே போன்ற பலன்கள் கிடைத்தன.

ஒருவர் வனபரிபாலனக் கல்வியில் பட்டம் பெற்ற பிராங்க் ஸ்மித்; மற்ருெருவர் நகர எஞ்சினீர் ஈ. பி. கிப்ஸன்; இன்னெருவர், டியூக் யுனிவர்ஸிடியின் புரொபஸர் மக்டகல்; வேருெருவர் வேன் யுனிவர்ஸிடியின் மனத்தத்துவ சாஸ்திரி எச். எல். பிரிக். இவர்களையும், டியூக் யுனிவர்ஸிடியிலும் வெளியிலும் உள்ள வேறு பலரையும் 'மானஸ சலன' பரீட்சைகள் செய்தோம். மொத்தமாகக் கிடைத்த பலன்கள் பிரமிக்கத் தக்கவாறு இருந்தன.

லட்சக்கணக்கான பரீட்சைகள் நடத்தினேம்; அதிலிருந்து, மனத்துக்கு ஜடப் பொருளை ஆட்டிவைக்

கும் சக்தி உண்டு என்று கண்டோம். 'மானஸ சலன சக்தி' என்பது என்னவோ? அதன் செயல்கள் யாவையோ? அவை எப்படியானாலும், புள்ளி விவர ரீதியாக அந்தச் சக்தியை அளக்க முடிகிறது. ஜடத்தை அது ஆட்டிவைக்கிறது. அப்படி ஆட்டி வைக்கும் அளவு சிறிதுதான்; அது ஒரே நிதானமாகவும் இல்லை. ஆனால், அது தெளிவாய்த் தெரிகிறது. பௌதிக சாஸ்திர சக்தி, அல்லது உண்மை எதையும் கொண்டு அதை விளக்க முடியவில்லை. என்றாலும், எங்கெல்லாம் வேலை நடக்கிறதோ அங்கெல்லாம் செயல் சக்தி (எனெர்ஜி) இருக்கிறது என்று நாம் மதிக்கத்தான் வேண்டும். சொக்கட்டான் காய்களை எறியும் போது, நமக்குப் பழக்கமான சக்திகள்தான் அவற்றை எறிகின்றன. ஆனால், அவற்றைத் தவிர, அந்நியமான வேறு ஏதோ ஒரு சக்தியும் அப்போது அந்தக் காய்களின்மீது வேலை செய்கிறது என்பதை, 'மானஸ சலன' பரீட்சைகள் நிரூபித்துவிட்டன. ஆகவே, பௌதிகச் செயலாக மாற்றிவிடக்கூடிய ஒரு மூல சக்தி - மனச் சக்தி - இருக்கத்தான் வேண்டும்.

ஆனால் இது பௌதிக ரீதியாக நடக்கும் ஒரு காரியந்தானே? மூளை தன் பௌதிக சக்தியைக்கொண்டு காய்களை ஆட்டிவைக்கிறதா? அல்லது நமக்குப் புரியாத மர்மமான மனச்சக்தி ஒன்று ஜடப் பொருள்களை நேரே ஆட்டி வைக்கிறதா? இதற்குப் பதில் வேண்டுமானால், தன் மூளை எந்த உலகத்தைச் சேர்ந்ததோ அந்த ஜட உலகத்தின்மீது மனம் எந்த அளவுக்குத் தாவக்கூடும் என்பதைக் கண்டு பிடிக்கவேண்டும். மூளையை ஒதுக்கி விட்டு, தானே நேரில் சொக்கட்டான் காய்களை மனம் ஆட்டிவைக்குமானால், ஜட உலகின்மீது மனத்துக்குள்ள ஆதிக்கம் இதுவரைக்கும் நாம் நினைத்திருந்ததைவிட மிகவும் மகத்தானது என்று நிச்சயமாகிவிடும். இப்போது நமது கேள்வி இதுதான்: நாம் கைக்கொண்ட 'மானஸ சலன' பரீட்சையில் கிடைத்த பலன்கள், பௌதிக இயல்புகளால் விளைந்தவையா? வேறா?

அதிருஷ்டவசமாக, 'மானஸ சலன' பரீட்சைகள், இந்தப் பிரச்னைக்குப் பதில் காண மிகவும் பொருத்தமானவை. அதற்கு ஒரே ஒரு காரியந்தான் தேவை: அதாவது பௌதிக ரீதியான நிலைமைகளைப் பலவிதமாக மாற்றி மாற்றி அதனால் கிடைக்கும் புள்ளிவிவரப் பலன்களை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்; அவ்வளவுதான். பௌதிக ரீதியான நிலைமைகள் மாறும்போதெல்லாம் அதற்கேற்றவாறு வெற்றியின் அளவும் மாறுமானால், பலன்கள் பௌதிக இயல்புகளால் விளைந்தவையே என்று முடிவு செய்யலாம்; புள்ளி விவரப் பலன் விகிதம் அப்படி மாறவில்லையென்றால், அதை விளைவித்த மூலசக்தி இதுவரைக்கும் நமக்குத் தெரிந்த எந்தப் பௌதிக சக்தியையும் போன்றது அல்ல என்றுதான் நிரூபணமாகும்.

வெகு சீக்கிரத்திலே இந்த விஷயம் தெளிவாகிவிட்டது. காய்களை உருட்டுகிறவனின் ஊக்கம், உற்சாகம், பரபரப்பு இவையே புள்ளி விவரப் பலன்களை ஆட்டிவைத்தன; பௌதிக இயக்கங்கள்பற்றிய விஞ்ஞான ரீதியான காரணங்கள் அல்ல. காய்களை உருட்டுகிறவன் எவ்வளவுக்கெவ்வளவு பரபரப்படைகிறானோ, எவ்வளவுக்கெவ்வளவு ஆர்வம் கொள்

கிறுனே, அவ்வளவுக் கவ்வளவு காய்களை அவன் ஆட்டி வைக்க முடியும்.

வெவ்வேறு பருமன் உள்ள காய்களைக்கூட உபயோகித்துப் பார்த்தோம். 'மானஸ சலன' சக்தி எதுவாக இருந்தாலும், பூமியின் ஆகர்ஷண சக்தியுடன் போட்டியிட்டுத்தானே ஆகவேண்டும்? காய்கள் விழுவதை இரண்டு சக்திகளும் சேர்ந்தே ஆட்டிவைக்கின்றன. பூமியின் ஆகர்ஷண சக்தி என்பது காய்களின் நிறை. அந்த நிறை என்னவாக இருந்தாலும், அது நமது பரீட்சையின் புள்ளி விவரப் பலன்களைப் பாதிக்கவில்லை.

தூரத்தை மாற்றியும் பரீட்சித்தோம். மூல சக்தி பௌதிக ரீதியானது அல்ல என்றே அதிலும் ஏற்பட்டது. டியூக் யுனிவர்ஸிடி பரீட்சை ஒன்றில் பரீட்சை கொடுப்பவரைக் காய்களுக்கு 25 அடி தூரத்தில் பிரித்து வைத்தோம். அங்கிருந்தபடியே அவர் ஒரு கயிற்றைப் பிடித்து இழுப்பார். அதில் பிணைத்த குவளை கவிழ்ந்து, காய்கள் தாமாக ஆகர்ஷண சக்தியால் கீழே விழும். இதில் கிடைத்த பலன்களும் முன் போலவே இருந்தன.

'மானஸ சலன' சக்தி பௌதிக ரீதியானது அல்ல என்பதில் சந்தேகமில்லை; அது பிரத்தியட்சமாய் ருசுவாகிவிட்டது. 'மானஸ சலன' பரீட்சைகளின் பலன்கள், யந்திர சாஸ்திர சம்பந்தமான நியதிகளைப் பின்பற்றவில்லை. புத்திசாலித்தனமாகத் திட்டமிட்டுச் செலுத்தினுல், பௌதிக வஸ்துக்களை 'மானஸ சலன' சக்தி ஆட்டி வைக்கிறது. ஆனுல், அப்படி ஆட்டி வைக்கும் காரியம் ஒரே நிதானமாக இல்லை என்பதுமட்டும் உண்மை.

சொக்கட்டான் காய்களை ஆட்டி வைப்பது பௌதிக சக்தியுடைய மூளை அல்ல; பௌதிக இயல்பு இல்லாத மனமே ஆட்டி வைக்கிறது!

இந்த மகத்தான உண்மையைப் பார்க்கும்போது, நமக்குப் பலமான பல வித ஸந்தேகங்கள் எழுகின்றன. இதன் பலனுக நம் கருத்துக்களை எவ்வளவு தூரம் மாற்றிக்கொள்ள வேண்டும்? கிடைத்த பலன்கள் எவ்வளவு சொற்பமாக இருந்தாலும் சரிதான்; பௌதிக இயல்பை மிஞ்சிச் செல்கிறது 'மானஸ சலனம்' என்பது நிச்சயம். அப்படியானுல் 'மானஸ சலனம்' எந்த விதிகளைப் பின்பற்றியது? அதன் வரம்புகள் எவை? உருவம், நிறை, எண், தூரம், பரிமாணம் இவையெல்லாம் அதைப் பாதிக்கவில்லை யென்றுல், வேறு எது அதைப் பாதிக்கும்? இந்த விஷயங்களையெல்லாம் இனி ஆராய வேண்டும்.

ஒரு விஷயம் மட்டும் தெளிவு: புலன்களின் உதவி இல்லாமலே காணக்கூடிய 'அதீத மனச்' சக்தியும், 'மானஸ சலன' சக்தியும் ஒரு விதத்தில் ஒன்றே; அடிப்படையில் ஒன்றுன ஒரு சக்தியின் இரண்டு விதத் தோற்றங்களே அவை என்று தான் சகல சாட்சியங்களிலிருந்தும் தெரிகிறது. இதுவரைக்கும் நமக்குத் தெரிந்த பௌதிக நியதிகள் எவையும் இரண்டில் எதற்கும் பிரயோகமாகவில்லை. ஒன்றைப் பாதிக்கும் எந்த நிலைமையும் மற்றதையும் பாதிக்கிறது.

"மானஸ சலன சக்தி, அதீத மனச் சக்தி இரண்டும் எனக்கு இந்த அளவுக்கு இருக்கிறது; யார் கேட்கிறபோதும் அதை நிச்சயமாய் நிரூபித்துக் காட்டுவேன்" என்று எவராலும் சொல்ல முடியாது; இது உண்மை. ஒருவர் ஒரு

சமயம் கொடுக்கும் பரீட்சையில் நல்ல வெற்றி பெறலாம்; மறு சமயம் அதே நிலைமைகளில் நடக்கும் ஒரு பரீட்சையில் தோல்வி அடையலாம்.

பரீட்சை கொடுப்பவரின் கவனத்தைச் சிதற அடிக்கும் விஷயங்கள் எவையேனும் நேர்ந்தால் 'அதீத மனம்', 'மானஸ சலனம்' இரண்டு பற்றிய சோதனைகளிலுமே அவருடைய வெற்றி குறைகிறது. டியூக் யுனிவர்ஸிடியில் ஆரம்பத்தில் நடந்த சோதனைகளின்போது யாராவது அந்நியர் வந்து பார்த்துக்கொண்டிருந்த போதெல்லாம், பரீட்சை கொடுப்பவரின் வெற்றி, 'சான்ஸ்' விகிதத்துக்கும் கீழே போய்விட்டது. அந்நியர் வந்து வந்து பழகிப் போன பிறகு, அது மீண்டும் பழைய விகிதத்துக்கு உயர்ந்தது.

டியூக் யுனிவர்ஸிடியில் பட்டம் பெறப் படிக்கும் ஒரு மாணாக்கன் 'அதீத மனப்' பரீட்சையில் சிறந்த வெற்றி பெற்றவன். அவனிடம் 'கவனச் சிதைவு'ப் பரீட்சை நடத்தினேம். அதில் சில அபூர்வ உண்மைகள் வெளியாயின. ஒரே ஒருவர் மாத்திரம் பார்த்துக்கொண்டிருக்க, அவன் பல தடவைகள் சொக்கட்டான் காய்களை விட்டெறிந்தான். அப்போது அவன் பெற்ற வெற்றி, 'சான்ஸ்' விகிதத்தைவிட அதிகமாக இருந்தது. அதற்குப் பிறகு அவனுடைய தோழனை மற்றொரு மாணாக்கன் அவனுக்குப் பக்கத்திலே இருந்துகொண்டு அவனுடைய கவனத்தைச் சிதைத்து நம்பிக்கையையும் குலைத்தான். இதனல் அவன் வெற்றியின் அளவு அடியோடு குறைந்தது. அது 'சான்ஸ்' விகிதத்தில் வந்துகூட நிற்கவில்லை; அதற்கும் கீழே போய் விட்டது.

இது சம்பந்தமாக மற்றொரு பரீட்சையும் நடத்தினேம். பரீட்சை கொடுப்பவனுக்குத் தூக்க மருந்தைக் கொடுத்தோம். ஆனால், நன்றாய்த் தூக்கம் வரக்கூடிய அளவுக்குக் கொடுக்கவில்லை. இப்போது 'சான்ஸ்' விகிதத்துக்கு மேலே அவன் வெற்றிபெற முடியவில்லை. அந்தத் தூக்க மயக்கத்தை மாற்றும் காபீன் சத்தைக் கொடுத்தோம். உடனே பழையபடி 'சான்ஸ்' விகிதத்துக்கு மேலே தனக்கு வழக்கமான அளவு அவன் வெற்றி பெற்றான். 'மானஸ சலன' பரீட்சையில் போலவே, 'அதீத மன'ப் பரீட்சையிலும் இந்த மருந்துகளைக் கொடுத்துப் பார்த்தோம். அதிலும் இதே மாதிரி பலன்கள் கிடைத்தன.

இப்படியாக, கவனச் சிதைவும் மனமயக்கமும் 'மானஸ சலன சக்தி', 'அதீதமனச் சக்தி' இரண்டையும் பாதிக்கின்றன. இதற்கு எதிரிடையாக மனத்தின் ஊக்கம், தியானம் இரண்டினுலும் அதியாச்சரியமான பலன்கள் சில சமயம் கிடைக்கின்றன.

நான் எழுதியுள்ள 'மனத்தின் புதிய எல்லைகள்' என்ற புத்தகத்தில் பியர்ஸ் என்பவன் 'அதீத மன'ச் சோதனையில் ஒரு கட்டின் 25 சீட்டுக்களையும் சரியாக அடையாளம் சொன்னன் என்று சொல்லியிருக்கிறேன். அவன் ஒவ்வொரு சீட்டையும் அடையாளம் சொல்லும்போது, "அடுத்த சீட்டைச் சரியாகச் சொல்ல மாட்டாய்; அதற்கு இன்ன பந்தயம் வைக்கிறோம்" என்று சொன்னேம். இதனல் அவன் மிகவும் பரபரப்புற்று ஊக்கம் கொண்டான். அவனுடைய ஊக்கத்தைத்

தூண்டிவிடவே இந்தப் பந்தயம். இது மந்திர சக்திபோல் வேலை செய்தது. ஆனால், அந்த ஊக்கம் தன்னிச்சையாக உண்டாக வேண்டும். இப்படித் தூண்டுவது திரும்பத் திரும்ப வழக்கமாகிவிட்டால், அது பலிப்பதில்லை.

வில்லியன் என்பவளைப் பரீட்சித்தது மற்றோர் உதாரணம். அந்தப் பெண்ணுக்கு ஒன்பதே வயது. 'அதீத மனச் சோதனை'யில் பரீட்சை கொடுத்த பல குழந்தைகளில் ஒருத்தி அவள். ஒரு கட்டின் சீட்டுகள் 25 ஐயும் சரியாகச் சொன்னால் அரை டாலரும் அதற்குக் குறைந்த வெற்றி விகிதங்களுக்குக் கற்கண்டும் பரிசு கொடுப்பதாகச் சொன்னோம். வில்லியன் மிகவும் ஊக்கமுள்ள பெண். கட்டாயம் அரை டாலர் பரிசை வாங்கிவிடுவது என்று சங்கல்பம் செய்துகொண்டாள். அதைப்பற்றி ஆற அமரச் சிந்தித்துவிட்டு, வாத்தியாருக்கு ஒரு கடிதமும் எழுதினாள். அடுத்த தடவை நடந்த இந்தப் பரீட்சையில் அவள் முறை வந்தது. அப்போது, "இதோ பாருங்கள்; யாரும் ஒன்றும் சொல்லாதீர்கள். நான் ஒரு வேலை செய்யப் போகிறேன்" என்றாள்.

பரீட்சாதிகாரிக்கு முதுகைக் காட்டி நின்றுகொண்டு, தன் கண்களை மூடிச் சிறிதுநேரம் என்னவோ தியானம் செய்தாள். பிறகு திரும்பிப் பரீட்சை கொடுத்தாள். அப்போது அவள் என்னவோ தனக்குத்தானே பேசிக் கொள்வது போல உதடுகள் அசைந்துகொண்டிருந்தன. "என்ன சொல்லிக்கொண்டிருக்கிறாய்?" என்று நாங்கள் கேட்டதற்கு, "இருபத்தைந்தையும் சரியாகச் சொல்லிவிட வேண்டும் என்ற என் ஆசையைத் தான் சதா ஜபித்துக்கொண்டிருக்கிறேன்" என்றாள் சிறுமி.

அப்படியே சொல்லிவிட்டாள்!

பரிசைப் பெறவேண்டும் என்ற ஆசையால் அவளுடைய கவனம் மிகவும் எழுச்சி கொண்டது. கவன சக்தியின் வெற்றிக்கு இந்தச் சிறுமியின் பரீட்சை மிகச் சிறந்த உதாரணமாகும்.

'அதீத மனச் சக்தி', 'மானஸ சலன சக்தி' இரண்டும் மனிதர்களின் மனத்தில் அமைந்திருக்கும் ஓர் அம்சம் என்பது இப்போது நிரூபணம் ஆகிவிட்டது. ஆனால், இந்த அம்சம் சகஜமாக எல்லார் மனத்திலும் இருப்பதா? அல்லது அபூர்வமாக எவரோ சிலர் மனத்தில் மாத்திரமே தென்படும் இயற்கை விசித்திரமா?

சகஜமாக எல்லாரைப் போலும் இல்லாமல் அறிவில் குறைந்த சிலரிடம் பரீட்சை நடத்தியதில், அவர்களுக்கு 'அதீத மனச் சக்தி' குறைவாக இருப்பதைக் கண்டோம். ஆகவே, அறிவுக் கூர்மைக்கும் 'அதீத மனச் சக்தி'க்கும் தொடர்பு இருப்பதாகத்தான் தோன்றுகிறது. ஆனால், 'அதீத மன - மானஸ சலன' சக்திகள் சகஜமாக எல்லார் மனத்திலும் உள்ள ஓர் அம்சமே என்பதை நிரூபிக்க இன்னும் சில பரீட்சைகள் பாக்கியிருக்கின்றன. அவை புதியவை; சோதனைக்கூடத்துக்குள்ளேயே நடந்துகொண்டிருக்கின்றன; வெளியில் உள்ளவருக்கு இன்னும் தெரிவிக்கவில்லை. பரீட்சாதிகாரிகள் பூர்வாங்கமாகக் கண்ட முடிவுகளிலிருந்து அந்த இரண்டு சக்திகளும் சகஜமாக எல்லார் மனத்திலும் இருப்பவை என்றே நினைக்கவேண்டியிருக்கிறது.

இந்த முடிவுகளைப் பொதுவாக எல்லா விஞ்ஞானிகளும் ஒப்புக் கொள்ளுகிறார்களா? இல்லை. தனிப்பட்ட பல விஞ்ஞானிகள் ஒப்புக் கொள்ளுகிறார்கள்; ஆனால், எல்லாரும் ஒப்புக்கொள்ளவில்லை. காலக் கிரமத்தில் ஒப்புக்கொண்டு விடுவார்கள் என்றே நம்புகிறேன். ஏனென்றால், வேறு வழியில்லை.

மிக்க உறுதியோடும் தைரியமாகவுமே இதைச் சொல்லுகிறேன். சென்ற 12 வருஷகாலமாக 'அதீத மன'ப் பரீட்சைபற்றி எழுதி வருகிறேன். இத்தனை நாளும் இவ்வளவு உறுதியாகவும் தைரியமாகவும் நான் சொன்னதில்லை. இப்போது இதற்குப் பக்கபலமாகப் பல பரீட்சைகள் நடந்து, பலத்த ஆதரவு கிடைத்திருக்கிறது; முடிவுகளை அறிந்தவர்களுக்கு அது உறுதியான நம்பிக்கை தந்திருக்கிறது. இத்தனை காலமாக இந்தப் பரீட்சைகளில் துளியும் குற்றங் குறைகளுக்கு இடம் இல்லாமல் அலசி ஆராய்ந்து, ஒவ்வொரு குறையையும் நீக்கி, எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் சமாதானம் கண்டிருக்கிறோம்.

அமெரிக்கக் கணித சாஸ்திரப் புள்ளி விவர வருஷாந்த மகாநாடு ஒன்றில் பகிரங்கமாகப் பின்வரும் அறிக்கையை வெளியிட்டார்கள்:

"டாக்டர் ரைன் அவர்களுடைய ஆராய்ச்சிகளில் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன: ஒன்று, சோதனை; மற்றது, புள்ளி விவரம். சோதனை சம்பந்தப்பட்டமட்டில் கணித சாஸ்திரிகள் அபிப்பிராயம் சொல்ல முடியாது. புள்ளி விவரங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் சமீபத்தில் கணிதசாஸ்திரிகள் ஒரு விஷயத்தை ஸ்தாபித்துவிட்டார்கள்; அதாவது, சோதனைகள்மட்டும் ஒழுங்காக நடந்திருக்குமானால் புள்ளி விவரத்தால் கிடைத்த முடிவுகள் உண்மையேயாகும். ரைன் அவர்களுடைய பரீட்சைகளைத் தாக்குவதானால், கணித சாஸ்திர ரீதியாக முடியாது; வேறு ரீதியில் வேண்டுமானால் முடியலாம்."

அதற்குப் பிறகு, கேம்பிரிட்ஜ் யுனிவர்ஸிடியின் மனத்தத்துவப் புரொபஸர் தூலெஸ், ஒன்று கூறியிருக்கிறார். புலன்களின் உதவி இல்லாமல் பொருள்களைக் காணக் கூடிய மனச் சக்திபற்றி அவர் சொன்னது இது: "இந்தச் சக்தி உண்டு என்பது ஸயின்ஸ் ரீதியாக நிச்சயமாக நிரூபணமாகி விட்டது என்றே கொள்ள வேண்டும். சந்தேகாத்மாக்களுக்குத் திருப்தி உண்டாக்க இனி நாம் முயல வேண்டியதில்லை; இந்தச் சக்தி பற்றிய உண்மைகளை யெல்லாம் - இதன் இயல்பையெல்லாம் - அறிந்துகொள்ளத்தான் முயல வேண்டும். அப்படி அறிந்துகொண்டால், இதுபற்றிய அவநம்பிக்கை தானாகவே நலிந்துவிடும்."

இப்பேர்ப்பட்ட சாட்சியங்களை எல்லா விஞ்ஞானிகளும் உடனே ஏன் ஏற்றுக்கொள்ளவில்லை? அதற்குத் தர்க்க ரீதியான காரணம் ஒன்றும் இல்லை; மனோபாவந்தான் காரணம் என்று நினைக்கிறேன்.

அவர்கள் பயப்படுகிறார்கள். முதலாவதாக, பௌதிக தத்துவங்களுடன் இசையாத ஒரு விஷயத்தை ஒப்புக்கொள்ளப் பயம். அபௌதிகமான ஒரு செயலை ஒப்புக்கொண்டால், பிரபஞ்சத்தை இரு கூறாகப் பிரித்து, இரண்டு வித உண்மைகளை அங்கீகரிக்க வேண்டி வரும். அப்படி அங்கீகரித்தால், பழையபடி அமானுஷ்ய சக்தியை நம்பும் மூடநம்பிக்கையில் அல்லவா போய் முடியும்?

இயற்கையின் மின்காந்த (எலெக்ட்ரோ - மாக்னெடிக்) தத்துவங்களில் இந்த 'அதீத மன - மானஸ சலன' ஆராய்ச்சிகள் பொருந்துமோ என்ற தப்பபிப்பிராயத்துடன் சில விஞ்ஞானிகள் இவைகளை ஆராய்ந்தார்கள். ஆனால், சோதனையில் கிடைத்த பலன்கள், பௌதிக தத்துவங்களை மிஞ்சிச் சென்றுவிட்டன. 'சுட்டி சுட்டதும் கை விட்டதும்' என்றபடி அவர்கள் இந்த ஆராய்ச்சிகளையே விட்டுவிட்டார்கள். வேடிக்கைதான்!

'அதீத மனச் சக்தி', 'மானஸ சலன சக்தி' ஆகிய இரண்டும் இரட்டை அம்சங்கள் என்று நினைத்ததே அவர்கள் தவறு. மனம், தேகம் இரண்டும் ஒன்றை ஒன்று ஆட்டிவைப்பதால், இரண்டும் ஓரளவு ஒன்றாய் இணைந்துவிடுகின்றன. இரண்டு தத்துவங்கள் பரஸ்பரம் பாதித்துக்கொள்ளுமானால், அவை இரண்டுக்கும் பொதுவான சில குணாதிசயங்கள் இருந்தாக வேண்டும். ஆகவே, இரண்டு சக்திகளையும் இரட்டை அம்சங்களாக மதிக்காமல், இரண்டும் ஒரே அம்சம் என்று நாம் முடிவு செய்துகொள்ளுவதே பத்திரமான வழி.

விஞ்ஞானிகளின் இரண்டாவது பயம் சமூக ரீதியானது; தொழிலிலே தங்கள் அந்தஸ்துக்குக் குறைவு நேர்ந்துவிடுமோ என்ற பயம். 'அதீத மன', 'மானஸ சலன' பரீட்சைகளை அநேக விஞ்ஞானிகள் ரகசியமாய் நடத்திப் பார்த்திருக்கிறார்கள். அவர்கள் நடத்திய சில பரீட்சைகள் வெற்றிகரமாக நடந்து மதிப்பரிய பலன்களைத் தந்ததாகவும் சில சமயம் கேள்விப்படுகிறோம். ஆனால்,"தொழில் ரீதியான காரணங்களால், அறிக்கை எதுவும் நாங்கள் வெளியிடப்போவதில்லை" என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள்.

இப்படிப் பரீட்சை செய்த விஞ்ஞானிகளில் ஒருவர், "என் குடும்பம் ஜீவிக்க வேண்டாமா?" என்று கேட்டார்.

"நான் வேலை பார்க்கும் ஸ்தாபனம் ஆட்சேபிக்குமே; என் இலாகாவைச் சேர்ந்த ஒவ்வோர் அங்கத்தினரும் என்னைக் குறை கூறுவார்களே! எனக்கோ சேர்மன் பதவி கூடக் கிடைக்கும்போல் இருக்கிறது. அதை இழப்பதா?" என்றார் இன்னொருவர்.

என்றாலும், 'அதீத மனத்தத்துவ'த்தில் வர வர எல்லாருக்கும் சிரத்தை அதிகரித்து வருகிறது. இந்த நாட்டிலும் சரி, வெளியிலும் சரி, அநேகம் காலேஜ், யுனிவர்ஸிடி சோதனைக் கூடங்களில் இது பற்றிய பரீட்சைகள் நடந்து வருகின்றன. புலன் கடந்த மனச் சக்தி பற்றி ஆராய்ச்சி நூல் (தீஸிஸ்) எழுதுபவருக்கு, ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் உள்படப் பல யுனிவர்ஸிடிகள் சமீப வருஷங்களில் டாக்டர் பட்டம் வழங்கியிருக்கின்றன.

இப்போது கண்டுபிடித்திருக்கும் விஷயம் மிகவும் சொற்பம். இன்னும் கண்டுபிடிக்க வேண்டியது எவ்வளவோ இருக்கிறது.

மனிதனின் உண்மையான இயல்பு என்ன? இதுதான் நமது அடிப்படையான பிரச்னை. மனிதனிடம் பௌதிகத்தை மிஞ்சிய அல்லது ஆத்மிகமான அம்சம் ஏதாவது இருக்கிறதா என்பதே கேள்வி.

சோதனைகளால் கிடைத்த பதில், "ஆம்; இருக்கிறது" என்பதே. ஆத்மா உண்டு என்ற உண்மை நிரூபணமாகிவிட்டது. ஆனால், அது பற்றிய மத ரீதியான நம்பிக்கைகளை இந்த ஆராய்ச்சியில் நாம் அங்கீக

ரிக்கவில்லை; ஆத்மா உண்டு என்ற ஒரே உண்மையைத் தவிர, அது சம்பந்தமான வேறு எதையும் இது வரைக்கும் நாம் பரிசீலனை செய்ய வில்லை.

மனிதனுக்கு ஆத்மா உண்டு என்பதே சகல மதங்களுக்கும் அடிப்படையான தத்துவம். மனிதனின் உண்மை இயல்பு வெறும் பௌதிக ரீதிக்கு மேற்பட்டது என்பதற்கு இப்போது சாட்சியம் கிடைத்துவிட்டது. இது அந்தச் சகல மத அடிப்படைத் தத்துவத்துக்கு ஆதாரவாகும். பலமான மத நம்பிக்கை உடையவனுக்கு இப்படிப்பட்ட ஸயின்ஸ் ஆதரவு தேவை இல்லாமல் இருக்கலாம். ஆனால், அறிவுக்கும் மத நம்பிக்கைக்கும் ஏராளமான மக்களின் உள்ளத்தில் போராட்டம் நடக்கிறது. அவர்களுக்கெல்லாம் இந்தச் சாட்சியம் மகிழ்ச்சி அளிக்கும்.

ஆத்மா அமரத்துவம் உடையது என்ற விஷயத்தில் மதத்துக்கும் 'அதீத மனத் தத்துவ'த்துக்கும் அடிக்கடி ஒற்றுமை தென்பட்டது. சுருங்கச் சொன்னால், "மரணத்துக்குப்பின் மிஞ்சக்கூடிய எந்த அம்சமாவது மனிதனிடம் உண்டு என்பதற்குச் சாட்சியம் இருக்கிறதா?" என்பதுதான் கேள்வி.

'அதீத மனத் தத்துவ' ஆராய்ச்சிகள் இந்தக் கேள்விக்கு இப்போதே பெரிதும் பதில் அளித்துவிட்டன. தர்க்க சாஸ்திரத்தைமட்டும் நம்ப முடியுமானால், 'மரணத்துக்குப் பின்னும் மனிதனின் ஆத்மா வாழும் என்ற கொள்கையை இந்த ஆராய்ச்சிகள் முற்றும் ஸ்தாபித்துவிட்டன. காலத்தையும் வெளியையும் கடந்து 'அதீத மனச் சக்தி' செயல் புரிய முடியும் என்று கண்டோம். காலமும் வெளியும் (ஸ்பேஸ், டைம்) சேர்ந்ததே பிரபஞ்சம்; ஓரளவுக்கு அதை மிஞ்சிச் செயல் புரியக் கூடியது மனம் என்று இப்போது தெரிந்துவிட்டது. அமரத்துவம் என்றால் என்ன? காலத்தையும் வெளியையும் கடந்த சுதந்தரந் தானே? காலத்தையும் வெளியையும் இயற்கையாகக் கொண்ட இந்தப் பிரபஞ்சத்தில் மனிதனின் ஓட்டம் நின்றுவிடுவதுதான் அவன் சாவு. இதை மிஞ்சிய ஓர் அம்சம் பின்னும் வாழக்கூடும் என்பதே 'அதீத மன'ப் பரீட்சைகளிலிருந்து கிடைக்கும் தர்க்க ரீதியான முடிவு.

இன்று நாம் அணுவை அறிந்திருக்கிறோம்; அந்த அணுவை அறியும் மனத்தை அறிந்துகொள்ள வில்லை. இதை எண்ணினால் திடுக்கிட வேண்டியிருக்கிறது; ஆனால், உண்மை இதுதான். பிரபஞ்சத்தின் மூல காரணங்களான பூதங்களைப் பற்றிப் பௌதிக சாஸ்திரத்தினால் எவ்வளவு அறிந்திருக்கிறோமோ அதில் பாதி அளவாவது மனிதனின் மனத்தைப்பற்றி அறிவோமானால், மனித வாழ்க்கைக்கும் சமூகத்துக்கும் எத்தனையோ நன்மை ஏற்படும். மகா கடினமான ஒரு பிரச்னையைக்கூட ஆராய்ச்சி புரியக்கூடிய வழியை இப்போது நாம் அறிந்துவிட்டோம்.

இனி நம்மைப்பற்றியே நாம் அறிந்துகொள்வதில் நமக்கு எவ்வளவு தீவிர ஆசை உண்டு என்பது தான் கேள்வி.

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.